786

சத்தியப் பிரசாரம்

(காதியானிக் கண்டனம்)

தஞ்சை ஜில்லாவில் சுற்றுப்பிரயாணஞ் செய்து
வந்த "ஹிஸ்புல்லாஹ்"களின் அரியசேவை

இஃது
முஹம்மதுபந்தர் வாசியும், சிங்கப்பூர் ஜொஹூர்பார்
பிரபல வியாபாரியுமாகிய
கனம் உ. ரஹ்மான் சாஹிப்
அவர்களின் பொருளுதவியால்

சென்னை
...பாஜத்துல் இஸ்லாம்
...கத்தாரால் வெளியிடப்பட்டது

3
அ7
N34
171743

" ஹிபாஜத்துல் இஸ்லாம் "

உயர்ந்த செந்தமிழ் மாத சஞ்சிகை

நிச்சயமாய் அல்லாஹ்தஆலா இடத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாமேயாகும். பகுத்தறிவிற்கு ஒற்றமைந்த மார்க்கமும் அதுவேயாகும். அது சகோதரத்துவம், சமாதானம் நிறைந்த சன்மார்க்கமுமாகும். இவ்வுயரிய மதம் உலகெங்கும் பரவவேண்டியது மிக மிக அவசியமானதாகும்.

மதத்துவேஷமும், குரோதமும் கொண்ட புற சமுகத்தவர் நம் தீனுல் இஸ்லாத்தைத் தாக்கி வருகின்றனர். இது ஒரு பக்கல் கிடக்க, நல்லமரத்தில் புல்லுருவி பாய்ந்ததுபோல் நம்வரென்று நவிலும் ஒரு சிலர், திருக்குர்ஆனின் போதனைகளைத் திரித்தும், நாயகவாக்கியங்களைப் புரட்டிக் கூறியும் இஸ்லாத்திற்கே பெருங்கேடு இழைத்து வருகின்றனர்; பரிசுத்தமாயிருந்த நம் தேயத்தில் காதியானீ -அஹ்மதியக் கொள்கைகளை பரத்த முயற்சிக்கின்றனர். இதன் பயனாய் மிர்ஸா குலாம் அஹ்மதை நபியென்றுங்கூட பஹிரங்கமாய்க் கூறத் துணிந்துவிட்டனர்.

கதிரவன் தன் கிரணங்களை எங்கும் வீசி ஆங்காங்குள்ள அந்தகாரத்தையும் அசுத்தத்தையும் அகற்றி ஜீவராசிகளுக்கு பல நலம் பலன் செய்கின்றான். அங்ஙனமே போலிகளின் மாயப் பிரசாரத்தைத் தடுத்து உண்மை ஞான வெளியை வெளிப்படுத்துவது முஸ்லிம்களின் கடமையல்லவா? இச்சீறிய கருத்தை சிந்தையில் கொண்டு உங்கள் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஒவ்வொரு மாதமும் வெளிவந்து உலவுகின்றது. இதுவே ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தின் நந்நோக்கத்தை எடுத்தோதும் வெளியீடுமாகும். ஆகலின் நண்பர்களனைவரும் இதனை வாங்கிப் படித்துப் பார்த்து பயன்பெருவீர்களென்று எதிர்பார்க்கின்றோம்.

வருடசந்தா :—உள்நாடு ரூ. 3. வெளிநாடு ரூ. 4.

மானேஜர், ஹிபாஜத்துல் இஸ்லாம்

43-A, போஸ்டாபீஸ் தெருவு, சென்னை.

786

சத்திய பிரசாரம்

(காதியானிக் கண்டனம்)

நூன்முகம்

மெய்யன்பீர் !

சத்திய சன்மார்க்க இஸ்லாமானது இத்தரணிக்கு ஒருபுதிய மதமன்று. இது மானிடவர்க்கம் உற்பத்தி செய்யப்பட்ட அக் காலம் தொடுத்து இக்காலம்வரை இவ் வகிலத்தில் இருந்து கொண்டுதான் வருகிறது. இச் சத்திய சன்மார்க்கத்தையே நமது பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முதல் நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஈறாகவுள்ள எல்லா நபிமார்களும் அவ்வக்காலத்தில் ஆங்காங்கு மக்களுக்கு எடுத்தோதி இம்மை மறுமைப்பேற்றுக்குரிய வழியினைக் காண்பித்திருக்கின்றனர். இச் சன்மார்க்கத்திற்கு இஸ்லாம் எனப் பெயரிட்டதுகூட நமது நபிகள் பிரானின் மூதாதையராகிய ஹஸ்றத் இப்றாஹீம் நபியவர்கள் என்று நாம் தெரிந்துகொள்கிறோம். இவ் வுண்மையை இறைவன் தனது திருமறையின்கண்ணே "நிச்சயமாக உங்கள் தந்தையரான இப்றாஹீம்தான் உங்களுக்கு முஸ்லிம்கள் எனப் பெயரிட்டார்" என்று இயம்பி இருக்கிறான். தொன்மைவாய்ந்த இச்சன்மார்க்க இஸ்லாமானது மக்களின் அறியாமையினால் அவ் வக்காலங்களில் திரித்தும் புரட்டியும் கூறப்பட்டு வந்தமையான், அதனை உள்ளது உள்ளபடி எடுத்துரைக்கவும், மக்களின் முன்னேற்றத்திற்கும் அறிவு வளர்ச்சிக்கும் ஆள் பெருக்கத்திற்கும் தகுந்தவாறு கொள்கை சம்பந்தப்பட்டவரை பேதமில்லாமல் நடத்தை சம்பந்தப்பட்டவரை அக்காலத்திற்கு வேண்டியவாறு சில புதுச் சட்-

நன்றி செலுத்துதல்

நீங்கள் நன்றி செலுத்தினால் நிச்சயமாக நாம் உங்களுக்கு (எமது அனுக்கிரகங்களை) அதிகப்படுத்துவோம். (திரு குர்ஆன்.)

சத்திய சன்மார்க்க பக்தர்காள்!

தஞ்சை ஜில்லாவின் சில பகுதிகளில் ஹிஸ்புல்லாக்கள் செய்த சன்மார்க்கப் பிரசாரங்களை நீங்கள் எல்லீரும் அறிந்திருப்பீர்கள். ஆனால், அப் பிரசாரத்தின் போக்கையும் பிரசங்க விவரத்தையும் நேரில் கண்டவர்கள்தாம் நன்கறிவர். மற்றவர்களும் இதனை நன்கறிந்துகொள்ளவும், சன்மார்க்கப் பிரசாரம் புரிபவருக்கு உதவியாக இருக்கும் பொருட்டும் இவ் விபரங்களைப் புத்தக ரூபமாக அச்சிட்டு இனாமாக வழங்கவேண்டுமெனப் பலரும் விரும்பியதற்கிணங்க, இதனை அச்சிடும் செலவு முழுதையும் தாமே ஏற்றுக் கொள்வதாக தஞ்சை ஜில்லா முஹம்மது பந்தர் வாசியும், மேற்படியூர் அன்வாருல் இஸ்லாம் சங்கத்தின் போஷகரும், சிங்கை, ஜோஹர் முதலிய இடங்களின் பிரபல வர்த்தகரும், தர்மசீலருமான ஆலி ஜனாப் உ. றஹ்மான் சாகிப் அவர்கள் முன் வந்து அச்சியற்றும் செலவு முழுதையும் தாமே கொடுத்துதவினார்கள். இவரது திரவிய சகாயத்தால் இப்புத்தகம் உங்களின்முன் வைக்கப்பெற்றுளது. ஆதலால் இப்பெரியாருக்குக் குறிப்பாகவும், இப் பிரசாரத்தை முதலாவதாக ஆரம்பம் செய்வதற்கு உதவியாக விருந்த முஹம்மதுபந்தர் அன்வாருல் இஸ்லாம் சங்கத்தாருக்கும் இதனை இயற்றுவதற்கு உதவியாக இருந்த ஏனையோருக்கும் பொதுவாகவும் எமது சங்கம் பெரிதும் கடமைப்பட்டுளது.

ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தார்.

சத்தியப் பிரசாரம்.

(காதியானிக் கண்டனம்)

காதியானி இயக்கம்.

"எனக்குப் பின்னர் முப்பது தஜ்ஜால்கள் பொய்யர்கள் தோன்றுவர். அவர்கள் தம்மை நபியெனத் தாவாச் செய்வர். ஆனால், நானே இறுதி நபியாக இருக்கிறேன். எனக்குப் பின் எவ்வித நபியும் வரார்" என்று நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நவின்றிருக்கின்றார்கள். (முஸ்லிம், திர்மதி அபூதாவூத்.)

நபிகள் நாயகமவர்களின் இவ்வறிவிப்பிற்கேற்ப இத்தரணியின்கண் பல போலிகள் தோன்றி மறைந்தனர். ஆனால், சமீப காலத்தில் நம் பாரத நாட்டில் பாஞ்சால தேசத்தில் காதியான் எனும் ஊரில் ஒருவர் பிறந்தார். அவர் தம்மை நபியெனக் கூறி அதனை நம்பும்படி பிரசாரமும் புரிந்தார். இவரது பெயர் மிர்ஜா குலாம் அஹ்மது என்பதாகும். இவரது தந்தையின்பெயர் மிர்ஜா குலாம் முர்த்தஜா என்பதாகும். இவர் வயித்தியத் தொழில் புரிந்து வந்தார். எனவே குலாம் அஹ்மது என்பவர் தமது ஆரம்ப வயதில் பாரசீகமும் சொற்ப அறபியும் கற்றார். அறபிப் படிப்புக்குரிய புத்தகங்களைப் படித்து அதனைப் பூர்த்தி செய்வதற்கு முன்னரே வயிற்றுப்பிழைப்புக்கான வழியைத் தேடவேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டது. அறபிப் படிப்பைவிட்டு எவரிடத்திலும் அடிமைத்தொண்டு புரியும் காரியத்தில் கவனஞ் செலுத்தினார். இறுதியாக சியால் கோட்டில் அவருக்கு 15-ரூபாய் மாதாந்த சம்பளத்தில் அலுவல் கிடைத்தது. இந்த பதினைந்து ரூபாய் சம்பளம் அவரது காலக்ஷேபத்திற்குப் போதியதாக இல்லாதிருந்ததால் தமது வருவாயைப் பெருக்கிக்கொள்ள பலவிதத்திலும் முயன்று இறுதியாக விளம்பரம்

செய்து கொள்வதைத் தெரிந்தெடுத்துக் கொண்டார். எனவே ஆரியசமாஜிகளையும் கிறிஸ்தவர்களையும் எதிர்த்து மதவாதம் புரிபவரெனத் தம்மைப் பறைசாற்றிக் கொண்டார். இது சம்பந்தமாகப் பல விளம்பரங்களையும் செய்துகொண்டார். பல நூல்களையும் எழுதினர். எதிர்மதவாதிகளை எதிர்த்துப் போர் செய்கிறவரென நினைத்து பொது ஜனங்கள் பலரும் ஆரம்பத்தில் இவரை ஆதரித்து உதவி புரிய முன்வந்தனர். பல நன்கொடைகளையும் கொடுத்தனர். இதனால் தமது நோக்கப்படி நல்லபொருள் திரட்டினர். எனவே இதில் மமதைகொண்டு கிறிஸ்தவமத ஆராய்ச்சியி லீடுபட்டு ஆரம்பத்தில் "ஹஜ்ரத் ஈஸா நபியவர்கள் இறந்து பட்டார்" என திருகுர்ஆனுக்கு முற்ற முற்ற மாறாகக் கூறி தாவாச் செய்யலானர். ஆரம்பத்தில் கிறிஸ்தவர்களை எதிர்க்க என்று தாவாச்செய்த இந்த மிர்ஜா இறுதியாக இதை ஸ்திரப்படுத்த முயன்று மார்க்க அறிஞர்களான உலமாக்களிடம் இது சம்பந்தமாக வாக்குவாதமும் செய்தார். இறுதியாக இந்தியாவின் தலைநகரான டில்லி மாநகரில் மர்ஹூம் மௌலவி முஹம்மது பஷீர் சாகிப் ஸஹஸ்வானி என்பவருடன் வாக்குவாதம் செய்தார். தம்முடைய பொய்க்கூற்றை மெய்ப்பித்துக் கூற இயலாது எனக் கண்ட மிர்ஜா குலாம் அஹ்மது காதியானி வாக்குவாதம் செய்வதிலிருந்து பின்வாங்கி தமது சொந்த ஊருக்கு மூட்டை கட்டிக்கொண்டார். இவ்விவாதம் சம்பந்தமாக குலாம் அஹ்மது காதியானி கூறிய தாவாவும், அதற்காக அவர் சமர்ப்பித்த ஆதாரங்களும், இவைகளை மறுத்து மர்ஹூம் மௌலவி சாகிப் அவர்கள் கூறிய ஆதாரங்களும் புத்தக ரூபமாக அச்சிடப்பட்டிருக்கிறது. அதற்கு "அல்ஹக் குஸ்ஸரீஹ் பீ இத்பாத்தி ஹயாத்தில் மஸீஹ்" என்று பெயர். எனவே, மிர்ஜா ஆரம்பத்தில் தம்மை ஒரு பக்கா ஸூபியெனப் பாசாங்கு செய்தார். தனக்குப் பல முரீதுகளை ஏற்படுத்திக்கொள்ள இரகசியமாகப் பல கங்காணிகளையும் கமிஷன் ஏஜெண்டுகளையும் ஏற்படுத்தி வைத்தார். இந்த இரகசியம் அலிகார் ஜில்லாவைச் சேர்ந்த மேண்டோ சமஸ்தானத்தில் வெளிப்பட்டது. பின்னர் தன்னை ஒரு முஜத்தித் என்றும், ஹஜ்ரத் ஈஸாவைப் போன்றவர் என்றும், மஹ்தீ என்றும், மர்யம் என்றும், இப்னு மர்யம் என்றும் தாவாச் செய்து நபித்துவம் முடியவில்லை என்று வாதாடித் தம்மை நபியென்றும் றசூலென்றும், வஹியுடையவரென்றும், தனி ஷரீஅத்தை யுடையவரென்றும், ஷரீஅத்து இல்லாத நபியென்றும், எல்லா நபிமாரிலும் ஏற்றமானவரென்றும், இறுதியாகத் தம்மை கிருஷ்ணன் என்றும், கௌதமபுத்தர் என்றும் பிதற்றினர். என்றாலும், இவைகளில் ஸ்திரமாக இருக்காமல் சில காலம் இதை மறுத்தும், இன்னும் சில காலம் இதை வற்புறுத்தி

யும் வந்திருக்கிறார். இவர் இஸ்லாத்தைப்பற்றி சுமார் 80 கிரந்தங்கள் வரை எழுதியிருப்பதாக சென்னை தாருல் இஸ்லாம் பத்திராதிபரே கூறி இருக்கிறார். எனினும், இப்புத்தகங்களை வாங்கிப் படிப்போர் இவரது கூற்றுகள் முன்னுக்குப்பின் விரோதமாகவும், ஸ்திர மற்றவையாகவும் இருப்பதை சந்தேகமறத் தெரிந்துகொள்வர். இவர்கூறும் தாவாக்களைப் பார்க்கும் எவரும் இவருக்கு சித்த சுவாதீனமில்லையோவென நினைக்கவேண்டியதிருக்கும். இவருக்குச் சில சமயங்களில் அவ்விதமான தன்மை இருப்பதுண்டு என்றும் வடஇந்திய முஸ்லிம்கள் கூறுகின்றனர். அவருடைய முதல் கலீபாவான நூருத்தீனும் அவ்வாறே கூறி இருக்கின்றார். ஆனால், இவர்து வாழ்க்கையைக் கவனிக்கும்போது இவரைப் பயித்தியக்காரர் என முடிவுகட்ட முடியாது. இவர் தமது நூல்களில் கூறி இருக்கிற தாவாக்களில் சிலவற்றை ஈண்டு குறிப்பிடுவாம்:

1. நாம் றசூலாயும் நபியாகவு மிருக்கின்றோம். இதுவே எம் தாவா. (பதிர் 5, மார்ச்சு 1908.)

2. நான் ஷரீஅத்துடைய நபியாக இருக்கிறேன். (அர்பயீன் 4, ப-7.)

3. நாயகமவர்களின் அற்புதங்கள் மூவாயிரமே. எனது அற்புதங்களோ முப்பதாயிரமாகும் (3 லக்ஷம் என்றும் ஒருமுறை கூறி இருக்கிறார்) (மக்தூபாத்தே அஹ்மதிய்யா கி 4, வா. 3, ப-49.)

4. நான் ஈஸாவைக் காண மகாச் சிறந்தவன். (தாபி உல் பலா 13-ப.)

5. ஹஜ்ரத் ஈஸாவின் மாதா-ஹஜ்ரத் மர்யம்-விவாகத்திற்கு முன் யூசுப் நஜ்ஜாருடன் கலந்துறவாடியிருந்ததில் கற்பமாகிவிட்டார். (கிஷ்த்தியே நூஹ் 16, அய்யாமுஸ்ஸுல்ஹ 66 ப.)

6. ஹஜ்ரத் ஈஸா விபசார புத்திரர், சாராயம் குடிப்பார். கெட்ட ஸ்திரீகளின் சாவகாசத்திலிருந்தார். அவரின் அற்புதங்களனைத்தும் ஏமாற்றமாயிருந்தன. அவர் பொய் சொல்லுகிறவராக இருந்தார். (அஞ்சாம ஆத்ஹம் அனு 7, தாபிஉல் பலா கடைசிப் பக்கம்).

7. என்னை மறுத்தவர்கள் காபிர்கள், அவர்களுக்குப் பின் தொழக்கூடாது. (ஹகீகத்துல்வஹி 163.)

8. நான் வஹியின்றிப் பேசமாட்டேன். (அர்பயீன் கி 3, பக்கம் 44.)

9. உன்னைப் படைக்காவிட்டால், வானலோகத்தைப் படைத்திருக்கமாட்டேன் என மிர்ஸாவைப் பார்த்து ஆண்டவன் கூறுகின்றான். (ஹகீகத்துல்வஹீ 99.)

10. குர்ஆனில் கூறப்பட்டிருக்கிற அஹ்மது நானே. (இஸாலா முதற்பதிப்பு 676-ப.)

11. நான் முஸ்லிம்கட்கு வாக்குச் சொல்லப்பட்ட மஹ்தீஹாகவும், இந்துக்களுக்கு கிருஷ்ணனுகவு மிருக்கின்றேன். (லெக்ஸர் ஸியால் கோட் 33-ம் ப.)

12. நான் நேர்வழிபெற்ற மஹ்தியாகவும் பல நபிமார்களை விடச் சிறந்தவனுகவு மிருக்கின்றேன். (மிஃயாருல் அக்யார் 11-ம் பக்கம்.)

13. குர்ஆன் பூமியிலிருந்து எடுபட்டுப் போயிற்று. நான் குர்ஆனை வானத்திலிருந்து கொண்டுவந்திருக்கிறேன். (இஸாலா 721-ம் ப.)

14. ஏ! மிர்ஸாவே! நீர் என் குமாரனைப்போ லிருக்கின்றுய் என ஆண்டவன் மிர்ஸாவைப் பார்த்துச் சொல்லுகிறுன். (ஹகீக்கத்துல்வஹி 86-ம் ப.)

15 தௌருத், இன்ஜீல், குர்ஆன் இவைகள் மீதுள்ள (ஈமான்) நம்பிக்கை போலவே எந்தன் வஹியின்மீதும் நம்பிக்கை வைத்திருக்கின்றேன். (அர்பயீன் 4-19.)

28. எனக்கு முன் சென்றுள்ளவர்கள் மீது இறக்கப்பட்ட வஹியின்மீது நான் எவ்வித நம்பிக்கை வைத்திருக்கின்றேனே அதேபோல் என்மீது இறங்கும் பரிசுத்த வஹியின்மீதும் நம்பிக்கை வைத்திருக்கின்றேன். (ஹகீகத்துல்வஹி 150-ப.)

இவ்வாறு தாறுமாருய் பிதற்றித் திரிந்த மிர்ஜாகுலாம் அஹ்மது காதியானி அமிர்தசரஸ் மௌலானு தனுவுல்லா சாகிபுடன் முபாஹலாச்செய்து 8 நாட்களுக்குள் பிளேக் காலரா நோய்வாய்பட்டு மரணமடைந்தார். ஆனல், மௌலானு தனுவுல்லா சாகிப் அவர்கள் இறைவன் கிருபையால் இன்றளவும் ஜீவித்திருப்பதுடன் இந்த இயக்கத்தாரை மிகக் கம்பீரமாக எதிர்த்துப் போராடி அவர்களை ஒவ்வொரு இடத்திலும் தோற்கடித்து வருகிறுர்கள். இறைவன் இவருக்குமென்மேலும் வெற்றியை அளிப்பானுக.

மிர்ஜாவின் கித்தாபுப் பெயர்கள் போடப்பட்டு குறிப்பிட்டிருக்கும் மேற்கண்ட வாக்கியங்கள் "காதியானிமத சம்ஹாரம்" என்ற நூலிலிருந்து எடுத்தெழுதப்பட்டவை. இதை அல்லாமல் சென்னை தாருல் இஸ்லாம் பத்திரிகையின் 10-ம் ஆண்டு மலரில் இவரது போட்டோ படம் பிரசுரிக்கப்பட்டு, தம்மை நபியென தாவாச் செய்த குலாம் அஹ்மது இவர்தான் என்று எழுதப்பட்டிருக்கிறது. இதன்றியும் தம்மை நபியென ஒப்புக்

கொள்ளாத எவரும் காபிர் என மிர்ஸா கூறி இருப்பதாக தாருல் இஸ்லாம் பத்திரிகையில் அதன் கூட்டுச்சொந்தக்காரரும் மானேஜருமான அப்துர் ரஹ்மான் சாகிப் எழுதிவிட்டிருக்கிறார். எனவே, இத்தகைய பொய்யரின் சரித்திரத்தைப்பற்றி இன்ஷா அல்லாஹ் இனி எழுத இருக்கும் புத்தகத்தில் விபரமாக இவரது வாழ்க்கை நிகழ்ச்சிகளும் இவரியற்றிய நூல்களின் தன்மைகளும் விரிவாகக் கூறப்படும்.

காதியானிக் கிளைகள்

நாம் மேலேகூறிய மிர்ஜா குலாம் அஹ்மது காதியானி அஹ்மதியா மதத்தை ஸ்தாபித்தவராவர். இவர் தமக்குப்பின் தம்முடைய ஸ்தானத்தில் தமக்கு கலீபாவாக ஸியால்கோட் அப்துல் கரீம் சாகிப், ஹக்கீம் நூருத்தீன், * முஹம்மது அலி, M. A., L.L. B., காஜா கமாலுத்தீன் சாகிப், B. A., LL. B., ஆகிய நால்வரையும் ஒருவருக்குப்பின் ஒருவர் கிலாபத் பதவி வகிக்கவேண்டுமெனத் திட்டஞ் செய்திருந்தார். இந்நால்வரில் முதல் கலீபா மிர்ஜா குலாம் அஹ்மது காதியானி உயிருடன் இருக்கும் காலத்திலேயே காலஞ்சென்று விட்டார். எனவே, இரண்டாவது கலீபாவாக நியமிக்கப்பட்டிருந்த ஹக்கீம் நூருத்தீன் மிர்ஜா குலாம் அஹ்மது காதியானியின் மரணத்திற்குப்பின், முதலாவது கலீபா பதவியை அடைந்தார். இவர் கலீபா பதவியிலிருக்கும்போதே இவர்களுக்குள் மனஸ்தாபமும் பிளவும் தோன்றலாயிற்று. இறுதியாக இவரும் காலஞ்செல்லவே மூன்றாவது கலீபாவாக நியமிக்கப்பெற்றிருந்த முஹம்மது அலி, M. A., LL. B., இரண்டாவது கலீபாவாக நியமிக்கப்பெற்றார். ஆனால், காலஞ்சென்ற மிர்ஜா குலாம் அஹ்மது காதியானியின் புத்திரர் இதை ஆக்ஷேபித்து இரண்டாம் கலீபாவாக இருக்கும் உரிமை தமக்குத்தான் உண்டு என வாதாடினார். இதனால் இந்தக் காதியானிகளுக்குள் மிர்ஜாயி பார்ட்டியென ஒரு கக்ஷி தோன்றிற்று. இக்கக்ஷிக்கு மேற்கூறப்பட்ட மிர்ஜாவின் புதல்வர் பஷீர்அஹ்மது மஹ்மூது தலைவராக இருக்கிறார். லாகூரிப்பார்ட்டி என இரண்டாவது கக்ஷி ஏற்பட்டது. அதற்கு முஹம்மது அலி, M. A., LL. B., தலைவராவர். காலஞ்சென்ற மிஸ்டர் காஜா கமாலுத்தீன் இதன் முக்கிய அங்கத்தினராவர். இவர் மிஸ்டர் முஹம்மது அலிக்குப் பின் கலீபா பதவியை ஏற்கவேண்டியவர். ஆயினும், அதற்கு முன்னரே மரணித்துவிட்டது குறிப்பிடத்தக்கது. என்னே இப்பொய்யரின் வெற்றுரை. ஜஹீரி பார்ட்டியென மூன்றாவது கக்ஷி ஒன்றேற்பட்டது. அதற்கு ஜஹீருத்தீன். அருப்பி என்பவர் தலைவ

---

* அலி சகோதரர்களில் இளையவரான மௌலானா முஹம்மது அலி அவர்கள் ஷை முஹம்மது அலியல்ல.

ரானர். தீமார்பூரி பார்ட்டி என நான்காவது கக்ஷி தோன்றிற்று. அதற்கு அப்துல்லாஹ் தீமார்பூரி தலைவரானர். சம்பர்யாலீ பார்ட்டி என ஐந்தாவது பார்ட்டியும் தோன்றிற்று. இதற்கு முஹம்மது ஸயீது என்பவர் தலைவரானர்.

லாஹூரி பார்ட்டி :—மிஸ்டர் முஹம்மது அலி என்பவர் ஹக்கீம் நூருத்தீனுக்குப்பின் கலீபா பதவியை வகிக்க விரும்பினர். மிர்ஜா குலாம் அஹ்மது காதியானியின் புதல்வர் மிர்ஜா பஷீர் அஹ்மது மஹ்மூது இதை எதிர்த்தார். இவருடன் போட்டி போட்டு மெஜாரிட்டியாகித் தலைமைப்பதவி ஏற்க மிஸ்டர் முஹம்மது அலியால் இயலவில்லை. ஆதலால், தனிக்கக்ஷியாகப் பிரிந்து அக்கட்சிக்குத் தலைவரானர். இக்கட்சியினர் தங்கள் தலைமை ஸ்தலத்தை லாகூரில் ஏற்படுத்தி அஞ்சுமனே அஹ்மதிய்யா என்று பெயர் வைத்துக்கொண்டனர். காஜா கமாலுத்தீனைத் தங்கள் முக்கிய பிரசாரகராக்கிக் கொண்டு அவருக்கு விசேஷ அந்தஸ்து அளித்து வந்தனர். சமீப காலத்திற்கு முன்னர்தான் காஜா கமாலுத்தீன் மரணமடைந்தார்.

இந்த பார்ட்டியினர் மிர்ஜா குலாம் அஹ்மது காதியானியின் எல்லாக் கொள்கைகளையும் ஏற்றுக்கொள்ளுகின்றனர். அவரை வாக்களிக்கப்பெற்ற மஸீஹ் என்றும் முஜத்தித் என்றும் ஒப்புக் கொள்கின்றனர். மிர்ஜா குலாம் அஹ்மது காதியானி தாவாச் செய்த நபித்துவத்தையும் ஒப்புக்கொள்கின்றனர். ஆயினும், அதற்குக் கூடார்த்த வியாக்யானஞ்செய்து இமிட்டேஷன் நபி யென்றியம்புகின்றனர்.

மிர்ஜா குலாம் அஹ்மது தன்னை நபியெனத் தாவாச் செய்தார் என்ற வாக்கியத்தைக் கேட்டமாத்திரத்தில் முஸ்லிம்கள் ஆத்திரமடைவதையும், அவரை நிராகரிப்பதையும் பார்த்த இந்த லாகூரி பார்ட்டியினர், இஃது உண்மையாகுமெனக் கூறினல் தங்களுக்கு முஸ்லிம் மகாஜனங்களின் ஆதரவு கிடைக்காதெனத் திட்டமாகக் கண்டுகொண்டனர். எனினும், தங்களது குருவாகிய மிர்ஜா குலாம் அஹ்மதின் கூற்றுக்கள் மறைபடுவனவாகவுமில்லை. ஆகலால், அவரது கூற்றுக்கு குதர்க்க வியாக்யானம் செய்து இமிட்டேஷன் நபியாக இருந்தார்; யதார்த்தமாக அவர் நபியாக இருக்கவில்லை என்றுக்கூறி தாங்கள் அவரை நபியென நம்பவில்லை என்றும், மிர்ஜாவை ஒப்புக்கொள்ளாதவர்களைக் காபிர் என அவர்கள் கூறுவதில்லை என்றும், கூறிக்கொள்கின்றனர்.

இக்குழாத்தினர் லண்டனில் பலரை இஸ்லாத்தில் சேர்த்து விட்டதாகக் கூறி தங்கள் அஹ்மதிப் பிரசாரத்தை இந்தியாவில் செய்து வருகின்றனர். இவர்களின் இக்கூற்றுக்களைக் கண்ட

து ஜனங்கள் இவர்களுக்குப் பொருளுதவியும் செய்கின்றனர். லின் இதன் உண்மையை விளக்குவது அவசியமாகும்.

லண்டன் வோக்கிங் பிரசாரம்:—லண்டனுக்குச் சமீபத்தில் வாக்கிங் என ஒரு இடமுண்டு. அதில் ஒரு மஸ்ஜிது கட்டப்பட் ருக்கிறது. இம் மஸ்ஜிதைக் கட்டுவதற்காக மாஜி போபால் அதி தியினி ஷாஜஹான் பேகம் முதலியவர்கள் பொருளுதவி புரிந் னர். அங்கு தொழுகை முதலியவைகள் நடைபெறவும், இங்கி லாந்து செல்லும் முஸ்லிம்களுக்கு இடவசதி வேண்டும் என்பதற் காகவும் அம்மஸ்ஜிதை ஒட்டி ஒரு முசாபர்கானவும் ஏற்படுத்திச் சில கட்டிடங்களையும் விலைக்கு வாங்கி வக்புச்செய்திருக்கின்றனர். அக்கட்டிடங்களின் வாடகைப்பணத்திலிருந்து பேஷ் இமாம் சம் பளம், மராமத்துச் செலவு முதலியவைகள் செய்யப்படுகின்றன. இதற்கென ஒரு டிரஸ்டிபோர்ட்டும் ஏற்பட்டிருக்கிறது. ஆரம்பத் தில் இதை ஸர் அப்துல்லாஹ் ஸுஹ்றவர்தீ, அப்துல்லா குவி லியம் என்ற ஆங்கில நவ் முஸ்லிம் கனவான் ஆகியவர்கள் நிர் வகித்து வந்தனர். அப்துல்லாஹ் ஸுஹ்றவர்தீ இந்தியாவுக்குத் திரும்பிவிட்டபின் அப்துல்லாஹ் குவிலியமும் மரணமடைந்து விட்டார். அதன் பிறகு டாக்டர் கோட்ஞ வான முவஹ்ஹித் ஒருவர் டிரஸ்டியாக இருந்தார். இவருக்குப்பின் இவரது குமாரர் டிரஸ்டியாக இருந்தார். இவர் டாக்டர் காலித் ஷெல்டிரேக்கை டிரஸ்டியாக இருந்து நிர்வகிக்கும்படி கேட்டுக்கொண்டாராயி னும் சில அசந்தர்ப்பத்தால் அப்பொருப்பை டாக்டர் காலித் ஷெல்ட்ரேக் ஏற்றுக்கொள்ளவில்லை. பின்னர், காஜா கமாலுத் தீன் 1913-ல் லண்டன் செல்லவே அவர்களது பொறுப்பில் அது ஒப்புவிக்கப்பட்டது.

காஜா கமாலுத்தீன் லண்டன் சென்று பிரசாரம் புரிவதா கக் கூறி முஸ்லிம் சமஸ்தானங்களிடம் உதவி தேடியபோது போபால், ஹைதராபாத் முதலிய முஸ்லிம் சமஸ்தானங்கள் ஒரு நிபந்தனையின்பேரில் பொருளுதவி புரிய முன் வந்தன. அதா வது மிர்ஜா குலாம் அஹ்மதின் கொள்கைகளைப் பிரஸ்தாபம் செய்யலாகாது; சுத்த சுயமான சுன்னத்து வல்ஜமாஅத்துக் கொள்கைகளே பிரசாரம் புரியப்படல்வேண்டும் எனக்கூறின. அதற்கு அவரும் இயைந்தார். இவ்வுண்மையை தாருல் இஸ்லாம் பத்திரிகையும் சிறிது ஒப்புக்கொண்டிருக்கிறது. அப் பத்திரிகை யின் பத்தாம்மாண்டுப் பூர்த்திவிழா மலர் முதலிய இதழ்களைப் படித்துப்பார்த்தால் நன்கு தெரியவரும். காஜா கமாலுத்தீனும் கூடியவரை தமது வாக்குறுதியை நிறைவேற்றி இருக்கிறார் என்றே கூறவேண்டும். ஏனெனில் இங்கிலாந்திலுள்ள ஐரோப் பிய நவ் முஸ்லிம்கள் இந்தியாவுக்கு வரும்போதுதான் பெரும்

பாலும் மிஸ்டர் குலாம் அஹ்மது காதியானியையும் அ
சிஷ்யர்கள் இன்னின்னார் என்பதையும் தெரிந்துகொள்கின்ற
தங்களிடம் சுத்த சுயமான சுன்னத்து வல்ஜமாஅத்துக்கொள்
கள் தாம் கூறப்படுகின்றன என்று ஹெட்லீபிரபுவும், டாக்
காலித் ஷெல்டிரேக் துரையும் இந்தியாவுக்கு வந்த காலத்தில் அ
களது பிரசங்கங்களிற் கூறி இருக்கின்றனர். சென்ற 1929-
வருஷ இறுதியில் டில்லியில் கூடிய அகில இந்தியதப்லீக் மகாநா
டில் அக்கிராசனம் வகித்த ஹெட்லீ பிரபுவின் பிரசங்கத்தையு
சமீபகாலத்தில் இந்தியாவிற்கு விஜயம் செய்த டாக்டர் காலித் ஷெல்டிரேக், பிரின்சு காலித் சிம்ஸன் ஆகியவர்கள் மதராஸ், கொளும்பு, சிங்கப்பூர் ஆகிய இடங்களில் பிரசங்கம் புரிந்திருப்பதையும், அன்னவர்கள் தங்கள் பிரசங்கங்களில் இந்த அஹ்மதி இயக்கத்தைப்பற்றிக் கூறி இருப்பதையும் அவர்களைக் கண்டு பேசிய சென்னை "ஸைபுல் இஸ்லாம்" பத்திரிகையின் பிரதிநிதியுடன் அவர்கள் சம்பாஷணை செய்திருப்பதையும் பார்த்தால் இங்கிலாந்தில் அஹ்மதியர் செய்யும் பிரசாரத்தின் தன்மை நன்கு புலனாகும்.

ஸைபுல் இஸ்லாம் பிரதிநிதியான ஜனாப் L. M. குலாம் அஹ்மது சாகிப் அவர்களுடன் 11-4-33ல சம்பாஷணை செய்த விபரம்:—

பிரதிநிதி:—தங்களுடைய சங்கம் செய்யும் இச்சேவையைக் கண்டு பெரிதும் மகிழ்ச்சி யடைந்தேன்.

டாக்டர் காலித் ஷெல்டிரேக்:—பண உதவி இருந்தால் இன்னும் எவ்வளவோ சேவை செய்யக்கூடும். நான் என்னுடைய கையைவிட்டு எவ்வளவோ பணம் போட்டு வருகிறேன். என் மனைவி என்னுடன் ஒத்துழைத்து வருகிறார். அவர் செய்யும் தியாகம் கொஞ்சமல்ல.

பிரதிநிதி:—தாங்கள் அங்கிருந்த காலத்தில் என்னென்ன வேலைகளை கவனித்து வந்தீர்கள்.

டாக்டர்:—நான் ஆயுள்கால பிரசிடென்டாக இருக்கும் வெஸ்ட்டர்ன் இஸ்லாமிக் அஸோஸியேஷன் செய்யும் சேவை பலதிறப்பட்டது. கிரேட் பிரிட்டனில் இருக்கும் ஆங்கில முஸ்லிம்களில் பெரும்பாலர் கப்பல்கட்டும் கைத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். கப்பல் துறைமுகங்களில் சிறு கடைகளையும் சாப்பாட்டு விடுதிகளையும் வைத்திருக்கின்றனர். இவர்களை எல்லாம் ஒரு ஐக்கியப்படுத்தி அவர்களுக்கு அப்போதைக்கப்போது வேண்டிய பல உதவிகளையும் இச்சங்கம் செய்து வருகிறது..........

இங்கிலாந்தில் இருக்கும் முஸ்லிம் குழந்தைகளுக்கு மார்க்கக் கல்வி போதிக்க ஆங்கில பாஷையில் புத்தகங்கள் கிடையா. இத் தேவையை நாம் உடனே பூர்த்திசெய்யவேண்டும். பத்திரிகை களில் இஸ்லாத்திற்கு விரோதமாக எழுதப்படும் பிரசுரங்களுக்கு பதில் எழுதவேண்டியதிருக்கிறது. இஸ்லாத்திற்கு விரோதமா கக் காட்டப்படும் படக்காட்சியை தடைசெய்ய வேண்டியதிருக் கிறது. இதைப்போன்ற பல ஊழியங்களை எம்மாலான முறை யில் செய்து வருகிறேன்.

பிரதிநிதி:—தாங்கள் அஹ்மதியா இயக்கத்தாரால் இஸ்லாத் தில் சேர்க்கப்பட்டதாக சில பத்திரிகைகள் எழுதி இருக்கின்ற னவே அது உண்மையா?

டாக்டர்:—இல்லவே இல்லை. 1903-ல் நான் இஸ்லாத்தில் சேர்ந்தேன். அஹ்மதியா தலைவர்கள் 1913-ல் தான் இங்கிலாந்து வந்தனர். இங்ஙனமிருக்க நான் அவர்களால் இஸ்லாத்தில் எங்ங னம் சேர்ந்திருக்க முடியும் என்பதை நீங்களே யோசித்துக் கொள்ளவும். (விவரமான தகவல் விரும்புவோர் 26-4-1933 புதன் கிழமை பிரசுரமான ஸைபுல் இஸ்லாமைப் பார்த்துக்கொள்ளவும்.)

டாக்டர் காலித் ஷெல்டிரேக் அவர்களின் சிங்கைப் பிரசங் கத்தின் ஒரு பகுதி:—

“நான் 1903-வது ஆண்டில் ஜுலை 14உ யாருடைய வற் புறுத்தலுமின்றி எனது சொந்த ஆராய்ச்சியின் பேரில் இவ்வுயரிய இஸ்லாம் மதத்தைத்தழுவினேன். எனது தந்தை என்னை ஒரு பாதிரியாக ஆக்குவதற்கு படிக்கவைத்தார். என்றாலும், அவரது முயற்சி சித்தியடையவில்லை. ஸ்டூவர்ட் ரோஸ் என்பவரைச் சந் தித்துப் பேசியதும், சேல் துரையால் மொழிபெயர்க்கப்பட்ட குர் ஆனைப் படித்ததும், மூர் துரையால் எழுதப்பட்ட “முஹம்மதின் ஜீவியம்” என்ற புத்தகத்தைப் படித்ததும்தான் என்னை இவ் வபார சக்திக்குள் புகுத வைத்தது.. 1913-ல் காஜா கமாலுத்தீனும் அவரது கோஷ்டியினரும் லண்ட னுக்கு இஸ்லாமிய பிரசாரகர்களென்ற ஹோதாவில் விஜயம் செய்தார்கள். அப்பொழுது இவர்களின் மேற்பார்வையில் வோக்கிங் மஸ்ஜித் ஒப்படைக்கப்பட்டது. காஜா கமாலுத்தீனால் “இஸ்லாமிக் ரெவியு” என்ற ஆங்கிலப்பத்திரிகையும் நடத்தப்பட் டது. அப்பத்திரிகைக்கு யானும் சில கட்டுரைகள் வரைந்திருக் கிறேன். அதனால் என்னை அஹ்மதி என்றோ காதியானி என்றோ நினைத்து விடாதீர்கள். பிறகு எனக்கு அவர்களின் வழிகெட்ட பிரசாரம் தெரியவந்தவுடன் அப்பத்திரிகைக்கு வியாசம் வரை வதையும் விட்டு விட்டேன். நான் அந்த மெஷனரியில் அங்கத்

தினராய்க்கூட இருந்ததில்லை. ஆகையால், எமக்கும் அவர்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. நான் காதியானியுமல்ல, அஹ்மதியுமல்ல. கடைசிநபியும், இனிமேல் தீர்க்கதரிசனம் இல்லையென்று முத்திரையிடப் பட்டுவிட்ட அந்த நமது காத்தமுல் முர்சலீன் செய்யிதுனா முஹம்மது (ஸல்.) அவர்களையே நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம். அவர்கள் கொண்டுவந்த மார்க்கத்தையே பின்பற்றுகிறோம். ஆயினும் அந்த வழிகெட்ட காதியானிக் கூட்டத்தினர்களுக்கு நல்ல ஹிதாயத்தைக் கொடுத்து நேரான வழியில் செல்ல ஏகவல்லோனாகிய அல்லாஹ சுபுஹானஹு வத ஆலா கிருபை செய்வானாக.'' (ஸை. இ. 23 ஆகஸ்ட், 1933.)

எனவே இதிலிருந்து இங்கிலாந்திலும் ஐரோப்பாவின் ஏனைய நாடுகளிலும் இஸ்லாமியப் பிரசாரம் புரிவதில் இவ்வஹ்மதியா மெஷனரிகளைத் தவிர வேறு பலரும் ஈடு பட்டிருக்கின்றனர் என்பதையும், டாக்டர் காலித் ஷெல்டிரேக், லார்டு ஹெட்லி முதலிய பிரபல ஆங்கிலேயரைத் தாங்கள் இஸ்லாத்தில் சேர்த்திருப்பதாக நமது நாட்டில் கூறப்படுவனவற்றில் பெரும்பான்மை உண்மையற்றவை என்பதையும் தெரிந்துகொள்கிறோம்.

தவிரவும் ஐரோப்பாவில் வெற்றியுடன் இஸ்லாமியப் பிரசாரம் செய்யும் சங்கமானது The Western Muslim Association என்பதும் அதற்கு டாக்டர் காலித் ஷேல்டிரேக் ஜீவிய தலைவர் என்பதும் தெரியவருகிறது. அன்றியும் இவ் அஹ்மதியர்செய்யும் பொய் பிரசாரத்தையும் மேற்கூறப்பெற்ற அஞ்சுமன் செய்யும் சத்தியப் பிரசாரத்தையும் பற்றி அவ்வஞ்சுமனின் காரியதரிசியான மிஸ்டர் அப்துல்லாஹ்டே என்பவர் சுமார் 4-வருஷங்களுக்கு முன் கீழ்நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்து தன் சுயதேசம் சென்றெழுதிய கட்டுரையாலும் தெரிந்துகொள்ளலாம். அக்கட்டுரை சிங்கப்பூரில் பிரசுரமாகும் The Muslim Opinion என்ற ஆங்கிலமாதப் பத்திரிகையிலும் பிரசுரமாகி இருக்கிறது.

ஆங்கில தப்ஸீர் :—இன்னும், இந்த லாகூர் பார்ட்டியார் ஆங்கில பாஷையில் சரியான மொழிபெயர்ப்பு ஒன்றை வெளியிடுவதாகவும், அந்த மொழி பெயர்ப்பில் மிர்ஜா குலாம் அஹ்மதைப் பற்றியோ அவரது கொள்கையைப் பற்றியோ எதுவும் எழுதப் பெறுது என்றும் விளம்பரம் செய்து முஸ்லிம் பொது ஜனங்களிடம் பண உதவி வேண்டினர். அவர்கள் இவ்விஷயத்திலேனும் சத்தியமாய் நடந்து கொள்வரென அவர்களின் பசப்பு வார்த்தைகளை நம்பி தாராளமாகப் பொருளுதவி செய்தனர். இரங்கூன் நகரில் மாத்திரம் இம் மொழிபெயர்ப்புக்கென சுமார் 16,000-ரூபாய்கள் வரை சேர்த்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பொது

ஜனங்களிடம் வாக்குறுதி செய்து அவர்களிடம்பண உதவிபெற்று எழுதிய ஆங்கில குர்ஆன் மொழிபெயர்ப்பு வியாக்யான உரையிலோ ஆரம்பமுதல் அந்தம்வரை அந்த அஹ்மதிக் கொள்கைகளே மலிந்து கிடக்கின்றன. இவ்வுண்மையை விபரமாக அறிய விரும்புபவர்கள் "ஸைஹயே ரங்கூன் பர் பைருவானே தஜ்ஜால் ஜமூன்" என்ற உருதூ நூலில் தெரிந்துகொள்ளலாம். இவ்வாறு மார்க்கத்திற்கு முரணாக எழுதியதனுல்தான் எகிப்து அரசாங்கம் அவ்வாங்கில மொழிபெயர்ப்பைப் பறிமுதல்செய்து தங்கள் நாட்டிற்குள் கொண்டுவரலாகாது என்று தடையுத்தரவு பிறப்பித்துவிட்ட செய்தி அக்கால பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. [illegible]ுத்தேச உலமாக்கள் அம் மொழிபெயர்ப்புச் சரியானதில்லை [illegible]ன பத்வாக்கொடுத்து மிருக்கின்றனர். அந்த பத்வாவின் [illegible]கைப்படத்தை எடுத்து அச்சுப் பிரசுரங்களில் வெளியிடப்பட்[illegible]ருக்கிறது. இது சம்பந்தமான அதிக விபரம் இனி எழுதும் நூல்களில் கூறப்படும்.

மிர்ஜாயீ பார்ட்டி :—இந்த அஹ்மதிகள் நயவஞ்சகமாக மக்[illegible]ளிடம் பேசுவதும், மிர்ஜா குலாம் அஹ்மது உண்மையாக நபி [illegible]ல்லவென்று கூறுவதும் ஷெயாரின் புதல்வரான மிர்ஜா [illegible]ஹ்மூதுக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் பிடிக்கவில்லை. [illegible]ர்ஜா குலாம் அஹ்மது ஏராளமான பணத்தைச் சம்பாதித்து [illegible]வத்து விட்டதால் மக்களை மயக்கிப் பணம் பரிக்கவேண்டும் [illegible]ன்ற எண்ணம் இவர்களுக்கு இல்லை. அவர் சிம்லாவில் இராஜப் பிரதிநிதியின் அரண்மனைக்குப் பக்கத்தில் பிரமாண்டமான பங்களாவில் வெகு உல்லாசமாக வாழ்ந்து வருகிறார். தம்முடைய தகப்பனர் உண்மையாகவே நபியாக இருந்தார் என்றும், அவருக்கென்த் தனி ஷரீஅத்து உண்டு என்றும் நம்புகிறார். அன்றியும் தமது தகப்பனர் கூறிச் சென்றவைகளுக்குக் குதர்க்கவாதம் புரிந்து அவைகளை மறைக்க முயல்வது முடியாத காரியம் என்பதையும் உணர்ந்துகொண்டார். ஆதலால், மிர்ஜா குலாம் அஹ்மது கூறியதை உள்ளது உள்ளபடி இவர்கள் இயம்பியும் பிரசாரம் புரிந்தும் வருகின்றனர்.

ஜஹீரி பார்ட்டி :—மிர்ஜா குலாம் அஹ்மது நபியாகவும் ரசூலாகவும் இருப்பதைப் பார்க்கிலும் இன்னும் உயர்ந்த அந்தஸ்தில் அவர் இருந்ததாகக் கருதுகின்றனர். எனது ஷெய்காகிய மிர்ஜா குலாம் அஹ்மது தனக்குப்பின் யூசுப் வருவாரென்று சொல்லி இருக்கிறார். அந்த முன்னறிவிப்பின்படி நானே யூசுபாக இருக்கின்றேன். இன்னும் ஆண்டவன் வெளியாகும் ஸ்தானமாகவும் இருக்கிறேன். மிர்ஜா சாகிபின் ஸ்தானத்திற்கு நானே தகுதியுள்ளவன். ஒரு ரசூல் உதயமான காதியான் கிராமத்திற்கு

நேர்நோக்கித் தொழுவது அவசியமாகும். (அதாவது அதைக் கிப்லாவாக்கித் தொழவேண்டும்) என்று கருதுகின்றனர்.

தைமார்பூர் பார்ட்டி :—இந்த கக்ஷியினரும் மிர்ஜாவை நபியென்றும் ரசூலென்றும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். அப்துல்லாஹ் தைமார்பூரி என்பவர் இதன் தலைவர். இவர் மிர்ஜாவைப் பார்க்கிலும் ஒரு படி முன்னேறுகிறார். தினசரி தனது விலாப் பக்கத்திலிருந்து தனக்கு இல்ஹாம் வருவதாக அவர் கூறுகிறார். இவர் "தப்ஸீரே ஆஸ்மானி" என்று ஒரு தப்ஸீர் எழுதி இருக்கிறார். அதில் ஹஜ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களை அவமரியாதையாகக் குறைகூறி இருக்கிறார்.

சம்பரியால் பார்ட்டி :—இந்த பார்ட்டியானது ஏனைய எல்லா பார்ட்டியைப் பார்க்கிலும் மேம்பட்டுவிட்டது. முஹம்மது ஸயீது என்பவர் இப்பார்ட்டிக்குத் தலைவர். மிர்ஸா சாகிபு இஸ்லாமைப் புதுப்பிக்கத் தொடங்கி இருந்தார்; ஆயினும் அது பூர்த்தியாகவில்லை; அதைப் பூர்த்தி செய்வதற்காகவே இறைவன் என்னை கமருல் அன்பியா வாக உற்பத்தி செய்திருக்கிறான்; எனவே, என்னுடைய சீர்திருத்தம் யாதெனில், மதுபானமருந்தலாம், காலா, அத்தை, கிச்சா, மாமன் மக்களை விவாகம் செய்துகொள்வது ஹறாமாகும். விருத்தசேதனம் செய்வது ஹறாமாகும். இன்னும் பல சீர்திருத்தங்கள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் விபரமாகக்கூற இச்சிறு நூல் இடங்கொடுக்கவில்லை. அதிக விபரம் தெரிய விரும்புபவர்கள் தென்காசி "முஸல்மான்" என்ற பத்திரிகையின் ஆசிரியர் மீ. இ. முஹம்மது அப்துல் காதிர் சாஹிபுக்கு எழுதி தெரிந்துகொள்ளவும். அல்லது இனிமேல் எழுத இருக்கிற விரிவான புத்தகத்தில் கண்டுகொள்ளலாம்.

சிதறுண்டுபோன முஸ்லிம்களை ஒன்றுசேர்த்துச் சீர்திருத்தம் செய்ய வந்ததாகக்கூறிய மிர்ஜா குலாம் அஹ்மது காதியானியைச் சேர்ந்தவர்களுக்குள்ளேயே இத்தனை கூட்டங்கள் கிளம்பி மஸீஹாக்களாகவும், மஹ்தீகளாகவும், நபிகளாகவும் தோன்றிவிட்டனர். இன்னமும் இவர்களால் என்னென்னவெல்லாம் சொல்லப்படுமோ? இவர்கள் தங்களுக்குள் இவ்வளவு பெரிய வேற்றுமையிலும் பிளவிலுமிருந்தாலும் சத்தியசன்மார்க்கத்தின் வேரைக் கெல்லி எறியவேண்டும் என்ற முயற்சியில் யாவரும் ஒன்றுபட்டே இருக்கின்றனர். இறைவன் இவர்களின் சூழ்ச்சியிலகப்படாமல் முஸ்லிம்களையும் மற்றவர்களையும் காப்பாற்றுவானாக! ஆமீன்.

தமிழ்நாடும் காதியானி இயக்கமும்

தமிழ்நாடு என்ற மாத்திரத்தில் இந்தியாவிலுள்ள தமிழ் ஜில்லாக்கள் மாத்திரம் என்பது கருத்தல்ல. தமிழ் பாஷை

வழங்கும் நாடு என்று பொருள் கொள்ளவேண்டும். இதனால் இலங்கையையும் தமிழ் நாட்டில் சேர்த்துக்கொள்வதே நமது நோக்கம். நந்தமிழ்நாட்டில் குறிப்பாய் இலங்கையில் மிர்ஜாயிப் பார்ட்டிதான் ஆரம்பத்தில் உண்டாயிற்று. இவர்கள் இலங்கையில் தங்கள் பிரசாரத்தைப் பிடிவாதமாய் செய்துவருகின்றனர். இவர்களுக்கென தூதன் என்ற ஒருவாரப் பத்திரிகையுமுண்டு. தற்போது மாதப்பத்திரிகையாக மாறி இருக்கிறது. இப்பத்திரிகை தொடர்ச்சியாக இடைவிடாது நடைபெறுவதில்லை யென்றாலும் காதியானி இயக்கத்திற்கு எதிர்ப்பு அதிகம் ஏற்படும்போது இடையிடையே உயிர்பெற்றெழும்புவதாக இருந்து வருகிறது. இந்த பார்ட்டியினருக்கும் முஸ்லிம்களுக்கும் இலங்கையிலுள்ள கம்பளையில் ஒரு வாக்குவாதம் நடந்தது. (காதியானிப் பிரசாரமும் கம்பளை முஸ்லிம்களின் வெற்றியும் என்ற நூலைப் பார்க்க.) இதையல்லாமல் பல இடங்களிலும் வாக்குவாதம் நடைபெற்றுக்கொண்டு தானிருக்கிறது. இலங்கைக்கு வர்த்தகம் செய்வதற்காகச் சென்ற இந்திய தமிழ் முஸ்லிம்களிலும் சிலர் இதில் சிக்கிக்கொண்டனர். இவர்களில் சாத்தன்குள வாசிகள் குறிப்பிடத்தக்கவராவர். இப்பார்ட்டியைச் சேர்ந்த சாத்தன்குள வாசிகளில் இரண்டுமூன்றுபேர் தங்கள் சுய ஊராகிய சாத்தன்குளத்தில் தங்களுக்கென தனிஜமா அத்து ஏற்படுத்திக்கொண்டு ஊரில் குழப்பத்தை விளைவித்ததும், அவர்கள் சுன்னத்துவல் ஜமா அத்து உலமாக்களுடன் மார்க்க சம்பந்தமாக விவாதித்துத் தங்கள் கக்ஷியை ருஜூப்பிப்பதாகக் கூறியதன் பேரில் சாத்தன்குள சுன்னத்துவல் ஜமா அத்தார்கள் மதராஸ் முதல் திருநெல்வேலி வரையுள்ள நந்தமிழ் நாட்டு உலமாக்களில் பலரைத் தங்களுருக்குத் தருவித்ததும், அவ்வூர் காதியானிகள் கொளும்பிலிருந்து தங்கள் கக்ஷி அறிஞர்களைத் தருவித்ததும், இறுதியாக விவாதம் நடைபெறாமல் அவர்கள் பின்வாங்கிக் கொண்டதன் பேரில் சுன்னத்துவல் ஜமாஅத்து உலமாக்கள் அவ்வூரிலும் காயல்பட்டணம், குலசேகர பட்டணம், பேட்மாநகரம் முதலிய பல ஊர்கள் சென்று சத்தியபிரசாரம் செய்ததும் உலகம் அறிந்த உண்மையாகும். அதுசம்பந்தமாய் ஜனாப்மௌலானா அபுல் ஹஸன் சாகிப் மத்ராஸீ அவர்கள் "காதியானி மத சம்ஹாரம்" என ஒரு நூல் எழுதி, சென்னை பிரபல வியாபாரிகளும் சாத்தன்குள வாசிகளுமான ஜனாப்கள் அ. பி. மு. செய்யிது இப்ராஹீம் மரைக்காயர், அ. பி. மு. ஷாஹூல் ஹமீது மரைக்காயர், மு. மீ. ஷேக்முகம்மது மரைக்காயர், மு. மீ. அப்துல் காதிர் மரைக்காயர் ஆகிய கனவான்கள் அச்சிட்டுப் பிரசுரம் செய்திருக்கின்றனர். அந்த நூலில் மிர்ஜாவின் சரித்திர சுருக்கமும், அவரது தாவாக்களின் சுருக்கமும், அவைகள் இஸ்லாத்திற்கு இடெப்பாகவுள்ள

விபரமும், உலமாக்களின் முடிபுகளும், கோர்ட்டு தீர்ப்புகளும் கூறப்பட்டிருக்கின்றன. சாத்தன்குளத்திலுள்ள சுன்னத்துவல் ஜமா அத்து முஸ்லிம் சகோதரர்களின் இந்நன் முயற்சியின் பொருட்டால் வழிகேடான காதியானிக் கொள்கைள் நம்மவருக்கு இன்னது எனத்தெரியலாயிற்று. இவர்கள் மகா நாடு கூட்டுவித்ததன் பயனாய் காதியானிகளின் சூழ்ச்சி பொது ஜனங்களுக்குப் புலப்பட்டுவிட்டது. அதனால் காதியானிகளுக்கு ஏற்பட்டு வந்த சொற்ப ஆதரவும் குன்றிற்று. எனவே இம்முயற்சியில் அவர்கள் முதலாவதாக ஈடுபட்டதால் அவர்களுக்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இறைவன் அவர்களுக்கு ஈமானில் உறுதியையும் பரக்கத்தையும் அளிப்பானாக.

தவிர தஞ்சை ஜில்லா நாச்சியார்கோவிலை யடுத்த நறையூர் வாசியான பா. தாவூத்சா என்பவர் முற்கூறப்பட்ட லாகூரிப் பார்ட்டியினருடன் சேர்ந்துகொண்டு அவர்களின் கொள்கையை சுமார் ஏறக்குறைய 15 வருடத்திற்குமுன் நமது நாட்டில் பரவச்செய்யப் பகிரதப்பிரயத்தனம் செய்தார். இவர் ஆங்கிலத்தில் B. A. பட்டம்பெற்றவர். தமிழ் நன்றாய் எழுதக்கூடியவர். ஆரம்பத்தில் நாச்சியார்கோவிலில் முஸ்லிம் சங்கத்திற்குத் தலைவராக இருந்து "நரகத்துக்கு முடிவுண்டு" என ஒருதுண்டுப் பிரசுரத்தை வெளியிட்டார். இதனை கூத்தாநல்லூர் முஸ்லிம் லீக் முதல்முதலாக ஆக்ஷேபித்து கடிதத்தின் மூலம் அவரைக் கண்டித்தது.

அப்பால் திருச்சி மஜ்லிசுல் உலமாவும் அதனைக் கண்டித்துத் துண்டுப் பிரசுரம் வெளியிட்டது. இவ்விதமாக உலமாக்களுக்கும் அச்சங்கத் தலைவருக்கும் நோட்டீஸ் தாவா நடைபெற்றபின் அச்சங்கத்தார் தத்துவ இஸ்லாம் என ஒரு பத்திரிகையை வெளியிட்டனர். பின்னர் அப்பத்திரிகை லாகூர் பார்ட்டியாரின் சொந்தப் பத்திரிகையாக மாறிற்று. பின்னர் அதைவிட்டு பா. தாவூத்சாவுக்கும் அவரது கூட்டாளிகளுக்கும் சொந்தமாகமாறி தாருல் இஸ்லாம் என்ற மாற்றுப்பெயரால் மதராசிலிருந்து வெளிவருகிறது. மாதப் பத்திரிகையாக இருந்தது வாரப் பதிப்பாகவும் ஆகி இருக்கிறது. இந்த பா. தாவூத்சா சிலகாலம் லண்டன் வோக்கிங்குச் சென்று காஜா கமாலுத்தீனுடன் இருந்திருக்கிறார். அந்த லாகூர் பார்ட்டியினரிடம் சம்பளம் வாங்கிக்கொண்டு தென்னாட்டில் அவர்களின் பிரசாரகராவும் இருந்திருக்கிறார். இக்கக்ஷியினரால் வெளியிடப்பட்ட ஆங்கில குர்ஆன் இவரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டு வருகிறது. அதற்கு ஜவாஹிருல் புர்க்கான் என்று பெயர். இன்னும் பல புத்தகங்கள் மொழிபெயர்த்து அச்சிடப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இவ்விபரம் வேறொரு அத்தியாயத்தில் விளக்கிக் கூறப்படும்.

இவரது பிரசாரத்தை சுன்னத்துவல் ஜமாஅத்தென நமது இளவாலிபர்கள் நம்பி அவரை ஆதரிக்கவும், அவரை ஆங்காங்கு தருவித்துக் கூட்டம் போடவும் அவரது இயக்கத்தைப் பின்பற்றவும் முற்பட்டனர். அவரும் எழுத்துப் பிரசாரத்திலிருந்து இப்பொழுது தம்முடன் பலரைச் சேர்த்துக்கொண்டு வாய்ப் பிரசாரமும் செய்ய ஆரம்பித்துவிட்டார்.

ஹிஸ்புல்லாஹ்

இவர்களது பிரசாரங்களை மறுத்து உண்மையை எடுத்து எழுதிவருவதற்காக நம்மவரில் கட்டுப்பாடான சங்கமோ பொது ஸ்தாபனமோ இருக்கவில்லை என்றாலும், நமது சத்திய சன்மார்க்கத்தை எடுத்துப் போதிக்கவும் இராஜீய தேசீய விஷயங்களுக்காகப் போராடவும் எனச் சென்னையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் "ஸைபுல் இஸ்லாம்" என்ற சிறந்த பத்திரிகையும், அதன் ஆசிரியரான மௌலானா மௌலவி S. S. அஹ்மது ஸயீது சாகிப் பாக்கவி அவர்களும், ஈரோடு "தாஜுல் இஸ்லாம்" பத்திரிகையும், தென்காசி "முஸல்மான்" பத்திரிகையும், காயல்பட்டணம் "அல்ஹிதாயா," "கமருஸ்ஸமான்," மதராஸ் "அல்கலாம்," கொழும்பு "இஸ்லாம் மித்திரன்" என்ற பத்திரிகைகளும் மிர்ஜாயி லாகூரி காதியானி ஆகிய இரு கக்ஷியினரின் பிரசாரங்களை எதிர்த்து கம்பீரமாகப் போராடி அவ்வப்போது தக்க மறுப்புக் கொடுத்து வந்தன. ஆனால், நம் முஸ்லிம்களின் உறக்கத்தால் தாஜுல் இஸ்லாம், முஸல்மான், கமருஸ்ஸமான், அல்ஹிதாயா, அல்கலாம் ஆகிய பத்திரிகைகள் பிரசுரிக்கப்படாமல் நின்றிருக்கின்றன. இவைகள் இனிமேலும் பிரசுரிக்கப்பெற்று இஸ்லாத்திற்கு இணையற்ற தொண்டுபுரிய இணையற்ற அந்த ரஹ்மான் கிருபை செய்வானாக.

தமிழ் முஸ்லிம் பத்திரிகைகளில் தலைசிறந்ததும், தேசீய ராஜீய உரிமைகளுக்காகப் போராடுவதை தனது முக்கிய கடமையாகக் கொண்டதுமான சென்னை ஸைபுல் இஸ்லாம் பத்திரிகை மட்டும் தனித்து நின்று இவர்களின் தீய பிரசாரத்தை எதிர்க்க வேண்டியதாயிற்று. இது சம்பந்தமான மறுப்புக்களை எழுதுவதென்றால் ஒவ்வொரு வெளியீட்டிலும் இதற்கென மூன்று நான்கு பக்கங்கள் பிரத்தியேகமாக ஒதுக்கி வைக்கவேண்டியதாகவும் இருந்தது. இதற்கென ஒரு சப் எடிட்டரும் தனிமையில் நியமிக்கப்படவேண்டியதாகவும் ஏற்பட்டது. ஆனால், தேசீய ராஜீய விஷயங்களுக்கு மிகமிக முக்கியமாகவுள்ள காலம் ஏற்பட்டுவிட்டதால் அவைகளில் முழுகவனத்தையும் செலுத்துவது ஆசிரியருக்கு முக்கிய கடமையாயிற்று. ஆதலால், ஒரு பத்திரிகை

எல்லா வேலைகளையும் சிரமேற்றுங்கி, அவையாவையும் குறைவறச் செய்வதென்பது அசாத்தியம் அல்லவாயினும் கஷ்டசாத்தியம் என்பதிலையமில்லை. நம்மவர் போதிய ஆதரவு அளித்தால் அப் பொருப்பையும் ஸை. இ. செய்வதற்கு தயாராகவும் இருக்கிறது என்பதும் உலகறிந்த விஷயம். ஆயினும், அறிவாளிகளாகவும், மார்க்க பக்தர்களாகவுமுள்ள சென்னை முஸ்லிம் வர்த்தகர்களும் உலமாக்களும் மற்றவர்களும் ஒன்றுகூடி இதற்கெனப் பிரத்தியேகமான ஒரு சங்கத்தை நிறுவவேண்டுமெனத் தீர்மானித்து அவ்வண்ணமே மதராஸில் நமது சங்கத்தை ஸ்தாபித்திருக்கின்றனர். அதற்கு இஸ்லாத்தின் பாதுகாப்புச் சங்கம் என்று பெயர். இச்சங்கம் ஏற்பட்டபின் இதற்கு சார்பாக இராயவேலூர், மதுரை, கொளும்பு, சிங்கப்பூர் முதலிய நகரங்களில் பல கிளைசங்கங்கள் ஏற்பட்டன. முன்னரே ஏற்பட்டிருந்த பல சங்கங்களும் இச்சங்கத்தின் நோக்கத்தை தங்கள் திட்டங்களில் சேர்த்துக்கொண்டு இதற்கு பக்கபலமாகவும் அமைந்தன.

நம்முடைய இச்சங்கத்தாரும் தங்களது பிரசாரத்திற்காக சென்னையில் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" என்ற மாதப்பத்திரிகையை ஏற்படுத்தி கடந்த நாலாண்டுகளாக இஸ்லாத்திற்கு பல அரிய சேவையைச் செய்துவருகின்றனர். இச்சங்கத்தையும், இச்சங்கத்துப் பத்திரிகையையும் ஆதரித்து சென்னை ஸைபுல் இஸ்லாம் பத்திரிகை பல கட்டுரைகளை வரைந்துவருவதுடன் அதற்கு உதவியாக இன்றளவும் இருந்து இஸ்லாத்திற்கு உழைத்து வருகிறது. அத்துடன், அப்பத்திரிகையின் ஆசிரியர் ஜனாப் மௌலானு மௌலவி S. S. அஹ்மது ஸயீது சாகிப் பாக்கவீ அவர்கள் அச்சங்கத்தின் உபதலைவராகவும், அப்பத்திரிகையின் எடிட்டோரியல் போர்டில் மெம்பராகவும் இருந்துவருகிறார்கள். இறைவன் இப்பத்திரிகைகளையும் சங்கங்களையும் மென்மேலும் அபிவிருத்தியடையச்செய்து இஸ்லாத்தின் உண்மை ஊழியர்களாக்க அருள் புரிவானாக. ஆமீன்.

முந்தின அத்தியாயத்தில் கூறப்பட்டபடி மிர்ஜாயி லாகூரி பார்ட்டியினரின் கொள்கைகள் பிரசாரம் புரியப்படுவதைக் கண்ட மார்க்காபிமானிகள் பலர் நமது சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்திற்கும், கௌரவக்காரியதரிசிகளி லொருவரான ஹாஜி மௌலவி S. A. முஹம்மது அலி சாகிப் பாக்கவீக்கும் கடிதமூலமாகவும் நேரிலும், சன்மார்க்கத்தைப்பற்றி பிரசாரம் செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்யும்படி வேண்டிக்கொண்டனர். எனவே, இவர் உலமாக்களிற் பலரையும், முக்கிய தலைவர்களிற் பலரையும் கலந்து நமது சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தின் மூலமாக "ஹிஸ்புல்லாஹ்" என்ற பெய

ருடன் சத்தியப்பிரசாரக் கூட்டத்தினரைத் திரட்டினர். இப் பிரசாரக் கூட்டத்தினர் தஞ்சை ஜில்லாவில் முதல் முதலாகத் தங்கள் பிரசாரத்தை ஆரம்பித்தனர். அதனல் எதிர்பார்த்ததற்கு மேலான வெற்றியை அடைந்தனர்; மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்தினர்; அந்தப் பிரசாரக் கோஷ்டினரின் தீய பிரசாரத்தின் போக்கை எடுத்துக்கூறி இளவாலிபர்களையும் மார்க்க பக்தர்களையும் தட்டி எழுப்பிவிட்டனர். காதியானி அஹமதி இயக்கத்தாரின் துர்க் கொள்கைகளைத் தடுப்பதற்காக இப் பிரசார கோஷ்டி சேர்க்கப்பட்டாலும் இக்கோஷ்டியினர் சத்திய சன்மார்க்கத்தை மக்களுக்கு எடுத்துக்கூறி இஸ்லாம் மார்க்கத்தின் மூலக்கொள்கைகள் யாவை? இஸ்லாத்திற்காக முன்னேர்கள் செய்த சேவைகள் யாவை ? இக்காலத்தில் முஸ்லிம்கள் நிலையென்ன ? இதற்காக முஸ்லிம்கள் செய்யவேண்டிய முக்கிய காரியம் யாது? என்ற விஷயங்களையும், முஸ்லிம்களுள் ஒற்றுமை ஏற்படவேண்டிய அவசியம், வீண் செலவுகளைக் குறைத்தல், சிக்கனம், அனுவசியமான ஆரம்பச்செலவுகளை நீக்குதல், மார்க்கத்துக்கு ஆகாத பித்அத்துகளை ஒழித்தல் ஆகிய விஷயங்களையும் எடுத்துக்கூறி மதப்பிரசாரம் புரிந்தனர். தவிர இஸ்லாத்தின் சிறந்த உன்னத கொள்கைகளுக்கு முரணன நோக்கத்துடன் ஏற்பட்ட கோஷ்டியினருடையவும் அவர்களது பிரசாரத்தினுடையவும் முறைகளையும் எடுத்துக்கூறி ஜவாஹிருல் புர்க்கான், இயேசுவின் இரகசியம், ஞானபோதம் முதலிய நூல்களில் காணப்படும் மார்க்க முரணனவைகளையும் எடுத்துக்காட்டி வந்தனர். இதனல், இக் கோஷ்டியினரின் சுற்றுப் பிரயாணத்தின்போது பிற மதத்தைச் சேர்ந்த நால்வர் இஸ்லாம்மதத்தைத் தழுவினர்; பற்பல இடங்களில் ஒற்றுமையில்லாதிருந்த முஸ்லிம்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்தி வைத்தனர்; தஞ்சை ஜில்லாவிலுள்ள முஸ்லிம் சங்கங்களை ஒன்றுகூட்டி ஐக்கிய மகாநாடு கூடுவதற்கான தீர்மானங்களைச் செய்தனர்; திருகுர்ஆனை தமிழில் மொழிபெயர்த்து அச்சிடுவதற்கு பொது ஜனங்களின் ஆதரவைத் தேடினர்; சன்மார்க்கக் கொள்கைகளைப்பற்றிய புத்தகங்களை இயற்ற ஒரு ஸ்தாபனத்தை மதராசில் நமது சங்கத்தின் மேற்பார்வையில் நிறுவுவதற்கான ஏற்பாடு செய்தனர்; நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் படத்தைப் பொறித்து புத்தகம் எழுதி பாட புத்தகமாக அச்சிட்ட ரோஜாப்பூ வாசகப் புத்தகத்தைக் கண்டித்துப் பல தீர்மானங்களை நிறைவேற்றினர். எனவே, இப் பிரசாரத்தினல் பொதுஜனங்கள் சன்மார்க்கக் கொள்கைகளை உணர்ந்துகொள்வதற்குப் பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. இவர்களின் பிரசாரம் முதல் முதலாக தஞ்சை டவுனுக்கு அடுத்த முஹம்மது பந்தரில் ஆரம்பமாயிற்று. இவ்வூரிலுள்ள அஞ்சும

னே அன்வாருல் இஸ்லாம் சங்கம் தனது வருஷாந்திரப் பூர்த்தி விழாவைக் கொண்டாடிற்று. அதற்கு ஹிஸ்புல்லாக்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அப்பால் கண்டியூர், பின்னர்முறையே கூத்தாநல்லூர், புதக்குடி மிஸ்பாஹுத்தீன் ராத்திப் சங்கத்தின் 18-ம் ஆண்டு பூர்த்திவிழா, அத்திக்கடை, பூதமங்கலம், கொடிக்கால் பாளையம், விஜயபுரம், அடியற்கைமங்கலம், மதுக்கூர், மன்னார்குடி மேலராஜவீதி மஹல்லா வாசிகள், கூத்தாநல்லூர், மன்னார்குடி மேலராஜவீதி சின்னக் கடைத்தெரு ஆகிய இரு ஜமாஅத்தாகள், பூதமங்கலம் ஆகிய இடங்களில் அழைக்கப்பட்டுப் பெரும் பெரும் கூட்டங்கள் நடைபெற்றன. இவ்வூர்களில் இக்கோஷ்டியார் வரவேற்கப்பட்ட விபரங்களையும் இவர்களின் பிரசார முறை சம்பந்தமான விபரங்களையும் நமது ஹிபாஜத்துல் இஸ்லாம், ஸைபுல் இஸ்லாம் பத்திரிகைகள் அவ்வப்போது பிரசுரித்து வந்திருக்கின்றன.

* ஹிஸ்புல்லா அங்கத்தினர்

மௌலானா மௌலவி ஸெய்யிது முர்த்தஜா சாகிப் பஹாதுர், M. L. A:—இப்பெரியார் திருச்சிவாசி. இந்தியா சட்டசபையிலும், அங்குள்ள ஹஜ்ஜுக்கமிட்டி, அந்தமான் மாப்பிள்ளைக் கைதிகள் சம்பந்தமான கமிட்டி, பைனான்ஸல் கமிட்டி முதலிய பல உபக்கமிட்டிகளில் அங்கம் பெற்று இந்தியாவுக்குச் செய்துவரும் சேவை போற்றத்தக்கதாகும். தவிரவும் முஸ்லிம் சர்வகக்ஷியில் நிர்வாக மெம்பராகவும் ஆல் இந்தியா முஸ்லிம் லீக் கௌன்சில் மெம்பராகவும் இருந்துவருகிறார்கள். கிலாபத் பிரசினை ஏற்பட்ட காலத்தில் இஸ்லாத்திற்காக ஒப்பற்ற ஊழியம்புரிந்தார்கள். சென்னை மாகாண முஸ்லிம் லீக் தலைவராக இருந்தார்கள். சென்னை மாகாண முஸ்லிம் கான்பரன்சின் பிரசிடெண்டாக இருக்கிறார்கள். திருச்சியில் இருக்கிற மஜ்லிசுல் உலமாவிற்கு ஆரம்பத்தில் பல அரிய சேவைகளைப் புரிந்தார்கள். திருச்சியில் முஸ்லிம் செக்கண்டரி ஸ்கூலைப் பொதுஜன உதவியால் நடத்திவந்து அதை கவர்ன்மெண்ட் முஸ்லிம் ஹைஸ்கூலாக்குவதற்கு அரும்பாடுபட்டார்கள். சென்னை மாகாண இஷாஅத்துல் இஸ்லாம் சங்கத்தை ஏற்படுத்துவதற்கு முக்கிய காரணஸ்தராகவும் அதன் நிர்வாகசபை அங்கத்தவராகவும் இருக்கிறார்கள். நமது சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்திற்கு வைஸ் பிரசிடெண்டாகவும் இருக்கிறார்கள்.

---

* ஹிஸ்புல்லாஹ் அங்கத்தினர்கள் பெயரை மாத்திரம் குறிப்பிட்டு விடுதல் போதுமானதாக இருந்தது. ஆனால் இவர்களைக் கலகக்காரர்கள் என்றும் பொய் பிரசாரகர்கள் என்றும் தா. இ. பத்திரிகை தூற்றி வருவதால் அவர்களின் தன்மையை நேயர்கள் உணரும் பொருட்டு அவர்களைப்பற்றி சிறிது எழுதவேண்டியதேற்பட்டது.

இவர் தாம் இக்கோஷ்டிக்கு ஆரம்பத்தில் தலைவராக இருந்தார்கள். முஹம்மதப்பந்தர் அஞ்சுமனே "அன்வாருல் இஸ்லாம்" சங்கப் பூர்த்தி விழா, புதக்குடி 'மிஸ்பாஹுத்தீன்' முஸ்லிம் ராத்திப் சங்கத்தின் 18-ஆம் ஆண்டுப் பூர்த்திவிழா, பூதமங்கலம் மகாநாடு, அடியற்கைமங்கலம் மகாநாடு, விஜயபுரம் மகாநாடுகளில் தலைமை வகித்தார்கள்.

மௌலானா மௌலவி முப்தீ ஷெய்கு ஆதம் சாகிப் பாக்கவீ:—இப்பெரியார், நமது தென்னாட்டின்கண் வதியும் முஸ்லிம்களுக்கு ஞானக்கண் திறக்கச் செய்ததும், முஸ்லிம் மார்க்கக் கல்விக்கு சர்வகலாசாலையாக விளங்குவதுமான இராயவேலூர் மத்ரஸே "பாக்கியாத் ஸாலிஹாத்" அரபிக்காலேஜில் சுமார் 35 வருஷமாகக் கல்வி போதித்து வருபவர். முஸ்லிம்களின் மதசம்பந்தமான ஐய வினாக்களுக்கு பதில் கூறுவதற்காக அம்மத்ரஸாவின் "தாருல் இப்தா" என்ற ஸ்தாபனத்தில் சுமார் 30 வருஷமாக உழைத்து வருபவராகவும், தற்போது அதன் முக்கிய ஆசிரியர்களில் ஒருவராகவும், தாருல் இப்தாவுக்குத் தலைவராகவும் இருந்து வருகிறார்கள். இவரிடம் கல்விபயின்ற மௌலவிகள் நூற்றுக் கணக்கானவர்கள் நமது தமிழ் தேசத்திலும், இலங்கையிலும், இந்துஸ்தானத்திலுமிருக்கின்றனர். இவர்கள் ஷை மத்ரஸா பாக்யாத் ஸாலிஹாத்தின் சார்பாக அனுப்பப்பட்டிருந்தார்கள். அத்திக்கடை மகாநாட்டுத் தலைவர்.

மௌலானா மௌலவி அஸ்ஸெயிது முஹம்மது ஷர்புத்தீன் சாகிப்:—இவர் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள வடகரைவாசி. வாணியம்பாடி, திருநெல்வேலிப்பேட்டை முதலிய இடங்களிலுள்ள அரபிக்கலாசாலைகளில் போதகாசிரியராக இருந்து தற்போது தஞ்சை ஜில்லா புதக்குடி மத்ரஸா 'அந்நூருல் முஹம்மதிய்யு'வுக்கு பிரின்ஸிபாலாக இருந்து வருகிறார்கள். இவரிடம் கல்விபயின்ற மாணவர்கள் அனந்தம்பேர். இவர் மார்க்கத் தீர்ப்பு என்ற பத்வாவும் கொடுத்து வருபவர். இவர், சுமார் 30 வருஷ காலமாக கல்வி போதிப்பதிலேயே ஈடுபட்டுழைத்த பெரியார். இவர், திருச்சி மௌலானா ஸெய்யிது முர்த்தஜா சாகிப் பஹாதுர் அவர்கள் இந்தியா சட்டசபையின் கூட்டத்திற்குச் சென்ற பின்னர் ஹிஸ்புல்லாஹ்வுக்குத் தலைமை வகித்தார். மதுக்கூர் மகாநாட்டுத் தலைவர்.

மௌலானா மௌலவி S. S. அஹ்மது ஸயீது சாகிப் பாக்கவீ:—இப்பெரியார் கருரையடுத்த சூலபுரத்தைச் சேர்ந்தவர். ஆரம்பத்தில் இராயவேலூர் மத்ரஸா "பாக்கியாத் ஸாலிஹாத்"தில் கல்வி பயின்ற பின் அம்மத்ரஸாவின் ஸ்தாபகரான அஃலா ஹஜ்ரத் ஷம்ஸுல் உலமா ஷாஹ் அப்துல் வஹ்

ஹாப் சாகிப் காதிரி குத்திஸ ஸிர்ருஹூ அவர்களின் காரியதரிசியாக இருந்தவர். (ஷை மத்ரஸாவின் ஸ்தாபிதத்துக்கு அரும்பாடுபட்டவரும் அதன் தலைமைப் பேராசிரியரும், கல்விக் கடலுமான அல்லாமா குலாம் முஹிய்யத்தீன் (சின்னஹஜ்ரத்) சாகிப் றஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் மைத்துனர்.) பின்னர் இரங்கோன், வேலூர், முதலிய இடங்களில் பத்திரிகைத் தொழில் புரிந்து இறுதியாக சென்னையில் "ஸைபுல் இஸ்லாம்" லிமிடட் கம்பெனியை நிறுவி அதற்கு மானேஜிங் டைரெக்டராகவும், அக்கம்பெனியினரால் வெளியிடப்படும் "ஸையுல் இஸ்லாம்" என்ற வாரம் இருமுறைப் பத்திரிகைக்கு ஆசிரியராகவும் இருந்து வருகிறார். இப்பத்திரிகையின் ஸ்தாபகருமாவார். இப்பத்திரிகை தமிழ் முஸ்லிம்களுக்கும் இந்தியர்களுக்கும் ஆற்றிவரும் அருந்தொண்டுகள் யாவருக்கும் தெரிந்த விஷயமே. நமது சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்திற்கு வைஸ் பிரசிடெண்டாகவும், சங்கத்தாரால் நடத்தப்பெறும் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" என்ற மாதப் பத்திரிகையின் எடிட்டோரியல் போர்டில் அங்கத்தினராகவும் இருக்கிறார்கள். கம்பத்திலுள்ள சென்னை மாகாண இஷாஅத்துல் இஸ்லாம் சங்கத்தை ஸ்தாபிப்பதற்குக் காரணஸ்தர்களாக இருந்தவர்களில் ஒருவராகவும் அதன் நிர்வாக சபை அங்கத்தினராகவும் இருந்துவருகிறார்கள். கொடிக்கால்பாளையம் மகாநாட்டுத் தலைவர்.

மௌலானா மௌலவி ஹாஜி ச. அ. முஹம்மது அலி சாகிப் பாக்கவீ :—இவர் தஞ்சை ஜில்லா கூத்தாநல்லூரில் பிறந்தவர். அவ்வூர் சின்னப்பள்ளி மத்ரஸா மன்பவுல் உலாவில் நாஜிராக இருந்தவர். அதன் கமிட்டியில் முக்கிய நிர்வாகியாக வுள்ளவர். சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தை ஸ்தாபித்தவரும் அதன் கௌரவ காரியதரிசியுமாவார். அச்சங்கத்தாரால் நடத்தப்படும் ஹிபாஜத்துல் இஸ்லாம் மாதப்பத்திரிகையின் எடிட்டோரியல் போர்டு அங்கத்தினருமாவர். கம்பத்திலுள்ள சென்னை மாகாண இஷாஅத்துல் இஸ்லாம் சங்கத்தின் ஸ்தாபகரில் ஒருவரும் அதன் நிர்வாக சபை மெம்பருமாவார். ஹிஸ்புல்லா என்ற இக்கோஷ்டியின் ஸ்தாபகரும், அதன் உயிர் நாடியுமாவார். இச்சுற்றுப் பிரயாணத்தில் மன்னார்குடி முதலாவது முஸ்லிம் மகா நாட்டிற்குப்பின் அக்கோஷ்டிக்குத் தலைவராகவும் இருந்தார்கள். பூதமங்கலம் 2-வது மகாநாட்டுத் தலைவர்.

மௌலானா மௌலவி ஷ. கு. முஹம்மது ஷர்புத்தீன் சாகிப் :- இவர் இராயவேலூர் அரபி சர்வகலாசாலையும், தென்னாட்டு அரபிக் கலாசாலைகளுக்குத் தாயுமான பாக்கியாத் ஸாலிஹாத் அரபிக் காலேஜ் ஸ்தாபகரான அஃலா ஹஜ்ரத் ஷம்ஸுல் உலமா

அப்துல் வஹ்ஹாப் ஷாஹ்காதிரி குத்திஸ ஸிர்ருஹு அவர்களின் பௌத்திரரும், ஷெ மத்ரஸாவுக்கு அருந்தொண்டாற்றி அதன் கியாதியை எங்கும் பரவச்செய்தவரும், அம்மத்ரஸாவுக்கு முதல் தலைமைப் போதகாசிரியராக இருந்தவரும் கல்விக்கடலுமான ஷம்ஸுல் ஆரிபீன் சின்ன ஹஜ்ரத் மௌலானா மௌலவி குலாம் முஹிய்யத்தீன் சாகிப் குத்திஸ ஸிர்ருஹு அவர்களின் மூன்றாவது புதல்வருமாவர். இவர் காங்கிரஸ் கிலாபத் பிரசினையில் வட ஆற்காடு ஜில்லாவை முதன்மையாக்கிய பெரியார். அது சமயம் "ஷேரே ஆர்காட்" என்ற பெயர் வாங்கியவர். சிங்கப்பூரில் காதியானி இயக்கம் பரவவிடாமற் செய்து காதியானியைச் சேர்ந்தவர்களை எதிர்த்துப் பிரசாரம் புரிந்து வெற்றிமாலை சூடியவர். சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம், இஸ்லாஹுல் அகாயித் சங்கங்களின் மார்க்க உபதேசியாக இருப்பவர். கம்பம் பள்ளத்தாக்கில் இஸ்லாம் மதத்தைத்தழுவி இருந்த நவ்முஸ்லிம்களைப் பார்த்து அவர்களுக்கு வேண்டுவன செய்வதற்காகச் சென்ற சென்னை இஸ்லாஹுல் அகாயித் சங்க டெபுடேஷனின் அங்கத்தினராவார். கம்பத்திலுள்ள சென்னை மாகாண இஷா அத்துல் இஸ்லாம் சங்கத்தின் நிருவாக சபைமெம்பர். அதன் பிரசாரகரில் ஒருவருமாவார். இராயவேலூர் ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தின் கௌரவக் காரியதரிசி. ஹிஸ்புல்லாக் கோஷ்டியின் பிரதமப் பிரசங்கியுமாவார்கள்.

மௌலானா மௌலவி S. S. முஹம்மது அப்துல் காதிர் சாகிப் **பாக்கவீ**:—இவர் மதுரை ஜில்லா உத்தமபாளையம் வாசி. சென்னை ஸைபுல் இஸ்லாம் பத்திரிகையில் உபபத்திராதிபராக இருந்தவர். திருச்சி இஸ்லாமிய நூற்பதிப்புச் சங்கத்தில் உதவி ஆசிரியராக இருந்தவர். சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் பத்திரிகைக்கு ஆரம்பத்தில் ஆசிரியராகவும் இருந்தவர். கம்பதிலுள்ள சென்னை மாகாண இஷா அத்துல் இஸ்லாம் சங்கத்தை நிருவுவதற்கும் அப்பிரதேசத்தில் ஆயிரக்கணக்கானவர்களை இஸ்லாத்தில் சேர்ப்பதற்கும் முக்கிய காரணஸ்தர்களா இருந்தவர்களில் இவரும் ஒருவர். இமாம் கஸ்ஸாலீ, உமர்பாரூக், ஞானிபானு என்ற தமிழ் நூல்களின் ஆசிரியர். இராயவேலூர் மத்ரஸா பாக்கியாத் ஸாலிஹாத்தின் பிரதம ஆசிரிராக இருந்த மௌலானா மௌலவி முஹத்திஸ் அப்துல் காதிர் பாக்ஷா சாகிப் அவர்களால் எழுதப்பட்ட "அல்பாக்கியாத் துஸ்ஸாலிஹாத்" என்ற கியாதிபெற்ற உருது பிக்ஹுகித்தாபை அம்மத்ரஸாவுக்காகத் தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்தவர். அந்நூல் இஷாஅத்துல் ஹஸனாத் பிதர்ஜமத்தில் பாக்கியாத் ஸாலிஹாத் என்ற பெயரால் அச்சிடப்பட்டிருக்கிறது. கூத்தாநல்லூர் சாந்தி

பிரகடன சபையாரால் எழுதப்பட்டு வரும் திருகுர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்புக்கு உரை ஆசிரியராகவும் இருக்கிறார்கள்.

மௌலானா மௌலவி A. M. R. அப்துர்றஹ்மான் சாகிப் பாக்கவீ:—இவர் பிறந்தது தென்காசி. புதக்குடி அந்நூருல் முஹம்மதிய்யு, அதிராம்பட்டணம் தவுக்கப்பள்ளி மத்ரஸா, பரங்கிப்பேட்டை மத்ரஸா காதிரிய்யா, லால்பேட்டை மத்ரஸா ஆகியவைகளில் முக்கிய ஆசிரியராக இருந்தவர். சிலகாலம் புதக்குடி மத்ரஸாவுக்குத் தலைமை ஆசிரியராகவும் நாஜிராகவு மிருந்தார்கள். தற்போது அத்திக்கடை அரபி மத்ரஸாவுக்கு முக்கிய ஆசிரியராக இருந்து வருகிறார்கள். நூற்றுக்கணக்கானவர் இப்பெரியாரிடம் கல்வி பயின்று மௌலவிகளாகி இருக்கின்றனர். சிங்கப்பூரில் காதியானிகளை எதிர்த்துப் பிரசாரம்புரிந்தவர்களில் இவரும் ஒருவர். கூத்தானல்லூர் சாந்திப் பிரகடன சபையாரின் திருகுர்ஆன் மொழிபெயர்ப்புப் பரிசீலனைக் கமிட்டியின் அங்கத்தினர்.

மௌலானா மௌலவி நூ. அப்துல் வஹ்ஹாப் சாகிப்:—இப்பெரியார் அய்யம்பேட்டையில் பிறந்தவர். காங்கிரஸ் கிலாபத் பிரசினையில் ஒத்துழையாமை இயக்கம் ஏற்பட்டகாலத்தில் அரசாங்கத்தாரால் சிறைக்கனுப்பப்பட்டு இரண்டு வருஷகாலம் சிறைவாச தண்டனை யனுபவித்தவர். பல மத்ரஸாக்களை ஸ்தாபித்தவர். ஹிஸ்புல்லாஹ் என்ற இக்கோஷ்டியில் பல அரிய ஊழியம் புரிந்தவர். இதற்காக இவருக்கு "அமீருல் ஜைஷ்" என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவரது திறமையினால்தான் இந்த சுற்றுப்பிரயாணம் மங்களமாக இருந்தது என்று சொல்லலாம். தற்போது பூதமங்கலம் மத்ரஸாவில் ஆசிரியராக இருக்கிறார்கள். பொதுஜன ஊழியம் செய்வதற்காக இவரால் அநேக சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. கருப்பூர், சிதம்பரம், வடகரை முதலிய மத்ரஸாக்கள் சாசுவதமாக நடைபெறுவதற்காக அவைகளுக்குச் சொத்து உண்டுபண்ணி வைக்கும் விஷயத்தில் மற்றவர்களுடன் இப்பெரியாரும் சேர்ந்து போற்றத்தக்கவிதமாக உழைத்திருக்கிறார்கள். மஜ்லிசுல் உலமா ஸ்தாபகமாகும் காலத்தில் ஒப்பற்ற ஊழியம் செய்து அதற்கு வாயிஸாகவும் இருந்ததுடன் இதர ஜில்லாக்களுக்கு அனுப்பப்பட்ட ஏனைய வாயிஸ்களை இன்ஸ்பெக்ஷன் செய்யும் சேவையும் புரிந்தவருமாகும்.

மௌலவி தே. மு. சுல்தான் முஹம்மது ஆலிம் சாகிப்:— இவர் கூத்தாநல்லூர் சின்னப்பள்ளி மத்ரஸா மன்பஉல் உலாவின் நாஜிராக இருந்துவருகிறார். இவரும் ஜனாப் மௌலவி ஹஸன் முஹம்மது சாகிபும் (கூத்தாநல்லூர்), ஜவாஹிருல் புர்க்

காளிலுள் குற்றங் குறைகளைக் கவனிக்கு விஷயத்தில் அதிகம் உழைத்தவர்கள்.

மௌலானா மௌலவி முஹம்மது ஸயீது சாகிப் பாக்கவி:—இவர் நெய்வாசல் வாசி. நீடூர் அரபி மத்ரஸாவின் தலைமையாசிரியர். இவர் சிறந்த பிரசங்கி. தமிழில் பாண்டித்தியமுடையவர். இவரது தமிழ் பிரசங்கம் மக்களின் மனதைக் கவர்ந்துவிட்டது. அநேகம் செய்யுள்களும் கீதங்களும் எழுதி இருக்கிறார்கள். மௌலவிகளுக்கு தமிழில் சுத்தமாகப் பிரசங்கிக்கத் தெரியாது எனப் பலர் கூறிவந்த கூற்றை இவரது பிரசங்கம் பொய்ப்படுத்திவிட்டது என்று கூறுவது மிகைப்படுத்திக் கூறுவதாகாது.

மௌலானா மௌலவி S. S. முஹம்மது காசிம் சாகிப்:—இவர் கோயமுத்தூரைச் சேர்ந்தவர். வாணியம்பாடி அரபிக் கலாசாலையில் பயின்றவர். உத்தமபாளையம் கௌதியா மத்ரஸா, மேட்டுப்பாளையம் அரபி மத்ரஸா முதலிய மத்ரஸாக்களில் பிரதம ஆசிரியராக இருந்தவர். கூத்தாநல்லூர் சின்னப்பள்ளி மத்ரஸா மன்பஉல் உலாவின் தலைமைப் போதகாசிரியர். நூற்றுக் கணக்கானவர்கள் இவரிடம் கல்வி பயின்றிருக்கின்றனர். மத்ரஸாவின் தாருல் இப்தா (மார்க்கத்தீர்ப்பு அளிக்கும் இலாக்கா) விலும் அங்கம் வகித்துப் பல பத்வாக்கள் அளித்து இருக்கிறார்.

மௌலானா மௌலவி நூ. அ. அப்துல்ஹை சாகிப் பாக்கவி:—நல்ல தமிழில் எழுதும் ஆற்றலுள்ளவர். "மார்க்கோபன் யாசங்கள்" என்ற புத்தகத்தை எழுதியவர்.

மௌலானா மௌலவி அப்துல் மஜீத் சாகிப் பாக்கவி, பண்டாரவாடை:—இவர் வாலிபராக இருந்தாலும் இக்கோஷ்டியில் ஆரம்பம் முதல் கடைசிவரை இருந்து சுற்றுப்பிரயாணம் செய்தது போற்றத்தக்கதாகும்.

மௌலவி அப்துல் ஹமீது சாகிப் நூரி, கிளியனூர்:— இவர் புதக்குடி மத்ரஸா அன்வாருல் முஹம்மதிய்யாவின் ஆசிரியர். மௌலவி M. S. M. சாகிப் நூரி, குளத்தூர். மௌலவி ஜைனுல் ஆபிதீன் சாகிப், புங்கனூர். மௌலவி முஹம்மது இஸ்மாயில் சாகிப், ஆக்கூர். மௌலவி அம்ஜத் இப்ராஹீம் சாகிப். இவர்களை யல்லாமல் அந்தந்த ஸ்தலங்களிலுள் மௌலவிகளும் முக்கியஸ்தர்களும் சேர்ந்து கொண்டனர். புதக்குடி, அத்திக்கடை, கூத்தாநல்லூர் ஆகிய அரபி மத்ரஸாக்களின் மாணவர்களும் இப்பிரசாரத்தில் சேர்ந்துகொண்டு பல மைல்கள் கால்நடையாகவும் சென்றனர். இவர்களில் அத்திக்கடை மத்ரஸா மாணவர்களில் தென்காசி அபுல்ஹஸன் சாகிப், சிட்டார்கோட்டை பஜுலுத்தீன் சாகிப் ஆகியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களையல்லாமல் கூத்தாநல்லூர் ஜனாப் ஹாஜி K. R. காதிர்பாஷா ராவுத்தர் அவர்கள் இந்த ஹிஸ்புல்லாக்களுக்கு செக்ரடரி என்ற முறையில் தமது அருமையான அலுவல்களையும் கவனியாது ஊர்ஊராக ஒவ்வொரு இடத்திற்கும் விஜயம் செய்து ஹிஸ்புல்லாக்களுக்கு வேண்டிய உதவிபுரிந்தது போற்றத் தக்கதாகும். இவர் கூத்தாநல்லூர் சைகோன் வியாபாரிகளில் ஒருவராவர்.

கூத்தாநல்லூர் முதல் மகாநாட்டு பிரசிடெண்ட் ஜனாப் ஹாஜி அ. ம. அப்துல்லா சாகிப் அவர்கள்:—கூத்தாநல்லூர், சிங்கப்பூர், மதராஸ் பிரபல வர்த்தகராகவும், அவ்வூர் மஹல்லா மஸ்ஜிது டிரஸ்டியாகவும் இருக்கிறார்கள். ஷை மத்ரஸா மன்பஉல் உலாவின் மீர் மஜ்லிசாகவும் (பிரசிடெண்டாகவும்) இருந்து வருகிறார்கள்.

ஷை 2-வது மகாநாட்டுத் தலைவர் ஜனாப் போ. நூ. முஹம்மது மிஸ்கீன் ராவுத்தர்:—பிரபல மிராசுதார். மத்ரசா மன்பஉல் உலாவின் பொக்கிஷதாராகவும் டிரஸ்டியாகவும் இருந்துவருகிறார்கள் கூத்தாநல்லூர் முஸ்லிம் லீக் மாஜி சேர்மன்.

மன்னார்குடி முதலாவது முஸ்லிம் மகாநாட்டுத் தலைவர் ஜனாப் S. K. முஹம்மது அலி ராவுத்தர்:—பிரபல வியாபாரி, ஹிம்மத்துல் இஸ்லாம் கமிட்டியின் மாஜித்தலைவர், மன்னார்குடி முனிசிபாலிட்டியின் மாஜி சேர்மன்.

ஷை 2-வது முஸ்லிம் மகாநாட்டுத்தலைவர் ஜனாப் ஹாஜி ஜ. மு. முஹம்மது இஸ்மாயீல் ராவுத்தர்:—இவர் பிரபல மிராசுதார். சைகோன் பிரபல வர்த்தகரும் ஜமீன்தாருமாவார். அவ்வூர் பிரஞ்சு கவர்ன்மெண்டில் இந்தியாவிலிருந்து வரும் இங்கிலிஷ் பிரஜைகளின் முஸ்லிம் தலைவர். கூத்தாநல்லூர் முஸ்லிம் லீகின் மாஜித் தலைவர். ஷையூர் மத்ரஸா மன்பஉல் உலாக்கமிட்டியின் காரியதரிசி, பல மஸ்ஜிதுகளுக்கும் மத்ரஸாக்களுக்கும் அநேகம் திரவியங்களை உதவி புரிந்திருக்கிறார்கள்.

நாம் இதுவரை கூறியதிலிருந்து ஹிஸ்புல்லாக்கள் ஒரு வீண் புரளிக் கோஷ்டி யென்றோ பொய்ப்பிரசாரக் கோஷ்டியென்றோ நீங்கள் கருத இடமில்லை என்பது நன்கு தெரியவரும். இவர்கள் யாவரும் ஒவ்வொரு தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களேயன்றி அலுவலில்லாமல் இப்பிரசாரத்தில் ஈடு பட்டவர்கள் என்று கூறுவதற்கில்லை. இன்னோர் தங்களுடைய முக்கியமான பல அலுவல்களையும் ஒதுக்கிவிட்டு இந்த சன்மார்க்கப் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்ததால் இந்த பிரசாரம் எவ்வளவு முக்கியமாக தேயுற்றிருந்ததென்பது நன்கு விளங்கும்.

சென்னை தாருல் இஸ்லாம் பத்திரிகையும் பா. தாவூத்சாவும்

ஆரம்பத்தில் தஞ்சை ஜில்லா கும்பகோணம் டவுனுக்குச் சமீபத்திலுள்ள நாச்சியார் கோவிலில் முஸ்லிம் சங்கமென்று ஒரு சங்கமிருந்தது. அச்சங்கத்திற்கு திருநறையூர் பா. தாவூத்சா என்பவர் தலைவராக இருந்தார். இந்த சங்கம் மாதந்தோறும் ஒவ்வொரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டு வந்தது. அவைகள் யாவும் ஒன்று சேர்க்கப்பட்டு "முஸ்லிம்சங்க முதற்கமலம்" "முஸ்லிம் சங்க மறுகமலம்" என்ற பெயரால் புத்தகமாகப் பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. அப்பால் அச்சங்கத்தார் "தத்துவ இஸ்லாம்" என்றபெயரால் ஒரு மாதப்பத்திரிகையை 1921-ம்வரு மே மாதம் முதல் வெளியிட்டனர். அப்பத்திரிகையின் ஆசிரியர் யார் என்று எழுதாமலே அப்பத்திரிகை பிரசுரிக்கப்பட்டுவந்தது. ஆனால், அதில் எழுதப்பட்டவியாசம் பெரும்பாலும் அச்சங்கத் தலைவராலேயே மொழிபெயர்க்கப்பட்டதாக இருக்கலாம். இதை நிச்சயமாக வற்புறுத்த நாம் தயாராக இல்லை. ஏனெனில், அவ்வியாசத்தின் போக்கும், எழுத்து நடையும் இதை அறிவிக்கின்றன. பின்னர் அப்பத்திரிகை நாச்சியார் கோவில் முஸ்லிம் சங்கத்தைவிட்டு மாறி இங்கிலாந்து வோக்கிங் அஹ்மதியா மெஷினுக்குச் சொந்தமாயிற்று. அப்பொழுது அதற்கு லாகூரிலுள்ள காதியானிகளின் அஹ்மதியா சங்கத்தின் முக்கியஸ்தர்களில் ஒருவரும் மிர்ஜாகுலாம் அஹ்மத் காதியானியால் 4-வது கலீபா என்று நியமிக்கப் பட்டவருமான காஜா கமாலுத்தீன் சாகிபும், நாச்சியார் கோவில் முஸ்லிம் சங்கத்தலைவராக இருந்த பா. தாவூத் சாவும் ஆசிரியர்களாக இருந்தனர். அப்பால், அது தாருல் இஸ்லாம் என்ற மாற்று பெயரால் பா. தாவூத்சாவை மாத்திரம் ஆசிரியராகக் கொண்டு பிரசுரிக்கப்பட்டு வந்தது. பின்னர் நெல்லிக்குப்பம் ஹாபிஸ் A. N. முஹம்மது யூசுப் சாகிபை முதலாவது ஆசிரியராகவும், பா. தாவூத்சாவை இரண்டாவது ஆசிரியராகவும் கொண்டு பிரசுரிக்கப்பட்டது. இப்பொழுது அந்தப் பத்திரிகைக்கு பா. தாவூத்சா முதலாவது ஆசிரியராகவும் ஹாபிஸ் A. N. முஹம்மது யூசுப் சாகிப் இரண்டாவது ஆசிரியராகவும் இருக்கின்றனர்.

தாவூத்சாவும் காதியானிகளும்

"தத்துவ இஸ்லாம்" என்று ஆரம்பிக்கப்பட்டு அப்பால் "தாருல் இஸ்லாம்" என்ற பெயரால் மாற்றப்பட்ட பத்திரிகைக்கு பா. தாவூத்சா ஆசிரியர். இவர் காஜா கமாலுத்தீனால் தென்னாட்டு முஸ்லிம் மிஷனரியாக நியமிக்கப்பட்டார். இவர் மத விஷயங்களில் அதிகம் தெரியாதிருந்து அப்பால் காஜா கமாலுத்தீனால் நடத்தப்படும் இஸ்லாமிக் ரெவியூவைப் படித்த

பின்பே இஸ்லாத்தின் பெருமையை யுணர்ந்து தம்முடைய ஈமானைப் புதுப்பித்துக்கொண்டு நவ் முஸ்லிமாகிவிட்டாராம். இவ் விபரம் லாகூரில் வெளியாகும் "இஷா அத்தே இஸ்லாம்" என்ற மாதாந்த உருதுப் பத்திரிகையின் 1921-ம் வருஷத்து ஆகஸ்டு மாத இதழின் 459-ம் பக்கத்தில் காஜா கமாலுத்தீனால் எழுதப்பட்டிருக்கிறது. இவ் விபரம் நாச்சியார்கோவிலிலிருந்து அவ் வூர் முஸ்லிம் சங்கக் காரியதரிசியால் பப்ளிஷ்செய்த "தத்துவ இஸ்லாம்" பத்திரிகை கமலம் 3, இதழ் 5-ன் டைட்டில் பேஜ் 2-ம் பக்கத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது :—

"இச்சமயம் என்னுடைய இரங்கூன் நண்பர்களுக்கு யான் பொதுவாக நன்றி கூறியபின்னர் அவ்வூர்ப் பிரபல வியாபாரியாகிய ஸர், அப்துல்கரீம் ஜமால் அவர்களுக்கு நான் சொந்தமாக என்னுடைய நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். வோக்கிங்கிலுள்ள முஸ்லிம் மிஷனை ஆதரிக்கவேண்டுமென்று அவர்களை நான் வேண்டிக்கொண்டபொழுது மாதம் ஒன்றுக்கு 450 ரூபா விகிதம் மூன்று வருஷகாலம்வரையில் கொடுப்பதாக அவர்கள் வாக்குறுதி கூறினார்கள். ஒவ்வொரு மாதமும் கிடைக்கும் இந்தத் தொகையைக் கொண்டு இங்கிலாந்தில் மூன்று தேர்ச்சியான மிஷனரிகளை வைத்து மிக நேர்த்தியான வேலை செய்யலாம். இறைவ னருளால் ஸர் ஜமால் அவர்களின் மிஷனரி பண்டுக்காக முதன்முதல் எனக்குக் கிடைத்தவர் சென்னை சர்வகலாசாலையில் பி. எ. பட்டம் பெற்றவரும் மதுரைத்தமிழ்ச் சங்கம் முதலிய பல ஸ்தாபனங்களிலும் தங்கப்பதக்கம் முதலிய பரிசுகள் பெற்றவருமான நாச்சியார் கோவில் பா. தாவூத்சா சாகிப் என்னும் பெயரையுடைய தென்னாட்டு முஸ்லிம் மிஷனெரியாயிருக்கிறார். (இவர்தான் எமது முஸ்லிம் சங்கத்தலைவர். பர்.) இவர் சர்க்கார் உத்தியோகத்தில் ஸப் மாஜிஸ்ட்ரேட்டாக வேலை பார்த்துவந்தார். இவருக்கு இப்பொழுது வயது சுமார் 40-க்குள் தான் இருக்கும். இவர் ஆங்கிலம் கற்றதன் பயனாக அதற்குரிய முறைமையிலேயே காலங் கழித்து வந்தார். அம் மேல்நாட்டுக் கல்வியானது அவருடைய மூளையினின்றும் ஈமான் இஸ்லாம் சம்பந்தமான அனுஷ்டானத்தையே அடியோடு கெடுத்துவிட்டது. மார்க்க விஷயத்தில் அவர் மிக மனமுடைந்தவராகவே இருந்தார். அவர் சில காலம் நம்முடைய "இஸ்லாமிக் ரெவீயூ" வென்னும் ஆங்கில மாதாந்த சஞ்சிகையை அதிக கவனமாகப் படித்துவந்தார். கடைசியில் அவர் எனக்கெழுதிய முதற்கடிதம் நான் ஸிம்லாவிலிருக்கும்போது 1919-ம் வருஷம் ஜுலை மாதம் என்கைக்கு எட்டியது. அதில் அவர் பின்வருமாறு ஒரு சந்தோஷகரமான சுப செய்தியை அறிவித்திருந்தார். இஸ்லாமிக் ரெவியூவை அவர்

படித்து வந்ததனுலேயே இஸ்லாத்தின் பெருமையை யுணர்ந்து அவர் தம்முடைய ஈமானைப் புதுப்பித்துக்கொண்டு நவ் முஸ்லி மாய் விட்டதாகவும், இதனுல் அவர் இனி இஸ்லாத்துக்கே தம் முடைய உடல்பொருள் ஆவிமூன்றையும் தத்தம் செய்வது சத் திய மென்றும் உறுதி கூறியிருந்தார். இக்கடிதத்தில் கண்ட விஷய சம்பந்தமாகவும், இஸ்லாத்துக்கு அவர் உழைக்கவேண்டிய விதத்தின் சம்பந்தமாகவும் நாம் அவரைச்சென்னையில் நேரில் சந்தித்துப் பேசியபொழுது எல்லா விஷயங்களும் சாங்கோபாங்க மாய் யோசிக்கப்பட்டன. பிறகு இவருடைய ஈமான் நாளுக்கு நாள் அதிகமாக உறுதியடைந்து இஸ்லாத்துக்கு உழைக்க வேண்டுமென்னும் அவாவானது காட்டுத்தீபோல் கொழுந்து விட்டெரிந்து கொண்டே வந்தது. இவ்வாறு எரிந்து வந்த ஜுவாலையானது நாளடைவில் அதிகமாக அனல் விட்டெழுந்து சில மாதங்களுக்குமுன் அவருடைய உலகப்பற்றை யெல்லாம் பஸ்பமாக்கிக் கடைசியில் தம்முடைய ஸர்க்கார் உத்தியோகத்தை யும் ராஜிநாமாச்செய்யும்படி ஆக்கிவிட்டது. அவர் இப்பொழுது இவ்வுலக இன்பத்தையெல்லாம் உதைத்துத் தள்ளிவிட்டிருக்கி ருர். மேலும் இவர் ஒரு முஸ்லிம் மெஷனெரியாக மேல் நாட் டில் வோக்கிங்குக்குச் செல்லவும் ஆயத்தமாக இருக்கிருர்.''

"சுதேசமித்திரன் 17-8-21—தேசபக்தன் 19-8-21" என்று எழுதப்பட்டிருக்கிறது. எனவே இவ்வியாசத்திலிருந்து அவர் காஜா கமாலுத்தீனுல் சம்பளத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிருர் என்பதும், காஜா கமாலுத்தீனின் பத்திரிகையை பார்த்த பின்பே அவருக்குப் புது ஈமான் வந்ததாகவும் தெரிகிறது.

இதற்கப்புறம் கமலம் 4, இதழ் 3-ன், 89-வது பக்கத்தில் "இங்கிலாந்து யாத்திரை" என்னும் உபதலையங்கத்தின்கீழ் "வெகுநாளாய் ஆவலுடன் எதிர்பார்த்துவந்த நமது சங்கத் தலை வரின் இங்கிலாந்து யாத்திரையானது சென்ற பிப்ரவரி மாதம் 18-தேதியன்று சனிக்கிழமையில் பம்பாய்த் துறைமுகத்தைவிட்டு லண்டன்மாநகருக்குப் புறப்பட்ட "மாஸிடோனியா" என்னும் ஸ்டீமரில் நிகழ்ந்ததென்பதை நம் சந்தாநேயர்களுக்கு மிக மகிழ்ச் சியுடன் தெரிவித்துக்கொள்ள விருப்பப்படுகிருேம்" என்னும் வாக்கியத்தால் இவர் லண்டன் போந்த விபரத்தைத் தெரிந்து கொள்கிருேம். தாமும் லண்டனில் இஸ்லாமிய ஊழியம் செய்ய வேண்டுமென்னும் எண்ணம் தாவூத் சாவுக்கு 1916-ம் வருஷம் முதல் இருந்ததாகத் தெரியவருகிறது. இவ்விபரத்தைத் தமது "தாருல் இஸ்லாம்" பத்திரிகையின் 1926 ஜனவரிமீ இதழின் 7-ம் பக்கத்தில் "அப்படிப்பட்ட இஸ்லாமிய ஊழியத்தில் யாமும் ஈடுபட்டு உழைக்கலாமென்னும் ஆர்வம் மட்டும் 1916 முதல் எம்

முடைய உள்ளத்தின்கண் ஊசலாடிக்கொண்டிருந்தது. ஆனல், அப்படிப்பட்ட பெரும் பாக்கியம் நமக்கு எங்ஙனம் கிட்டப்போகிறதென்னும் பெருமூச்செறிவும் ஒருவாறு எமது ஊக்கத்தைத் தளர்த்திக்கொண்டுவந்தது" என்று வரைந்திருக்கிருர். எனவே 1916 முதல் எதிர்பார்த்து பெருமூச்செறிந்த விஷயம் 1922 பிப்ரவரிமீ 18உ சனிக்கிழமையன்று கிட்டிவிட்டது. இதுவரை நாம் கூறியதிலிருந்து அவர் எத்தனை ரூபாய் சம்பளம் வாங்கினர் என்ற விவரமும் எதற்காக அந்த சம்பளம் கொடுக்கப்பட்டது என்ற விபரமும் தெளிவாகத் தெரியவில்லை.

ஆயினும், "அதுகாலையில் காஜா கமாலுத்தீன் மலாய் நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டிருந்தார். அவர் சிங்கைக்கு விஜயம் செய்தபோது அங்குள்ள பிரமுகர்கள் கூடிக்கொண்டு மௌலவி முஹம்மதலியின் ஆங்கில குர்ஆன் மொழிபெயர்ப்பைத் தமிழில் மொழிபெயர்த்துத் தரவேண்டுமென்று வேண்டிக்கொண்டனராம். அதற்காக அவர் எம்மை வோக்கிங்குக்கு வரும்படி கேட்டுக்கொண்டார்" என்று எழுதி இருப்பதிலிருந்து காதியானிகளின் லாகூர் பார்ட்டியின் தலைவரான முஹம்மதலியின் திரு குர்ஆன் ஆங்கில மொழிபெயர்ப்பைத் தமிழில் மொழி பெயர்க்கத்தான் எனத் தெரிந்துகொள்கிறோம். எனினும் "ஆங்குச் சென்று இம்மொழி பெயர்ப்பு வேலையைத் தொடங்க முயற்சி யெடுத்துக்கொள்ளுமுன் ஐரோப்பிய மகாயுத்தத்துக்குப்பின் உலகமுழுதும் நிகழ்ந்த வியாபாரப் புரட்சியின் காரணமாகப் பெரும் பெரும் வர்த்தகர்களெல்லோரும் தலை சாய்ந்து விட்டதனல் அம் மேல்நாட்டில் இருந்தவரையில் மேற்கூறிய மொழி பெயர்ப்புக்குரிய வேலை யொன்றும் ஆரம்பிக்கப் படவில்லை" என்ற வியாஸத்திலிருந்து மொழிபெயர்ப்பு வேலை லண்டனில் துவக்கப்படாமல் இந்தியா திரும்ப நேரிட்டது என்பதைத் தெரிந்துகொள்கிறோம். தவிரவும்,

தத்துவ இஸ்லாம் கமலம் 4, இதழ் 10, பக்கம் 375-ல் "குர்ஆன் மொழிபெயர்ப்பு" என்ற தலைப்பின்கீழ் "மௌலவி முஹம்மதலியின் குர்ஆன் ஷரீபானது ஆங்கிலத்தில் அச்சிடப்பட்ட முதற் பதிப்பு ஐயாயிரமும் விலையாய்விட்டதனல் இரண்டாம் பதிப்பு 10,000 அச்சிடப்பட்டு அது தற்போது அதிகமாக விற்று வருகிறது. இதன் உருது மொழி பெயர்ப்பு ஷெ மௌலவி சாகிபாலேயே எழுதப்பட்டு அச்சிலிருந்து வருகிறது. அச்சான வரையில் விற்கப்பட்டும் வருகின்றது. இந்தக் குர்ஆன் வியாக்கியானத்தை மலையாள பாஷையிலும் மலேயா (மலாய்) பாஷையிலும் அவ்வப்பாஷையினர் மொழிபெயர்ப்பதாக இப்பொழுது கேள்விப்படுகிறோம். யாம் ஏற்கனவே கூறியதுபோல் தமிழிலும்

தற்போது இதை (மௌல்வி சாகிபின் குர்ஆன் ஷரீபை) மொழி பெயர்க்க ஆரம்பித்திருக்கிறோம். இதன் காபிரைட் எம்மைச் சார்ந்ததாகும். ஆதலின், இத் தமிழ் மொழிபெயர்ப்பை வேறு யாரேனும் வெளிப்படுத்துவாராயின் அதனாலேற்படும் காப்பி ரைட் சட்டப்பிரகாரமுள்ள நஷ்டத்துக்குக் கட்டுப்படும்படி நேரிடுமென்று யாம் எல்லோருக்கும் அறிவித்துக் கொள்ளு கிறோம். இன்னும் சிறிது காலத்துக்குள் எமது தமிழ் மொழி பெயர்ப்பு (குர்ஆன் ஷரீபு) வெளிவரலாமென்று எதிர்பார்க்கி றோம்'' என்று எழுதி இருப்பதிலிருந்து தாவூத்சா சாகிப் வெளியிட்டுவரும் "ஜவாஹிருல் புர்க்கான்" என்ற தமிழ் தப்ஸீர் ஷெ மிர்ஜாகுலாம் அஹ்மத் காதியானியின் கலீபாவான முஹம் மதலியின் தப்ஸிர்தான் என்று சந்தேகமறத் தெரிந்துகொள்கி றோம். இவ்வாங்கில தப்ஸீர் எகிப்து கவர்ன்மென்டால் பறிமுதல் செய்யப்பட்டது என்பதும், எகிப்து தேசத்து உலமாக்களால் அத்தப்ஸீர் மார்க்கத்துக்கு முரணானது என்று பத்வாக் கொடுக் கப்பட்டது என்பதும் பத்திரிகை படிப்பவருக்கு நன்கு தெரிய வரும். தவிரவும், ஆங்கில தப்ஸீரில் அருமையாகக் காணப்படும் விஷயம் மிர்ஜாகுலாம் அஹ்மதிடமிருந்து தாம் கற்றுத் தெரிந்து கொண்டவிஷயம் என முஹம்மது அலியே எழுதி இருக்கிறார். மிர்ஜாகுலாம் அஹ்மத் நபிமார்களின் அற்புதச் செய்கைகளை மறு த்து அதற்குக் கூடார்த்தம் செய்பவரென்றும், ஹஸ்ரத் ஈஸா (அலைஹி) அவர்கள் சிலுவையில் அறையப்பட்டார்கள் என்றும், அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்றும் கூறுபவர் என் பதையும் முந்திய அத்தியாயத்தில் தெரிந்துகொண்டிருப்பீர்கள். இவ்விஷயம்தான் முஹம்மதலியின் ஆங்கிலத் தப்ஸீரில் வற்புறுத் தப்படுகிறது. இவைகள்தாம் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட் டிருக்கிறது. எனவே, குலாம் அஹ்மத் காதியானியின் கொள்கை கள் ஜவாஹிருல் புர்க்கான் என்ற தமிழ் தப்ஸீரினால் பிரசாரம் செய்யப்படுகின்றன என்பதை மீண்டும் மீண்டும் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை என்றே நாம் கருதுகிறோம். இப்புத்தகமன்றி மிர்ஜாகுலாம் அஹ்மத்வால் எழுதப்பட்ட "பல்ஸபயே உஸூலே இஸ்லாம்'' என்ற உருது புத்தகத்தை ஷெ முஹம்மது அலி என் பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அதற்கு Teachings of Islam என்று பெயர்வைத்திருக்கிறார். இந்த இங்கிலிஷ் புத்த கத்தை தாவூத்சா தமிழில் மொழிபெயர்த்து இருக்கிறார். இதுவு மன்றி "இயேசுவின் இரகசியம்'' என ஒரு புத்தகம் முகம்மதலி யால் எழுதப்பட்டது தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு தாவூத் சாவால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இவைகளையல்லாமல் தாவூத்சா எழுதிய மத சம்பந்தமான புத்தகங்களிலும், பத்திரி கையின் கட்டுரைகளிலும் அந்த மிர்ஜாகுலாம் அஹ்மதுவின்

கொள்கைகளே வற்புறுத்தப்பட்டுப் புதுப்புதுப் பெயரால் வெளியிடப்படுகின்றன. இவைகளை எல்லாம் கவனிக்கும்போது பா. தாவூத்சா மிர்ஜாகுலாம் அஹ்மத் காதியானியின் கொள்கைகளைப் பிரசாரம் செய்யவே அவர் தென்னாட்டு முஸ்லிம் மிஷனரியாக காஜா கமாலுதீனுல் நியமிக்கப்பட்டிருந்தார் என்பதையும், இன்றளவும் அதையே செய்துவருகிறார் என்பதையும் தெரிந்து கொள்கிறோம். அன்றியும் இவர்களது பார்ட்டியாரால் இவருக்கு மாதச் சம்பளம் ரூ. 200 கிடைத்து வந்ததென்பது தாருல் இஸ்லாம் 2-8-1929-ம்௵ இதழின் 6-ம் பக்கத்தில் அதன் ஆபீஸ் மானேஜர் இ. அ. எழுதியிருக்கிற "தாருல் இஸ்லாமும் காதியானி விஷயமும்" என்ற வியாசத்திலிருந்து தெரியவருகிறது. அது வருமாறு: "இவர் இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்ததுமுதல் 1924 க்குமேல் லாஹுரோரின் தென்னாட்டு மிஷனரியாயிருக்க முடியாதென்று (லாஹுரோரின் மாதச்சம்பளம் ரூ. 200-ம் வேண்டாமென்று இவர் கூறிவிட்டார்) நிராகரித்து விட்டதுமுதற்கொண்டு இவருக்கும் (பா. தா.) லாஹுரோருக்கும் சிநேகபாவமுமில்லையென்பதை யானறிவேன்." இவ்வியாசத்தில் அவர் வாங்கிய சம்பள விபரம் தெரியவருவதுடன் லாஹுரோருக்கும் பா. தா-வுக்கும் சம்பந்தமில்லை என்பதை வற்புறுத்தப்படுகிறது. இவ்வற்புறுத்தல் சரியானதன்று. ஏனென்றால் ஷை பத்திரிகையிலேயே லைட் பத்திராசிரியருக்கும் தாவூத்சாவுக்கும் நடந்த கடிதப் போக்குவரத்து எழுதப்பட்டிருக்கிறது. அதன் விபரம் வருமாறு:—

தாருல் இஸ்லாம் ஆபீஸ்,
மதராஸ், 7-1-26.

ஆசிரியருக்கு,
லைட் பத்திரிகை, லாஹுர்.

அருமந்த ஐயா!

1926 ஜனவரி முதல் தேதி வெளியான தங்கள் லைட் பத்திரிகை அனுபந்தத்தில் அச்சிடப்பட்டுள்ள படங்களில் எனது தாருல் இஸ்லாத்தையும் சேர்த்துத் தாங்கள் அதனடியில் "இஸ்லாத்தின் ஜோதியைப் பரத்தும்பொருட்டு அஹ்மதியாக் கூட்டத்தார் லாஹுர்ப் பார்ட்டியால் வெளியிடப்படும் பத்திரிகைகள்" என்றும் வரைந்துள்ளீர்கள். "தாருல் இஸ்லாம்" இஸ்லாத்தின் ஜோதியைப் பரப்பும்பொருட்டே முக்கியமாய் அமைந்துள்ளதென்பதை அதிக சந்தோஷத்துடன் ஒத்துக்கொள்கிறேன். ஆனல், இதன் பிரசுரமானது அஹ்மதியாக் கூட்டத்தினர் லாஹுர் பார்ட்டியால் வெளியிடப்படும் என்று தாம் உரிமைக் கொண்டாடுவதைக் கண்டு யான் பெரிதும் வருந்துகிறேன். இஃ

துண்மையன்று. "தாருல் இஸ்லாம்" இப்பொழுது என்னுலேயே யதேச்சையாய் என் சொந்தத் தனிப்பத்திரிகையாக நடத்தப்பட்டு வருகிறது. என் பத்திரிகை லாஹூர் அஹ்மதியாப் பார்ட்டியால் வெளியிடப்படவில்லை யென்பதை இப்பொழுது நீர் வெளிப்படையாய்த் தெரிந்துகொண்டுவிட்டீர். ஆதலின், லைட்டின் அடுத்த சஞ்சிகையில் உம்முடைய ஸ்டேட்மெண்டைத் தயைகூர்ந்து திருத்துவீரென்று எதிர்பார்க்கிறேன். இன்றேல், உமது மதிப்பேறப்பெற்ற மேற்படிப் பத்திரிகையில் இக்கடிதத்தைப் பிரசுரிக்கவேணும். நீர் தயை கூர்வீராக.

உமது நம்பிக்கையுள்ள

பா. தாவூத்ஷா.

இதற்கு லைட் ஆசிரியர் கீழ்க்கண்ட பதிலை விடுத்துள்ளார்:—

The Light

Ahmadiya Buildings

Lahore (India)

11—9—1929.

அருமந்த ஷாஹ்சாகிப்,

1926 ஜனவரி முதல் தேதி வெளியான "லைட்"டுக்கு அனுபந்தமாய் பிரசுரிக்கப்பட்டதில் பொறிக்கப்பட்டிருக்கும் படங்களின் அடியில் குறிப்பிட்டிருக்கும் விஷயத்தைத் தாங்கள் தப்பர்த்தம்செய்துகொண்டீர்களென்று நான் அஞ்சுகிறேன். அங்கே காட்டப்பட்டிருக்கும் பத்திரிகைகளெல்லாம் அஹ்மதியா அஞ்சுமன் இஷாஅத்தே இஸ்லாம் லாஹூர் சங்கத்தால் நடத்தப்படுகின்றனவென்பது அதன் பொருளன்று. உண்மையில் அவற்றுள் பெரும்பான்மையானவை அப்படியில்லை.....................இந்த அஞ்சுமன் அங்கே காண்பிக்கப்பட்டிருக்கும் 7-ல் 3 பத்திரிகைகளுக்குமட்டுமே நேரில் ஜவாப்தாரித்தனம் வகித்திருக்கின்றது. ஆனால், தாங்கள் அந்த புட்நோட்டைத் தப்பர்த்தஞ் செய்துகொண்டீர்கள். ....விஷயத்தைத் தாங்கள் (இப்பொழுது) அறிந்துகொண்டீர்களென்று நான் நினைக்கிறேன். இன்னமும் நீர் விரும்புவீராயின் உமது பதில் கிடைத்தவுடன் லைட் பத்திரிகையில் நான் விவரிக்கச் சித்தமாயிருக்கிறேன்................

உமது உண்மையுள்ள

யஅகூப்கான், ஆசிரியர்.

விஷயம் இவ்வாறிருக்க உண்மையறியாது யாரோ "மன்சூர் இலாஹி" பா. தா. வைப்பற்றி "எக்ஸ்பார்ட்டியாய்" ஏதோ எழுதிவிட்டதை வைத்துக்கொண்டு சிலோன் காதியானிப் பத்திரிகை துள்ளிக்குதிப்பதில் யாது பயன்? இது யாரை ஏமாற்ற?"

என்று எழுதி இருக்கிறார். இக்கடிதத்திலிருந்து தாவூத்சாவுக்கு தாருல் இஸ்லாம் சொந்தமானது என்று தெரிந்துகொள்கிறோம். ஆனால், அது அஹ்மதிக்கொள்கையைப் பிரசாரம் செய்வது என்பது மறுக்கப்படவில்லை. லைட் ஆசிரியர் மிஸ்டர் யஅகூப்கான் எழுதிய பதில் கடிதம் இதைத்தான் வற்புறுத்துகிறது. இதனால்தான் தாவூத்சா அக்கடிதத்திலுள்ள இரண்டொரு வாக்கியத்தை பிரசுரிக்காமல் நிறுத்திக்கொண்டு.....................இம்மாதிரி அடையாளமிட்டு அக்கடிதத்தைப் பிரசுரித்திருக்கிறார். இவர் துள்ளிக்குதித்துக் கடிதம் எழுதியதுபோல் விஷயத்தை விவரிக்கும்படி அவர் மறுபடியும் லைட் ஆசிரியரைக் கேட்டிருந்தால் அவர் தமது பத்திரிகையில் இவ்வுண்மையைப் பிரசுரித்திருப்பார்; நாம் அனைவரும் விஷயத்தை நன்கு உணர்ந்துகொள்வோம். எனவே, குட்டு வெளிப்பட்டுவிடும் என்பதை பயந்த தாவூத்சா லைட் பத்திரிகையில் அதனை விவரிக்கும்படி கூறவும் காணோம். தமது பத்திரிகையிலும்..........................அடையாளமிட்டு விஷயத்தை மறைத்துக் கடிதத்தைப் பிரசுரித்திருக்கிறார்.

இவ்விதம் சூழ்ச்சிசெய்த இவர்கள், லாகூர் அஹ்மதியா அஞ்சுமனே இஷாஅத்துல் இஸ்லாம் சங்கக் காரியதரிசியான மன்சூர் இலாஹி என்பவர் தாவூத்சா அஹ்மதியர்தாம் என்றும், அவர் முஹம்மதலியிடம் பைஅத்துச் செய்தவர் என்றும் வற்புறுத்தி சிலோன் வர்த்தகர் ஒருவருக்கு எழுதிய நிரூபத்தை இக்கட்டுரையின்மூலம் மறுக்க முன்வந்ததுதான் வேடிக்கை. இவர்கள் நினைப்பதுபோல் உலகம் இல்லை என்பதை இவர்கள் உணரவில்லைபோலும்.

உண்மை என்னவென்றால், தாவூத்சா லாஹூர் முஹம்மதலியிடம் பைஅத்துச் செய்து அவருடைய பிரமாணப் பத்திரத்தில் கையொப்பமிட்டிருக்கிறார். 2-8-1929-ந் தேதி வெளியான தாருல் இஸ்லாம் பத்திரிகையிலும் இவர் பிரமாணப் பத்திரத்தில் கையொப்பமிட்ட விஷயம் கூறப்பட்டிருக்கிறது. ஷெயார் எழுதிய ஆங்கிலத் தப்ஸீரை மொழிபெயர்ப்பதற்காக மாதச் சம்பளம் பெற்றது உண்மை. ஆனால், அவர் சம்பளத்தை நிறுத்திவிட்டதாகக் கூறுகிறார். ஆயினும், அவர் தம் பிரசார வேலையின் போக்கில் மாத்திரம் எவ்வித மாறுதலும் ஏற்பட்டில்லை என்பது பிரத்தியக்ஷம். இவர் உண்மையாகவே அஹ்மதி இயக்கத்தை விட்டுப்பிரிந்திருந்தால் லைட் ஆசிரியருக்கு அவர் எழுதிய கடிதத்தின் போக்கு வேறுவிதமாக இருந்திருக்கும்.

தாருல் இஸ்லாம் பத்திரிகை தமக்குத்தான் சொந்தம் என்று வற்புறுத்தியிருப்பதுடன் அஹ்மதிய இயக்கத்திற்கும் தமக்கும் எவ்விதச் சம்பந்தமுமில்லை என்பதையும் தெளிவாக எழுதி இருப்

பார். தவிரவும், லைட் ஆசிரியருக்கு விரைந்து நிருபம் எழுதியது போல் அஞ்சுமனே அஹ்மதியா இஷாஅத்தே இஸ்லாம் சங்கக் காரியதரிசியான மன்சூர் இலாஹி என்பவருக்கு நேராகக் கடிதம் எழுதித் தாம் முஹம்மதலியிடம் பைஅத்துச் செய்யவில்லை என்றும், அஹ்மதி இயக்கத்தைச் சார்ந்தவரல்லவென்றும் மறுத்திருப்பார். இவரது தாவா உண்மையாக இருப்பின் அதை அவர் ஏற்றுக்கொண்டிருப்பார். இவ்விதமாக நேரடியாக மறுப்புகளை எழுதித் தமது பத்திரிகையில் பிரசுரிப்பதை விட்டுவிட்டு மன்சூர் இலாஹி கூறுவதை மறுக்க லைட் ஆசிரியர் கூறுவதை (தா. இ. பத்திரிகை லாகூர் அஹ்மதியா சங்கத்திற்குச் சொந்தமல்ல என்று ஒப்புக்கொள்வதை) ஆதாரமாகக் காட்ட முன்வந்திருக்கமாட்டார். இதுவரை அவருக்கும் அஹ்மதியர்களுக்குமிடையில் ஏற்பட்டிருக்கிற சம்பந்தத்தை அவருடைய வியாசத்திலிருந்தே நாம் எடுத்துக் காட்டிவிட்டோமாகையால். உண்மையை நேயர்களே உணர்ந்து கொள்ளுவார்கள் என நம்புகிறோம்.

பா. தாவூத்சாவால் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கும் நூற்களிலும் பத்திரிகைகளிலும் சன்மார்க்கத்திற்கு முரணான அநேக கொள்கைகள் மலிந்து கிடக்கின்றன. அவைகளடங்கலையும் விபரமாக இங்கெடுத்துக் கூறுவதற்கு இச்சிறு நூல் இடந்தராதாகையால் அவைகளை விட்டு குர்ஆன் ஷரீபின் மொழிபெயர்ப்பு என்று அவரால் வெளியிடப்பட்டிருக்கும் ஜவாஹிருல் புர்க்கானில் காணப்படும் பஹிரங்க தவறுகளை மட்டும் எடுத்துக் காட்டி அவைகள் சுன்னத்துவல் ஜமாஅத்துக் கொள்கைக்கு முறண்பட்டிருக்கும் விதத்தையும் இதனடியில் விளக்கி அந்தந்த அத்தியாயங்களின் நிகட்சி சம்பவங்கள் யாதாகுமென்பதையும் நன்கு விளக்குவாம் :—

பனீ இஸ்ராயீல்கள் கடல்கடந்த பிரசினை

சூரத்துல் பகரா 50-வது வசனத்திற்கு பா. தா. என்பவர் தம்முடைய ஜவாஹிருல் புர்க்கானில் "மேலும், உங்களுக்காக நாம் கடலைப் பிரித்தபோது அதனுல் உங்களை நாம் ஈடேற்றிக்கொண்டோம். மேலும் பிர்ஔனுடைய ஆட்களைத் தாழ்த்திவிட்டோம். நீங்களும் பார்த்துக்கொண்டே இருந்தீர்கள்" என்று பொருள் செய்திருக்கிறர். இவ்வருத்தப்படி மூஸா (அலை.) அவர்களின் கூட்டத்தினருக்காக இறைவன் கடலைப்பிரித்தான் என்பதும், அதன்மூலம் அவர்களை அக்கரை அடையச் செய்து பிர்ஔனுடைய கூட்டத்தினரை அக்கடலில் தாழ்த்தி மடியச்செய்தான் என்பதும் இவர்கள் இம்மாதிரி மடிந்ததை பனுஇஸ்ராயீல்கள் பார்த்துக்கொண்டே இருந்தனர் என்பதும் விளங்குகிறது. இதை ஸூரத்துஷ்ஷுஅராவின் 63-வது வசனத்தில் மிகத்

தெளிவாக இறைவன் கூறி இருக்கிறான். அது வருமாறு:—(இஸ்ரவேலர்களாகிய) அவர்களை (பிர்ஔன் கூட்டத்தார்களாகிய) அவர்கள் காலை நேரத்தில் பின்றொடர்ந்தனர். எனவே, இரண்டு கூட்டத்தினரும் ஒருவரை ஒருவர் பார்த்தபோது மூஸாவின் கூட்டத்தார் "நிச்சயமாக நாம் பிடிபடக்கூடியவர்களே" என்று கூறினர். அதற்கு மூஸா "அவ்வாறன்று, நிச்சயமாக என்னுடன் என்னுடைய றப்பு இருக்கிறான், சீக்கிரத்தில் எனக்கு வழிகாட்டுவான்" என்றார். எனவே, நாம் மூஸாவுக்கு "கடலை அவருடைய தடியைக்கொண்டு அடிக்குமாறு "வஹி" அறிவித்தோம் அது பிளந்தது. ஒவ்வொரு பிரிவும் பெரிய மலையைப் போலாகிவிட்டது. இன்னும் நாம் பிந்தியவர் (களான பிர்ஔன் கூட்டத்தார்)களை அவ்விடத்திற்கு நெருங்கச்செய்து மூஸாவையும் அவருடனிருந்தவர்களையும் காப்பாற்றினோம். பின்பு மற்றவர்களை முழுகடித்தோம். நிச்சயமாக இதில் திருஷ்டாந்தம் உண்டாகி இருக்கிறது" என்று இறைவன் கூறியுள்ளான். இவ்வசனமானது முதலில் கூறப்பட்ட சூரத்துல் பகராவின் வசனத்திற்கு வியாக்யானமாக அமைந்திருக்கிறது என்பதை நீங்கள் எல்லீரும் தெரிந்துகொண்டீர்கள். எனவே, இறைவன் மூஸா (அலை.) அவர்களுக்கும் அவர்களது பனீ இஸ்ராயீலுக்கும் கடலைப்பிளந்து கடத்தினான் என்பதில் சந்தேகமில்லை.

இதை பா. தா. தமது ஜவாஹிருல் புர்க்கான் பக்கம் 141-ல் மறுத்து,

"சமுத்திரம் பிளவுபடுவதென்பது அதில் நீர் வரண்டு போவதைக்குறிக்கும்.................கர்த்தர் இராமுழுதும் பலத்த கீழ்காற்றினால் சமுத்திரஜலம் ஒதுங்கும்படிசெய்து அதை வறண்டு போகப் பண்ணினார்" என்று யாத்திராகமம் 14-22ல் எழுதி இருக்கிறார் என்று கடல் பிளந்ததை மறுக்கிறார். இதற்கு ஆதாரமாக ஸர் ஸெய்யித் அஹ்மத்கான் எழுதியிருப்பதாக "ஸூயஜ் என்னும் பூசந்தியின் வழியாக அவர்கள் எல்லோரும் சென்றிருக்கலாம். ஆனால் பைபிள் வியாக்யானிகள் கூறுவதாவது:—செங்கடலின் வடகோடியில் ஸூயஜ் என்னும் பூஸந்தியின் அருகின் வழியே இஸ்ரவேல் கூட்டத்தார் கடந்திருக்கலாம் என்று அபிப்பிராயப்படுகின்றனர். அந்த வடகோடியின் வழியே செல்வதற்குமுன் இராமுழுதும் அடித்த பலத்த கீழ்க்காற்றினால் சமுத்திரம் வறண்டுபோயிருக்கலாம்; அவ்வாறு அங்கிருந்த ஜலமானது தெற்குநோக்கி ஒதுக்கப்பட்டபோது மூஸா நபியும் அவருடைய மனிதர்களும் அதைத்தாண்டி இருக்கலாம்; ஆனால் பிர்ஔனும் அவனுடைய மனிதர்களும் பின்தொடர்ந்து வருமுன் அங்கே கடல்நீர் வந்து நிரம்பி இருக்கலாம்; இதனால் அவர்களெல்லோரும் மூழ்கிப்போயிருக்கலாம். ஆனால் முஸ்லிம் வியாக்யானிகளுள் சில அறிஞர்கள் இன்னும் இலகுவான வியாக்கியானம் சொல்லு

கிறார்கள். பண்டைக்காலத்திய பூகோள சாஸ்திரத்தின் பிரகாரம் செங்கடலில் அனேகமான தீவுகள் நிரம்பி இருந்தனவென்று தெரிந்துகொள்கிறோம். ஆதலின், அக்காலத்தில் அந்தச் செங்கடலானது இக்காலத்திலிருப்பதேபோல் அதிக ஆழமாயிருந்திருக்கமாட்டாது. அப்பொழுது அக்கடலின் இடைப்பக்கத்துக்கிளையின் வடகோடி வழியே மூஸாநபி முதலியோர் கடல்நீர் சுருங்கியிருக்கும்போது குறுக்கே தாண்டியிருப்பார்கள். ஆனால், அவர்களைப் பின்தொடர்ந்துவந்த எகிப்தியர்கள் அங்கு வருமுன் கடல்நீர் பெருகி அவர்களை அழித்திருக்கும்.

ஆனால், மேற்கூறியவை எல்லாவற்றைக்காட்டினும் இன்னுமொரு வியாக்கியானம் மிகப் பொருத்தமாகக் காணப்படுகிறது. மூஸா நபியும் அவருடைய மனிதர்களும் செங்கடல் செல்லும்வரையில் பிர்ஔன் இடங்கொடுத்திருக்கமாட்டான். அவர்களெல்லோரும் நீலநதிக்கருகில் செல்லுமுன்னரே அவன் அவர்களைத் தொடர்ந்து சென்றிருப்பான். ஆதலின், நீல நதியோ அல்லது அக்காலத்திலிருந்த வேறு நதியோ அங்கே குறுக்கிட்டிருக்கலாம். இதுதான் மிகப் பொருத்தமாகக் காணப்படுகிறது. எனெனின் "பஹ்ர்" என்னும் சொல் நதியையும் குறிக்கும். நதிகளில் திடுமென்று அதிகமான வெள்ளம் வந்து விடுதலும் பிறகு அந்த நீர் முழுவதும் வற்றிவிடுதலும் சகஜமாயிருக்கின்றன. மலைத்தொடர் சார்பான நதிகளில் இப்படிப்பட்ட விஷயம் அடிக்கடி நிகழ்வதுண்டு. அக்காலத்தில் அவர்கள் தாண்டியது நீல நதியேயென்று வைத்துக் கொண்டபோதிலும் அப்பொழுது அஃதொரு சாதாரணமான ஆறாயிருந்திருக்கலாம். அதனால், அதில் சில இடங்களில் குறுக்கே தாண்டிச்செல்லும்படியான வசதிகளும் இருந்திருக்கலாம். மூஸா நபி முதலியோர் வெள்ளம் கொஞ்சமாயிருக்கும்போது குறுக்கே சென்றிருக்கலாம். பிர்ஔன் முதலியோர் அவர்களைப் பிடிக்கவேண்டுமென்னும் ஆத்திரத்தினால் ஆற்றில் வரும் நீர்ப்பெருக்கை நிதானிக்காமல் அதிலிறங்கி மாண்டிருப்பார்கள். எவ்வாறாயினும் முதலில் சென்றவர்கள் அக்கரை சேர வேண்டுமென்றும் பின்னே சென்றவர்கள் ஜலத்தில்மூழ்க வேண்டுமென்றும் ஆண்டவன் நாடியிருந்த நாட்டமானது மிக நன்றாக நிறைவேறிவிட்டது" ......

என்று கைகூசாது தனது குயுக்தியைச் செலுத்தி வரைந்திருக்கிறார். இவர்கள் சர்வ சாதாரணமான ஒரு சம்பவத்தால் தப்பியிருந்தால் அதை அல்லாஹுத ஆலா தனது அருட்கொடையென்று விசேஷித்துச் சுட்டிக்காட்டவேண்டியதில்லையே. இவர்கள் இவ்விதம் தப்பியது அவனது பிரத்தியேகமான கிருபையினால் மூஸா (அலை) க்குக் காட்டிய அற்புதமாக இருந்ததனால் தான் அதை அவன் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் காலத்திலிருந்த யூதர்களிடம் உங்களது மூதாதையரைக் காப்பாற்றியது யார் என்றுகூறித் தன்னையே வணங்கும்படி ஏவுகின்றான். மனிதன்

பிறர் செய்த நன்றிக்கு அடிமைப்பட்டவன் என்ற பழிமொழிக்கேற்ப இறைவனும் அந்த யூதர்களுக்குச்செய்த இந்த நன்றியைச் சுட்டிக்காட்டித் தனக்கே அடித்தொண்டாற்றும்படி அறைகின்றான். தவிரவும், இறைவன் தனது கிருபையால் தன்னுடைய நபிமார்களுக்கு அருளிய அற்புதங்களுக்கு இம்மாதிரி கூடார்த்தங்களைச் செய்து காண்பித்து அதை வெறும் சாதாரண விஷயமாய் காட்டுவதால் இஸ்லாத்திற்குத் தான் அல்லது பா. தா. வுக்குத் தான் ஏற்பட்ட மகிமையும் பெருமையும் யாது என்பதை யாவரும் நன்குணர்ந்து கொள்வார்களாக.

ஸூறத்துஷ் ஷூராவில் பனு இஸ்ராயீல்கள் காலைநேரத்தில் புறப்பட்டுக் கிழக்கு நோக்கிச்சென்றதாகவும், அவர்களை பிர்ஔனும் அவனது கூட்டத்தினரும் பின்றொடர்ந்து வந்ததாகவும் அவர்களை பனு இஸ்ராயீல் கண்டு மூஸா (அலைஹி) விடம் விண்ணப்பம்செய்யும் விஷயமும் அதற்கு மூஸா (அலை) அவர்கள் சொல்லும் சமாதானமும் விபரமாக இருக்கிறது. இதிலிருந்து பனு இஸ்ராயீல் கடலைக் கடந்ததும் பிர்ஔனும் அவனது கூட்டத்தாரும் பின்றொடர்ந்ததும் ஒரே சமயம்தான் என்றுதெரிய வருகிறது. ஆனால், பா. தா. வின் ஜவாஹிருல் புர்க்கானின் வியாக்யானத்தில் பனு இஸ்ராயீலும் மூஸாநபியும் கடல் கடந்ததும், பிர்ஔனும் அவனது கூட்டத்தாரும் கடலில் முழுகி இறந்ததும் வெவ்வேறு சமயம் என்று தெரிகிறது. அன்றியும் “குர்ஆன் ஷரீபில் பனீ இஸ்ராயீல் கூட்டத்தார்கள் கடல்தாண்டிய விஷயம் அடிக்கடி காணப்படுகின்றது. ஆனால், எவ்வாறு அவர்கள் அந்தக் கடலைக் கடந்தார்களென்னும் விவரமேனும், அந்தக்கடல் நீரானது எவ்வாறு பிரிக்கப்பட்டதென்னும் விவரமேனும் இவ்வேதத்தில் காணப்படவில்லை” என்று தம்முடைய தமிழ் வியாக்யான உரையின் 183-ம் நெ. குறிப்பில் (ஜவாஹிருல் புர்க்கான் பக்கம் 141) கூறியிருக்கிறார். ஸூரத்துஷ் ஷூராவிலிருந்து நாம் மேலே காட்டிய ஆயத்தானது அதன் விபரத்தைக் குறிக்கிறது என்பது தெளிவு.

மலையை உயர்த்தி உறுதிமொழி வாங்கிய பிரசினை

திரு மறையில் ஸூரத்துல் பகராவின் 63-வது வசனத்தில் இஸ்ராயீலின் சந்ததியினராகிய பனீ இஸ்ராயீலினிடத்தில் உறுதிமொழி வாங்கிய பிரசினையைப்பற்றிக் குறிப்பிடுகிறான். இவ்வசனத்திற்கு பா. தாவூத்சா தமது ஜவாஹிருல் புர்க்கானில் “ மேலும், நாம் உங்களிடமிருந்து உறுதிமொழி வாங்கி, மேலும் உங்கள்மீது மலையை உயர்த்தினபோது, நாம் உங்களுக்குக் கொடுத்திருப்பதை உறுதியாகப்பற்றிப் பிடியுங்கள்; மேலும், அதில் சொல்லப்பட்டிருப்பதைச் சிந்தித்துப் பாருங்கள்; நீங்கள்

(தீமையினின்றும்) தப்பிக்கொள்ளலாம்" என்று எழுதி இருக்கிறார். இவ் வாக்கியத்திற்கு இவர் கொடுத்திருக்கும் மொழி பெயர்ப்பு முற்றிலும் சரியாக இருக்கிறது என்று நாம் ஒத்துக் கொள்ள முடியாது. என்றாலும், அவ்வசனத்தின் கருத்து ஒரு வாறு பூர்த்தியாகவே இருக்கிறது. எனவே இவ்வசனத்தின் கருத்தை விளக்கிக் கூறப்புகுந்த பா. தா. அவ்வசனத்தின் கருத்தை மாற்றிச்சுயமே தமது யுக்தியால் அதற்கு வேறு கருத்துக் கூறுகிறார்.

அதாவது, "இந்த ஆயத்தில் மலையானது அதனுடைய ஸ்தானத்திலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டு அவர்களுடைய தலைக்கு மேலே கொண்டுவரப்பட்டதென்று கூறுவது சரியான தாத்பரிய மாகமாட்டாது. பனீஇஸ்ராயீல் கூட்டத்தார்களைப் பயமுறுத்தாட்டிக் கீழ்ப்படியும்படி செய்யுமாறு நெடும் பர்வதமொன்று பிடுங்கிக்கொண்டு வரப்பட்டு அவர்களுடைய தலைக்குமேல் நடு ஆகாயத்தில் தொங்கவிடப்பட்டதென்று கூறும் ஆதாரமற்ற கதைக்கு இவ் வேதத்தில் ஒன்றும் அத்தாட்சி இல்லை. ஆனால் அவர்களெல்லோரும் மலையின்கீழ் அப்பொழுது நின்றார்கள் என்பதுதான் இதன் சரியான தாத்பரியமாயிருக்கிறது. அவர்கள் கீழே நின்றார்கள், மலையானது அவர்களுடைய தலைக்குமேல் உயர்ந்து நின்றது..........தூர் என்பது மலையைக்குறிக்கும். இஃதொரு குறிப்பிடப்பட்ட மலையின் பெயராகவும் இருந்து வருகிறது. 'நீங்கள் என்னுடைய ஏவல்களுக்கு வழிபட்டு நடக்க இணங்காமற் போவீர்களேல் இந்த மலையை உங்கள் தலைமீது போட்டுவிடுவே'னென்று பயமுறுத்தாட்டும் பொருட்டு அல்லாஹுதஆலாவானவன் அவர்களுக்குமேல் உச்சியில் ஒரு மலையைக் கொண்டுவந்து ஆகாயத்தில் தொங்கவிட்டானென்று எண்ணுவதானது குர்ஆன் ஷரீபின் முழுக் கருத்துக்குமே முரணாயிருக்கின்றது........................உண்மையில் நடந்தது யாதெனின், மூஸா நபி அவர்களுக்கு ஆண்டவனுடைய கட்டளைகள் வெளியாக்கப்பட்டபோது பனீஇஸ்ராயீல் கூட்டத்தாரின் முதியோர்கள் உயர்ந்த மலையின்கீழ் அதன் அடிவாரத்தில் நின்றுகொண்டிருந்தார்கள் என்பதுதான்"

என்று தாம் எழுதிய மொழி பெயர்ப்பையே தம்முடைய வியாக்யானத்தில் மறுத்துக் கூறி இருக்கிறார்.

இந்த பிரசினையைப்பற்றி சூரத்துல் அஃராபில் "நாம் அவர்களுக்குமேல் மேகத்தைப்போல் மலையை வேர் பிடுங்காகப் பிடுங்கி உயர்த்தினோம். இன்னும் அவர்கள் அது தங்கள்மீது விழுந்துவிடும் என்று எண்ணினர்" என ஒன்று காணப்படுகிறது. இந்த ஆயத்திற்கு வியாக்யானம்செய்யும் முபஸ்ஸிர்கள் "நதக" என்ற அறபிப் பதத்திற்கு அடியுடன் பிடுங்கினான், வேருடன் பிடுங்கினான் என்று பொருள் கொள்கின்றனர். "ஹுல்

லத்" என்ற பதத்திற்கு மேகம் என்பது பொருளாகும். அதாவது மேகம் தலைக்குமேல் இருப்பதுபோல் மலையை அடியுடன் பிடுங்கி மேகத்தைப்போல் உயர்த்தினன் என்று பொருள் கொள்கின்றனர். இந்த திரு வசனத்தில் மலையை அவர்கள் தலைக்குமேல் உயர்த்தினன் என்றும், அம்மலையானது அவர்கள் மீது விழுந்துவிடும் என்று அவர்கள் எண்ணினர் என்றும் ஸ்பஷ்டமாகக் கூறி இருக்க, பா. தா. திருகுர்ஆனில் இதற்கு ஆதாரமில்லை என்று தெளிவாகக்கூறி இருக்கிறார். இவர் அறபி ஒதித் தப்ஸீரை அறிந்திருந்தாலன்றோ இவருக்கு இது புலப்படும். கிளிப்பிள்ளையைப்போல் (ஈ அடிச்சான் காபி) ஆங்கிலத்திள்ள ஒரு தப்ஸீரை மொழிபெயர்ப்பவருக்கு இவ்விஷயம் தெரியுமோ. எனவே, இவரது வியாக்யானத்தை நாம் ஏற்றுக்கொள்வதென்றால் திருக்குர்ஆனிலிருந்து நாம் மேலே காட்டிய ஆயத்தை மறுக்கவேண்டியதாக இருக்கிறது. சென்ற 1350-வருஷங்களாக ஒரு அக்ஷரமேனும் மாற்றப்படாமலிருக்கிற திருகுர்ஆனை ஏற்றுக் கொள்வதா? அல்லது இப்பொழுது தோன்றிய தாவூத்சாவின் வியாக்கியானத்தை ஏற்றுக்கொள்வதா? என்ற விஷயத்தை நண்பர்கள் முடிவுசெய்து கொள்வார்களாக.

மூஸாவின் ஊற்றுக் கண்கள்

சூரத்துல் பகராவில் 60-வது வசனத்தில் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களால் நிகழ்ந்த ஒரு அற்புதச்செய்தி கூறப்பட்டிருக்கிறது. அதாவது பனு இஸ்ராயீல்கள் பிர்ஔனைவிட்டுத் தப்பி வந்து பைத்துல் முகத்தஸை நோக்கி வருங்காலையில் அவர்களுக்குத் தண்ணீரில்லா பாலைவனத்தைக் கடக்க நேரிட்டது. இவர்கள் தாகவிடாயால் தத்தளித்து மூஸா (அலை.) அவர்களிடம் சென்று தங்களுக்காகத் தண்ணீர் அருளவேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்க வேண்டிக்கொண்டனர். மூஸா (அலை.) அவர்களும் அவ்வாறே இறைவனிடம் பிரார்த்தித்தார்கள். அதற்கு இறைவன் மூஸா நபியை நோக்கி "உமது தண்டத்தால் கல்லை அடியும்" எனக்கட்டளையிடுகிறான். மூஸா நபியவர்களும் அவ்வாறே அடிக்கிறார்கள். அக்கல்வெடித்துப் பன்னிரண்டு நீர் ஊற்றுக்கள் கிளம்புகின்றன. இந்தப்பன்னிரண்டு நீர் ஊற்றிலும் பனு இஸ்ராயீல்களின் 12 பிரிவினரும் தத்தமக்கென ஒவ்வொரு ஊற்றை உபயோகித்துக் கொள்கின்றனர். இவ்விஷயத்தை இறைவன் ஷெ 60-வது வசனத்தில் "பின்னும் (நினைத்துப்பாருங்கள்) மூஸா தன் இனத்தாருக்குத் தண்ணீர் தேடினபோது (நாம் அவரை நோக்கி) 'நீர் உம்முடைய தடியைக்கொண்டு இக்கல்லை அடியும்' எனக்கூறினோம். (அவர் அவ்வாறு அடித்ததும்) உடனே அதிலிருந்து பன்னிரண்டு ஊற்றுகள் உதித்தோடின.

(அவருடைய பன்னிரண்டு பிரிவு) மனிதர்கள் யாவரும் தாங்கள் அருந்தும் துறையைத் திட்டமாக அறிந்து கொண்டார்கள்" என்று கூறி இருக்கிறுன். இவ்விஷயத்தை தாவூத்சாவும் மொழி பெயர்த்து கருத்தில் அவ்வளவு அதிக மாறுதல் இல்லாமல் எழுதி விட்டார். என்றாலும் அவருடைய மூளையில் இந்த அற்புதநிகழ்ச்சி நுழையவில்லை போலும். அதற்காகக் கூடார்த்த வியாக்யானஞ் செய்து,

"ஆதலின்.........அடியிற்காணுமாறு மூன்றுவிதமான பொருளைக் கொள்ளும் (1) மலையின்மீது உம்முடைய தண்டத்தைக் கொண்டு அடிப்பீராக, (2) மலையின்மீது உம்முடைய தண்டத்தைக் கொண்டுசெல்வீராக, (3) மலையின்மீது உம்முடைய கூட்டத்தைக் கொண்டு செல்வீராக. ஆதலின் இவ்வாக்கியத்துக்கு அந்த மலையில் உம்முடைய கூட்டத்தாருடன் சென்று ஒருவழியைக் கண்டுபிடிப்பீராக என்னும் பொருள்செய்யலாம். பைபிள் நூலில் இதன் சார்பான விஷயமொன்றும் அதிக ஆதாரமாகக் காணப்படவில்லை. யாத்திராகமம் 17:—1—6-ல் மூஸாநபி சில மூத்தவர்களுடன் ஒரேபிலுள்ள கல்மலைக்குச் சென்றதாகவும் அங்கே அவருடைய கோலினுல் அந்த மலையை அடித்தவுடன் அதிலிருந்து நீர் பெருகியதாகவும் காண்கின்ருேம். ஆனுல், அங்கே பன்னிரண்டு ஊற்றுகள் தோன்றியதாக யாதோர் ஆதாரமும் காணப்படவில்லை. மேலும், அங்கே ஓடிய ஜலத்தை மூத்தவருள் எழுபதுபேர்மட்டுமே கண்டதாக எழுதியிருக்கின்ருர்கள். ஆனுல், பிற்காலத்திய ஆராய்ச்சியினுல் மாரா என்னுமிடமே (யாத்தி, 15-23) "உயூனி மூஸா" அஃதாவது மூஸா நபியின் ஊற்றுக்கண்கள் என்று கண்டு பிடித்திருக்கிருர்கள். ஆதலின், யாத்தி 17:—1-6-ல் கூறப்பட்டிருக்கும் விருத்தாந்தமானது சரியான விதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறதோ வென்னும் விஷயத்தில் மிகுதமான சந்தேகங் காணப்படுகின்றது. மேலும், மலையைக் கோலால் அடித்ததாகக் கூறப்படும் இடமாகிய ரிபிதீமில் நடந்த விருத்தாந்தங்களெல்லாம் பைபிளில் மிகக் குழப்பமாக வருணிக்கப்பட்டிருப்பதனுல் அந்த விதமான சரித்திரத்தைப்பற்றி நாமொன்றும் சிலாஹிப்பதற்கில்லை"

என்று எழுதி இருக்கிருர்.

திருக்குர்ஆனுக்கு வியாக்யானம் செய்யப்புகுந்தவர் பைபிள் ஆராய்ச்சியிற் புகுந்து அதைச் சிலாகிக்கும் விஷயத்தில் ஈடுபட்டு விட்டார். தான் எந்த வேலையை மேற்கொண்டாரோ அந்த வேலையை விடுத்து இதர மதஸ்தர்களின் வேதப்புத்தகம் என்று சொல்லப்படுகிற விவிலிய நூலில் இவருக்கு என்ன வேலை என்று கேட்கிறேன்? நல்லது, திருக்குர்ஆனுக்கும் விவிலிய நூலுக்கும் எத்தனை விஷயத்தில் ஒற்றுமையிருக்கிறது, எத்தனை விஷயங்களுள் வேற்றுமையிருக்கிறது என்பதைக் கண்டறிய அதன் ஆராய்ச்சியில் ஈடுபட்டார் எனவைத்துக்கொள்வோம். அவ்வாருயினும்,

இவர் திருக்குர்ஆனை ஒப்புக்கொள்வதற்கு, விவிலிய நூலில் சாக்ஷியம் தேடுவதாக இவர் ஆராய்ச்சி முறை இருக்கிறது. இவர் இதுவரை எழுதிவந்திருக்கும் ஏனைய வியாக்யானங்களையும் சீர்தூக்கிப் பார்க்கும்போது விவிலிய நூலில் கூறப்பட்டதற்கு மாறாய் திருக்குர்ஆனில் கூறப்பட்ட இடங்களில் எல்லாம் இவர் கூடார்த்தம் செய்து விவிலிய நூலுக்கு ஆதரவு அளித்தே வந்திருக்கிறார். எனவே, இவர் இஸ்லாம் மதக் கர்த்தாவாகிய எம்பிரான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களால் மாற்றப்பெற்றுவிட்ட விவிலிய நூலுக்கு ஏற்றத்தை கற்பிக்கவன்றோ புகுந்திருக்கிறார். இஃதை இம்மட்டுடன் விடுத்து விஷயத்தைக் கவனிப்போம்: மூஸா நபியவர்களுக்குக் கிடைத்த தண்டமானது இறைவனால் அவருக்கு அளிக்கப்பெற்ற அற்புதக் கோல் என்பதை இவர் மறந்துவிட்டார்போலும். இந்தக் கோல்தான் முன்னர் பிர்ஔனுடைய சூனியக்காரர்கள் செய்த மாயப் பாம்புகளை மலைச்சர்ப்பமாக மாறி விழுங்கி அவர்களைத் தோற்கடித்தது. இக்கம்பினாலேயே சமுத்திரத்தைப் பிளக்கச்செய்து தன் சமுகத்தினரை மூஸா நபியவர்கள் பிர்ஔனுடைய கூட்டத்தாரைவிட்டுக் காப்பாற்றி இருக்கிறார்கள். இத்தகைய மகத்துவம் பொருந்திய இத்தடியினால் கல்லில் அடித்தவுடன் அக்கல்லிலிருந்து 12 ஊற்றுக் கண்கள் ஒலித்தோடுவது புத்திக்கு எட்டாத விஷயமல்லவே? இன்றும் மலைப்பிரதேசங்களில் உயரமான குன்றிலிருந்து எத்தனையோ ஊற்றுகள் தோன்றி அடிவாரங்களில் பல கேணிகளையும் ஓடைகளையும் உண்டுபண்ணியிருப்பதை மலையில் வாசஞ்செய்பவர்கள் பிரத்தியக்ஷமாகப் பார்த்திருக்கின்றனர். தவிரவும், கிணறுகள் வெட்டும்போது ஏதேனும் ஒரு கற்பாறையை உடைத்தால் அதிலிருந்து பலமான ஊற்று வெளிக்கிளம்புவதும் இயற்கையாக இருக்கிறது. எனவே, கல்லையடித்து ஊற்றுக் கண்கள் உற்பவிப்பது புத்திக்கு எட்டாத விஷயமன்று. புத்திசாலிகள் ஏற்றுக்கொள்ளாத காரியமுமன்று.

வானரப் பிரசினை

இஃது ஹஜ்ரத் தாவூத் நபியவர்கள் காலத்தில் கடற்கரையோரத்தில் வசித்துவந்த சில பனூஇஸ்ராயீலைப்பற்றிய ஒரு பிரசினையாகும். பனூஇஸ்ராயீல்களுக்கு சனிக்கிழமை ஒய்வு நாளாக அதாவது இறைவனை வணங்கும் நாளாக ஏற்படுத்தப்பெற்றிருந்தது. இந்த நாளில் இவர்கள் தங்கள் வேலைகளைவிட்டு நீங்கி இறைவனின் வணக்கத்தில் ஈடுபடவேண்டும். இவர்கள் சதா தங்கள் இறைவன் கட்டளைக்குக் கீழ்படியாமல் அதற்கு மாறு செய்பவர்களாகவே இருந்துவந்தனர். இந்தக் கட்டளையையும் இவர்களிற் சிலர் மீறினர். எனவே, அக்கிராமத்திலுள்ள ஜனங்கள் சனிக்

கிழமையன்று மீன் வேட்டையாடுவதற்குக் குயுக்திகளை எல்லாம் செய்தனர். இவர்கள் செய்யும் இந்த மீறுதலைச் சில நல்லடியார்கள் பார்த்துத் தடுக்கவும் செய்தனர். சில பொல்லாதவர்கள் அதில் தலையிடாமல் மௌனமும் சாதித்தனர். எனவே, அல்லாஹ்வின் முனிவு அவர்கள் மீது உண்டாகிவிட்டது. அவனும் அக்கட்டளையை மீறியவர்களை நோக்கி "நீங்கள் குரங்குகளாகிவிடுங்கள்" என்று கூறினான். அவர்கள் குரங்குகளாக மாறி மூன்று தினங்கள் வரை ஜீவித்திருந்து மரித்துவிட்டனர். எனவே இவர்கள் இவ்வாறு மாறியதானது அல்லாஹ்வின் கட்டளையை மீறியவர்களுக்குத் தண்டனையாகவும், மௌனம் சாதித்தவர்களுக்கு எச்சரிக்கையாகவும், அல்லாஹ்வைப் பயந்த நல்லடியாருக்கு உபதேசமாகவும் ஆக்கினான். இவ்விபரத்தை இறைவன் தனது திருமறையில் "மேலும் சனிக்கிழமையில் உங்களிலெவர் வரம்பு மீறிவிட்டனரென்பதையும், அதற்காக அவர்களை நீங்கள் சிறுமைப்பட்ட குரங்களாகிவிடுக, எனக்கூறினோம் என்பதையும் நீங்கள் திட்டமாக அறிந்தே இருக்கின்றீர்கள் ஆதலால், அவர்கள் எதிரிலிருப்பவர்களுக்கும் அவர்களுக்குப்பின் வருபவர்களுக்கும் இதை ஒரு எச்சரிக்கையாகவும், பயபக்தியுடையோருக்கு இதை ஒரு நற்போதனையாகவும் செய்தோம்" என்று வர்ணிக்கிறான்.

தற்பரனாகிய சர்வ வல்லோனுக்கு மனிதனை வானரமாக்கவோ வானரத்தை மனிதனாக்கவோ முடியாது என்று எவரும் கூறத்துணியார். தவிரவும் அவன் ஒரு வஸ்துவை ஆக்க நாடினால் 'ஆகு' என்று கூறுவதுதான் தாமிதம் அது உடனே ஆகிவிடும் என்று இறைவனே தனது பேராற்றலைப்பற்றிக் கூறி இருக்கிறான். தவிரவும், இற்றை நாளினுடைய ஆராய்ச்சிக்காரர்கள் ஆதியில் வானரங்களிலிருந்தே மனிதன் உற்பத்தியானானே என்றும் சந்தேகிக்கின்றனர். இந்த தாவூதின் சையின்சுக்கொள்கையை சிறிது நேரத்திற்கு ஒத்துக்கொள்வோம். வானரத்திலிருந்து மனித அந்தஸ்துக்கு உயர்ந்த ஒருவன், மனித அந்தஸ்திலிருந்து வானர அந்தஸ்திற்குத் தாழ்வது தகாதோ? என அவரை வினவுகிறேன். இதுவும் தாவூதுக்குச் சங்கடமாகத் தோன்றி விட்டதுபோலிருக்கிறது. இதனால்தான் இறைவனின் சர்வ வல்லமையை மறந்து "குரங்குகளாக அவர்கள் ஆகவில்லை குரங்குக் குணங்களைப்போல அவர்கள் குணங்களுமாகிவிட்டன" என்று ருஜுப்பிக்க பகீரதப் பிரயத்தனம் செய்திருக்கிறார். இவரது பிரயத்தனம் சரியென்று வைத்துக்கொள்வோம். எனவே, இவரது முயற்சிப்படி அவர்கள் உருவத்திலும் குரங்குகளைப்போல் மாறவில்லையானால் மற்றவருக்கு எச்சரிக்கை ஏற்படுவதும் உபதேசமாகுவதும் எங்கே? என்று நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். எவ்வாறாயினும் அற்புத நிகழ்ச்சிகளை இறைவன் ஏற்படுத்திய கட்டளையை வலிந்து பொ

ருள் கொடுத்து யதார்த்தமாக யாவரும் உணரும் பொருளைக் கெடுத்து புதுக் கருத்தைப் புகுத்துவதே இவரது பகுத்தறிவுப் பிரசினையாக இருந்துவருகிறது.

பீ பீ மர்யம் அலைஹிஸ்ஸலாம்

திருகுர்ஆனில், ஸூரத்து ஆல இம்ரானில் இறைவன் ஹஜ்ரத் மர்யம் அலைஹஸ்ஸலாம் அவர்கள் சரித்திரத்தை 34-வது வசனத்திலிருந்து விவரிக்கிறான். அது வருமாறு :—(பைத்துல்முகத்தஸில் இமாமாக இருந்த) கம்ரானுடைய மனைவி (கர்ப்பவதியாக இருந்த காலத்தில்) என்னுடைய றப்பே! என் வயிற்றிலிருக்கும் சிசுவை உனக்கென உரிமை விடப்பட்டதாக வைக்க வேண்டுதல் செய்துகொண்டிருக்கிறேன். (எனவே, அச்சிசு என் குடும்பத்துக் காரியத்தில் ஈடுபடுத்தப்படமாட்டாது) என்று சொன்ன நேரமும் (ஞாபகத்தில் வைக்கப்படத் தகுந்ததாகும். அக்காலத்தில் ஆண் மக்களை மஸ்ஜிதின் ஊழியத்திற்கென விடுவது வழக்கம். தமது கற்பத்திலிருக்கும் சிசு ஆண் குழந்தையாக இருக்கும் என நினைத்திருந்தார்போலும்.) அப்பால் அவ்வம்மை பிரசவித்தபோது என் றப்பே! நான் அதை பெண்ணாகப் பிரசவித்தேனே" என்று கூறினார். (இவ்விடத்தில் அல்லாஹ் தன் அறிவைப்பற்றிக் கூறுகிறான்) மேலும் அல்லாஹ் அவள் பிரசவித்ததைப்பற்றி ரொம்ப அறிந்தவன். இன்னும், (அவள் கோரிய) அந்த ஆணானது (இப்பொழுது பிரசவித்த) இந்தப் பெண்ணைப்போலில்லை. (மேலும் அம்மாது கூறுவதாவது) :—இன்னும் நான் இக்குழந்தைக்கு மர்யம் எனப் பெயர் வைத்தேன். (அல்லாஹ்வை வணங்கும்படியான ஸ்திரீ என்பது பொருள்.) இன்னும் நிச்சயமாக இப்பெண் குழந்தையையும் இதன் சந்தியையும் எடுத்தெறியப்பெற்ற ஷைத்தானை விட்டு உன்னிடம் காவல் தேடுகிறேன். எனவே, (இறைவன் இந்தப் பிரார்த்தனையை) அழகியவிதமாக ஒப்புக்கொண்டு அழகியவிதமாக அதை வளரச்செய்தான். இன்னும் மர்யமை வளர்க்கும் பொறுப்பை ஜகரிய்யா (நபி) ஏற்றுக்கொண்டார்கள். (இவரைப்போல் மற்றவர்களும் மர்யமை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள விரும்பினர் என்றும் அதற்காகப் போட்டி போட்டனர் என்பதும் இறுதியாகத் திருவுளச் சீட்டுப் போட்டுப் பார்க்கப்பெற்றதென்பதும் இந்த சூராவின் 43-வது வசனத்தில் விவரிக்கப்பெற்றிருக்கிறது. இவ்விதமாக இந்த மர்யம் வளர்க்கப்பெற்று வரும் காலத்தில்) (மர்யம் இருக்கும்படியான இடமாகிய) மிஹ்றாபுக்கு ஜகரிய்யா (அலை.) செல்லும்போதெல்லாம் அவர்களிடத்தில் இனிய தின்பண்டங்களிருக்கக் காண்பார். (அப்பொழுது) மர்யமே! இது உனக்கு எங்கிருந்து கிடைத்தது என்று கேட்பார். (அதற்கு) இது அல்லாஹ்விடத்திலிருந்து

கிடைத்தது. நிச்சயமாக அல்லாஹ்தான் நாடியவர்களுக்கு கணக்கின்றிக் கொடுப்பான் என்று மர்யம் கூறுவார். (இவ்வாறு அக்காலத்தில் அகப்படுவதற்கு அருமையான உணவுகளை எல்லாம் இறைவன் தன் சார்பாக அளிப்பதைக்கண்ட ஜகரிய்யா நபியவர்கள் தாமும் தமது மனைவியும் வயோதிகப் பருவத்தை—மக்கட் பேற்றுக்கான காலத்தை கடந்துவிட்டபோதிலும் அவன் விரும்பினால் சந்ததியை அளிப்பான் என்று) ஜகரிய்யா (அலை.) தனது றப்பைப்பிரார்த்தனை செய்தார். அதாவது “என் றப்பே! எனக்கு உன்னிடமிருந்து நல்ல சந்ததியைத் தந்தருள்வாய்! நிச்சயமாக பிரார்த்தனையைக் கேட்பவனாக இருக்கின்றாய்” என்று கூறினார். (இவருடைய இந்தப் பிரார்த்தனையை இறைவன் ஏற்றுக் கொண்டு மலக்குகளின் மூலம் அவருக்கு அறிவிக்கிறான். அவ்வமரர்கள் பின்வருமாறு அறிவிக்கின்றனர்) :—ஜகரிய்யா நபி மிஹ்ராபில் தொழுகையிலிருக்கும்போது அவரை அமரர்கள் அழைத்து “நிச்சயமாக அல்லாஹ் உமக்கு யஹ்யாவைக்கொண்டு நற்செய்தி கூறுகிறான். அவர் அல்லாஹ்வில் நின்றுமுள்ள வார்த்தையை (அதாவது வார்த்தையினால் ஜனிக்கும் ஈஸாவை) மெய்ப்பிக்கிறவராகவும், தலைவராகவும், தன் இச்சையடக்கமுள்ளவராகவும், நல்லவர்களில் நின்றுமுள்ள நபியாகவும் இருப்பார்.” என்று கூறினர். (இதைக்கேட்ட ஜகரிய்யா (அலை) தமக்கு வாலிபப்பருவம் திரும்பமீண்டு வருமா? அல்லது வயோதிகப் பருவமே இருக்குமா என்பதை யுணர்ந்து கொள்ளும்பொருட்டு) என் றப்பே! எனக்கோ வயோதிகப்பருவம் எய்தி இருக்கிறது. என் மனைவியோமலடி. அவ்வாறிருக்க எனக்கு எங்ஙனம் ஆண்குழந்தையுண்டாகும்” என்று கேட்டார். அதற்கு இவ்விதம்தான் (காரணமின்றியே) அல்லாஹ் தான் நாடியதைச்சிருஷ்டிக்கிறான் என்று கூறினான். அதற்கவர் அவ்வாறு என் றப்பே எனக்கொரு அடையாளத்தைக் காட்டு என்றார். உனக்கு(க் குழந்தைப்பேறு உண்டாயிற் றென்பதற்கு) அடயாளமானது மூன்று நாளைக்குச் சமிக்ஞை யன்றி ஜனங்களிடம் நீபேச முடியாதிருப்பதுதான். (அக்காலத்தில்) நீர் உமதுறப்பை அதிகமாக ஜபியும். காலையிலும் மாலையிலும் தஸ்பீஹு செய்யும் என்றியம்பினான். இன்னும் மலக்குகள் (மர்யமைப்பார்த்து) மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் உன்னைத் தெரிந்தெடுத்திருக்கிறான். இன்னும் உன்னைப் பரிசுத்தமாக்கி வைத்திருக்கிறான். சர்வ உலகத்துப்பெண்களைப் பார்க்கினும் உன்னைத் தெரிந்தெடுத்திருக்கிறான். எனவே, உன்னுடைய றப்புக்கு நீ வழிப்படு. அவனுக்கு ஸுஜூதுசெய். ருக்கூஉ செய்பவர்களுடன் ருக்கூஉம் செய் என்றுகூறினர். (இவ்விதம் மலக்குகளுடன் பேசும்பெரும் பேற்றுடன் வளர்ந்த மர்யம் கன்னிப் பருவத்தை அடைந்தபோது மீண்டும்) மலக்குகள்,

(அவரை நோக்கி) மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் தன்னிடமிருந்து ஒரு வார்த்தையைக்கொண்டு உமக்கு நற்செய்தி கூறுகின்றான். அவருடைய பெயர் மர்யமுடைய மகன் மஸீஹ் ஈஸா என்றிருக்கும். அவர் இம்மையிலும் மறுமையிலும் சங்கைவானுக இருப்பார். இன்னும் முகரர்மான (சங்கையான) வர்களில் நின்றுமிருப்பார். இன்னும் தொட்டிலிலேயே ஜனங்களிடம் பேசுவார். இன்னும் வயோதிகப் பருவத்திலும் இன்னும் நல்லடியாராகவுமிருப்பார் என்றூர்கள். (அதற்கு மர்யம்) என் றப்பே! என்னை ஆடவன் தொடாதிருக்க எனக்குக் குழந்தை எவ்வாறு உண்டாகும் என்று கூறினுர். அதற்கு அவன் "இவ்விதமாகத்தான் (காரணமின்றியே) தான் நாடியதை அல்லாஹ் சிருஷ்டிப்பான். ஒருகாரியத்தைக் கற்பிக்க அவன் நாடினால் அவன் "குன்" என்றுசொல்வதுதான் தாமதம், உடனே அது ஆகிவிடும்." என்றுகூறி அப்பால் ஹஜ்றத் ஈஸா(அலை) அவர்களைப்பற்றி வர்ணனை செய்கிறுன்.

எனவே இதுவரை கூறப்பட்டுள்ள சரித்திரத்திலிருந்து மர்யமுடைய பிறப்பே நூதனமானது என்பதைத் தெரிந்துகொள்கிறோம். அவர் இறைவனின் ஊழியத்திற்கென விடப்பட்டவராகவும், பிறந்ததிலிருந்து பெற்றோரின் போஷணையைவிட்டு விலகி ஒரு நபியின் போஷணையில் இருந்தவராகவும், இவருடன் மலக்குகள் சம்பாஷிக்கும் அந்தஸ்தை யுடையவராக இருந்ததாகவும் தெரிந்துகொள்கிறோம். அன்றியும், அல்லாஹ்த ஆலாவால் உலகப்பெண்களிலெல்லாம் சிரேஷ்டமானவரெனத் தெரிந்தெடுக்கப் பெற்றவராகவும் பரிசுத்தமாக்கப் பெற்றவராகவும் இருந்திருக்கிறார். இவருக்கு இறைவன் (மஸீஹ்) ஈஸாவைத் தந்தருளுவதாகக் கூறியபோது மனிதச்சேர்க்கையின்றி மக்கட்பேறு உண்டாகுவது வழக்கமில்லாதிருப்பதை நினைத்து 'மனிதன் தீண்டவில்லையே' என்றும் சுட்டிக்காட்டி மர்யம் கேட்கின்றூர்கள். அதற்கு இறைவன் தன் சர்வ வல்லமையைச் சுட்டிக்காட்டி இம்மாதிரி தான் தான் நாடியதைச் சிருஷ்டிப்பான் என்று கூறுகின்றுன்.

அன்றியும், பெண்கள் நாயகியாகிய இம்மம்மையார் அற்புதமாகப் பிரசவிப்பார் என்பதை ஜகரிய்யா நபியவர்களுக்குப் பிள்ளைப்பேறு உண்டாகும் காலத்திலேயே தன்னுடைய வார்த்தையினுல் உற்பத்தியாகும் ஈஸா நபியவர்களைப் பிரஸ்தாபித்திருக்கிறுன். இவ்விதத் தெளிவான ஆதாரங்களெல்லாம் இருக்க, பா. தா-வால் விற்பனைசெய்யப்பட்டு வருகிற ஏசுவின் ரகஸ்யம் என்ற புத்தகத்தில் பீபி மர்யம் யூசுப் நஜ்ஜார் என்பவருடன் திரேகசம்பந்தம் வைத்திருந்தார் என்றும், ஈஸா நபியவர்களுக்கு யூசுப் நஜ்ஜார் தகப்பனுக இருந்தார் என்றும், ஈஸா நபியவர்களுக்குச் சகோதரரும் இருந்தார் என்றும் கற்பித்திருப்பது

எவ்வளவு மௌட்டீகம்? இறைவன் மர்யமைப் பரிசுத்தமாக்கப்பட்டவரென்று அறிவிக்க அவர்மீது வியபிசாரம் தோஷத்தை இவர்கள் கற்பிப்பதென்றால் இவர்களுடைய மார்க்கப்பற்று எவ்வாறுள்ளதென்பதை யோசித்துப் பாருங்கள். இவ்விதமாக இவர் தமக்குப் பிடிக்காதவிஷயம் திருகுர்ஆனிலிருந்தாலும் அதையுங்கூட மறுத்தே வந்திருக்கிறார். இது மட்டுமா? இவர் போன்ற மனிதரால் ஏற்படுத்தப்பெற்ற சயின்சுச் சட்டத்திற்கோ இவரது அற்பயுக்திக்கோ எட்டாதவைகளை எல்லாம் அடியுடன் மறுத்தே வந்திருக்கிறார் என்பதை அவருடைய ஜவாஹிருல் புர்க்கானைப் படித்துப்பார்த்தால் நன்குதெரிந்துகொள்ளலாம். இவ்விதமாக திருகுர்ஆனுக்கு முற்றமுற்ற முறணாக இவர் கூறுவதால்தான் நாங்கள் இவரது கொள்கைகளை மறுதளிக்க முன்வந்திருக்கிறோம். இவர் தமது கூற்றில் உண்மையாளராக இருந்தால் இவர் முன்வந்து தமது கூற்றை ருஜுப்பிக்கட்டும், என அழைக்கிறோம்.

இன்னும் யூதர்கள் மர்யம்மீது வியபிசாரப்படர் சுமத்தியதற்காக அவர்களைச் சபித்திருப்பதாக சூரத்துந் நிஸாவில் மர்யம் மீது அவர்கள் மகத்தான அபாண்டத்தைக் கூறியதால் (சபித்திருக்கிறோம்) என்று பகிரங்கமாக அறைந்திருக்கிறான். எனவே, அந்தப்படரைக் கைகூசாது எழுதிவருகிற இந்த காதியானிகள் எந்த முனிவுக்கு ஆளாவரோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது.

சிலுவைப் பிரசினை.

சகோதரர்களே! ஈஸாநபியவர்களின் மேன்மையைப்பற்றி இறைவன் தனது திருமறையில் கூறி இருப்பதை நீங்கள் அறிவீர்கள். அவ்வித மகத்துவம் பொருந்திய நபியவர்களை யூதர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்து அவர்களைக் கொலைசெய்யவோ சிலுவையிலறையவோ முயன்ற சமயத்தில் வல்லரஹ்மான் அவர்களைக் காப்பாற்றித் தன் பக்கல் அழைத்துக்கொண்டான். இவ்விவரத்தை இறைவன் தனது திருமறையில் “நிச்சயமாக நாங்கள் மர்யமுடைய மகன் ஈஸாவைக்கொன்றுவிட்டோம் என்று கூறியதால் (அவர்களைச் சபித்துவிட்டோம்). மேலும், அவரை அவர்கள் கொல்லவுமில்லை. இன்னும் சிலுவையில் அவரை அறையவுமில்லை. எனினும் அவர்களுக்கு அவ்விதம் ஆக்கப்பட்டது. இன்னும் நிச்சயமாக அவர் விஷயத்தில் அபிப்பிராயப்பேதத்தில் இருப்பவர்கள் சந்தேகத்தில்தானிருக்கின்றனர். அவர்கள் தங்களுக்குத் தோன்றிய எண்ணத்தைப் பின்பற்றுவதைத் தவிர நிச்சயமான அறிவு அவர்களுக்கு அவர் விஷயத்தில் இல்லை. இன்னும் நிச்சயமாக அவரை அவர்கள் கொல்லவே இல்லை. என்றாலும், அவரை அல்லாஹ் தன் பக்கல் உயர்த்திக்கொண்டான்.

அல்லாஹ் மிகைத்தவன் நுண்ணிய அறிவுள்ளவன்" என்று கூறி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை உயர்த்திக்கொண்டதையும், அவர்களைச் சிலுவையில் அறையவில்லை என்பதையும், அவர்களைக் கொலை செய்யவுமில்லை என்பதையும்பற்றி எவ்வித சந்தேகமு மேற்பட இடமில்லாமல் இறைவன் கூறி இருக்க, நபி ஈஸா அவர்கள் மூன்று மணிநேரம்வரை சிலுவையில் அறையப்பட்டிருந்ததாக பா. தா. தமது ஜவாஹிருல் புர்க்கான் 182-வது பக்கத்தில் எழுதி வைத்திருக்கிறார். இதுமட்டுமா இவர் அருமையான நூல் எனப் போற்றிப் புகழ்ந்து விற்பனைசெய்துவருகிற 'இயேசுவின் இரகசியத்'தில் அப்பெருமான் காஷ்மீரத்தில் மரித்து அடக்கப்பட்டுவிட்டதாகவும் கூறிவிட்டார். இவர் காஷ்மீரத்தில் அடக்கப் பெற்றுவிட்டால் அல்லாஹ்வின் பக்கல் உயர்த்தப்படுவது எப்படி என்பதுதான் விளங்கவில்லை?

நிற்கட்டும், ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மரிப்பதற்கு முன் வேதக்காரர்கள் யாவரும் அவர்களை உண்மையாய் விசுவதிப்பர் என்று அதே சூரத்தின் வேறொரு வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. இவ்வசனத்தின் கருத்துக்கேற்ப நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், இறுதிக்காலத்தில் இவர் உலகுக்கு வந்து தஜ்ஜாலை சம்ஹாரம்செய்து விவாகம்செய்து மக்களைப்பெற்று மற்ற யாவரும் மரிப்பதுபோல் மரணமடைந்து தமது ரௌலாவில் அடக்கப் பெறுவார் என்று கூறி இருக்கிறார்கள். இன்னும் இவர் முதுமைப் பருவத்திலும் ஜனங்களிடை பேசுவார் என்று ஆலஇம்ரானில் கூறப்பட்டிருக்கிறது. ஹஜ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் உயர்த்தப்பட்ட காலத்தில் அவருக்கு வயது 33-தான் என்பதை சரியான சொற்படி யாவரும் ஒத்துக்கொள்கின்றனர். 33-வயதுக்காரரை முதுமையுடையவர் என எவரும் கருதமாட்டார். அவர் முதியராக வேண்டுமாயின் இன்னும் அவர் ஜீவித்திருக்கவேண்டும் என்பதை நான் கூறாமலே நீங்கள் தெரிந்துகொள்கிறீர்கள். ஈஸா நபியவர்கள் மரணமடைந்திருந்தால் அவர் முதுமைப்பருவத்தை யடைவதெப்படி, போகட்டும். அவர் காஷ்மீரத்திற்கு வந்து ஜீவித்து முதுமைப்பருவத்தை அடைந்திருந்தால் உலகெலாம் கியாதி பெற்று விளங்கும் இப்பெருமகர் ஒருவருக்கும் தெரியாமலா? சரித்திரப்பூர்வமான சான்று இல்லாமலா? இவர் ஜீவித்து மரித்தார். இவ்வாறு ஜீவித்து மரித்ததாக வைத்துக்கொள்வோம் ஆயின் இந்த காதியானிகள் கூற்றுப்படி வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தாம்தான் என்று குலாம் அஹ்மத் கூறுவது; சுத்த முட்டாள்தனமாகவன்றோ ஆகிவிடும். இவரைப் பின்பற்றுபவர்கள் முழுமூடர் என்றென்பதை எவரும் தயங்காமல் கூறிவிடலாம் எனவே திருக்குர்ஆனில் கூறப்பட்ட ஆயத்தின்படி ஈஸா நபியவர்கள் இன்னமும் மரணிக்கவில்லை என்பதையும் முதுமைப்

பருவத்தையடைய அவர் இவ்வவனிக்கு வரவேண்டும் என்பதையும் தெரிந்துகொள்கிறோம். தவிர ஹதீது ஷரீபின்படியும் அவர் இறுதி நாள் சமீபிக்கும் காலத்தில் உலகிற்றோன்றுவார் என்பதிற் சந்தேகமில்லை என்பது நிதரிசனமாகின்றது.

காபிர்களும் சோர்க்கம் புகுவரோ ?

சகோதரர்களே ! பா. தா வின் கொள்கையில் முஸ்லிம், கிறிஸ்தவர், யூதர், முஷ்ரிக்கு யாவரும் ஒருகாலத்தில் சொர்க்கம் புகுவர் என்பது மொன்று. இதை வற்புறுத்தி அவர் புதக்குடியில் பிரசங்கம்செய்தபோது "நீங்கள் சொர்க்கத்தில் இருந்து கொண்டு நரகத்தில் கிடக்கும் காபிர்களை வலுப்புக்காட்டலாம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்களா ?" என்று கூறினாராம். அந்தப் பிரஸங்கத்தில் இவர் கூறியது மெய்யா, பொய்யா என்பதைப்பற்றி ஆராயவேண்டிய அவசியமல்ல. ஆயினும், இக்கொள்கையை அவர் தமது பத்திரிகையிலும் மற்ற விளம்பரங்களிலும் வற்புறுத்தியே வந்திருக்கிறார். இதனை ஆதாரமாகக் கொண்டே "நரகத்திற்கு முடிவுண்டு" என்ற விளம்பரத்தை முன்னர் நாச்சியார்கோயில் முஸ்லிம்சங்கத்தின் பெயரால் வெளியிட்டிருக்கிறார்.

"தான் இணைவைக்கப்படுவதை நிச்சயமாக அல்லாஹ் மன்னிக்கமாட்டான். இதற்கப்பாலுள்ளதை (ஏனைய பாவங்களை) தான் நாடியவருக்கு அவன் மன்னிப்பான்" என ஒரு திருவசனம் நமது சத்தியவேதத்தில் காணப்படுகிறது. இவ்வசனத்தின் கருத்துப்படி இணைவைத்தலை அவன் மன்னிக்கவேமாட்டான் என்பதை நிச்சயமாகத் தெரிந்துகொள்கிறோம். சூரத்துல் பகராவின் 62-ம் வசனத்தில் "விசுவாசிகளாயினும், யூதர்களாயினும், கிறிஸ்தவர்களாயினும், ஸாபியீன்களாயினும், இவர்களில் எவர் அல்லாஹ்வையும் இறுதிநாளையும் உண்மையாகவிசுவாசித்து நற்காரியத்தைச் செய்கின்றார்களோ அவர்களுக்கு அவர்களுடைய கூலி நிச்சயமாக அவர்களுடைய றப்பினிடத்தில் உண்டு. மேலும், அவர்களுக்கு எவ்வித பயமுமில்லை அவர்கள் துக்கப் [illegible]ர்கள்" என்று கூறி இருக்கிறான். இவ்வசனத்தின் மூலம் எம்மதத்தவர் என்று எவர் இயம்பியபோதிலும் இஸ்லாத்தைத் தழுவவேண்டும் என்பதையும் இஸ்லாத்தை தழுவினாலும் நல்ல காரியத்தையும் செய்யவேண்டும் என்பதையும், இவர்களுக்குத்தான் இவர்கள் கூலி கிடைக்கும் என்றும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இக்கருத்தை பா. தா. வும் தமது ஜவாஹிருல் புர்க்கானில் வற்புறுத்திக் கூறி இருக்கிறார்.

இவ்வாறிருந்தும் காபிர்களும் சொர்க்கம் புகுவர் என்று கூறிவருவது தான் நமக்குவிந்தையாக இருக்கிறது. தவிர, திருகுர்ஆனிலேயே சூரத்துல் அஃறாபின் 45-வது வசனத்திலிருந்து

சொர்க்க வாதிகள் நரக வாதிகளைப்பார்த்து வளிப்புக்காட்டும் விஷயத்தைக் கூறுகிறான். அதாவது:—சொர்க்க வாதிகள் சொர்க்கத்தில் புகுந்தபோது நரகவாதிகளை அழைத்து எங்கள் றப்பு எங்களுக்கு வாக்களித்ததை நாங்கள் நிச்சயமாகப் பெற்றுக் கொண்டோம். உங்களுடைய றப்பு உங்களுக்கு வாக்களித்ததை நிச்சயமாகப் பெற்றுக்கொண்டீர்களா? என்று கேட்பார்கள். அதற்கு அந்நரகவாதிகள் ஆமென்பர். அப்பொழுது அவர்களிடையில் கூப்பாடுபோடுபவர் "அக்கிரமஸ்தர்கள் மீது அல்லாஹ்வின் முனிவு இருக்கிறது" என்று கூப்பாடுபோடுவார்.

இன்னும் நரகவாதிகள் சொர்க்க வாதிகளிடம் "தண்ணீரிலிருந்து எங்கள் மீது ஊற்றுங்கள். அல்லது உங்களுக்கு அல்லாஹ் அளித்ததிலிருந்து என்றுகேட்பர். அதற்கு சொர்க்கவாதிகள் 'நிச்சயமாக அல்லாஹ் அவ்விரண்டையும் காபிர்கள் மீது ஹறாமாக்கி விட்டான்' என்று கூறுவர்" என்று றஹ்மான் நவின்றுளான். இதனைப்பார்த்த பின்னரும் பா. தா. வுக்கு மயக்கம் தீரவில்லைபோலும். இன்னும் "நிச்சயமாக நம்முடைய வசனங்களைப் பொய்ப்பித்து அகப்பெருமை கொண்டவர்களுக்கு வானத்தின் வாயில்கள் திறக்கப்பெறா? இன்னும் ஊசித்துவாரத்தில் ஒட்டகம் நுழையும் வரை அவர்கள் சொர்க்கத்தில் புகவே மாட்டார்கள் என்று கண்டிப்பாய் கூறி இருக்கிறான். ஊசித்துவாரத்தில் ஒட்டகம் நுழைவது முடியாத காரியமாக இருக்கும்போது அல்லாஹ்வின் வசனத்தைப் பொய்ப்பித்த காபிர்களும் சொர்க்கம் புகுவதுமுடியாத காரியம் என்பது வற்புறுத்தப்பட்டிருக்கிறது. எனவே பா. தா. வின் கூற்றைநம்பி மோசம்போகலாகாது. இவ்விஷயத்தில் சந்தேகமுள்ளவர்கள் திருக்குர் ஆனைத் திரும்பத் திரும்ப படித்துப்பார்த்தால் விஷயம் வெளியாகும். முல்லாக்கள் கூற்றுக்கு திருக்குர் ஆனில் ஆதாரங்கிடையாது என்று கூறி பொதுமக்களை ஏமாற்றிவரும் நயவஞ்சகக்காதியானிகளுக்கு மறுப்பாக நான் திருக்குர் ஆன்லிருந்தே இந்த மறுப்பை கூறி இருக்கிறேன். இது போலவே நமது சுன்னத்துவல்ஜமாஅத்துக்கொள்கைகள் முழுதும் திருகுர்ஆன் ஹதீது, இஜமாஃ கியாஸ் ஆகியவைகளிலிருந்தே எடுக்கப்பெற்றிருக்கின்றன. மார்க்க மறியாப் பதர்களான அந்தக்காதியானிகள் மக்களை ஏமாற்றுவதும் அவர்களின் வஞ்சகப்பேச்சை நம்பிமோசம் போவதும் தான் ஆச்சரியமாக இருக்கிறது.

முடிவுரை.

மிர்ஜா குலாம் அஹ்மத் காதியானியும் அவரைப் பின்பற்றியவர்களும் காபிர்கள் என்றும், அவர்களுடன் இஸ்லாமிய மத ஆசார சம்பந்தங்கள் வைத்துக்கொள்வது ஜாயிஸ் இல்லை என்

றும், அவர்களிடம் கொள்வினை, கொடுப்பினை செய்வது கூடாது என்றும், அவர்களால் அறுக்கப்பப்பட்டதைப் புசிப்பது கூடாது என்றும், அவர்களை மஸ்ஜிதில் தொழ அனுமதிக்கலாகாதென்றும், அவர்களின் மையத்துகளை கப்றுஸ்தானில் அடக்க அனுமதிக்கலாகாதென்றும் இந்தியாவிலுள்ள உலமாக்களில் நூற்றுக் கணக்கானவர்கள் ஏகோபித்து பத்வாக் கொடுத்திருக்கின்றனர். இந்த பத்வாவானது "இஸ்தின்காபுல் முஸ்லிமீன் அன்முகாலதத்தில் மிர்ஜாயியீன்" என்ற பெயரால் பிரசுரிக்கபபட்டிருக்கிறது. அமிர்தசரசிலுள்ள அஞ்சுமனே ஹிப்துல் முஸ்லிமீன் சங்கத்திற்கு எழுதினால் இந்த பத்வா கிடைக்கும். இந்த பத்வாவில் வடஇந்திய உலமாக்களில் 288 பெரியார்கள் கையொப்பமிட்டிருக்கின்றனர். ஆக்ரா, ஆள்வார், அமிர்தசரஸ், ஆரா, பதாயூன், புலன்துஷஹ்று, பனாரஸ் (காசி), போப்பால், பிஷாவர், ஜஹ்லம், டில்லி, தேவ்பந்து, டாக்கா, ராவல்பிண்டி, ஸஹரன்பூர், ராய்ப்பூர், சியால்கோட், ஷாஜஹான்பூர், கல்கத்தா, குஜ்ரன்வாலா, குஜராத் (பஞ்சாப்), குர்தாஸ்பூர், லாகூர், லக்நௌ, லூதியானா, மோங்கிர், முல்த்தான், முராத்ஆபாத், ஹஷ்யார்பூர், அலஹபாத், பம்பாய் ஆகிய இடங்களிலுள்ள பிரபல உலமாக்கள் கையொப்பமிட்டிருக்கின்றனர். அவர்களில் முக்கியமானவர்கள்.

மௌலானா கிபாயத்துல்லாஹ் சாகிப் :—இவர் டில்லியிலுள்ள அகில இந்திய ஜமிய்யத்துல் உலமாவின் தலைவர். பிரபல இந்திய மௌலவிகளில் ஒருவராவர். டில்லியிலுள்ள அமீனிய்யா அரபி காலேஜின் முக்கிய ஆசிரியர். முப்தியுமாவார். தற்காலமுள்ள முஸ்லிம் தலைவர்களில் இவரும் ஒருவராகக் கருதப்பட்டு வருகிறார்.

மௌலானா ஸெய்யிது அதாவுல்லாஹ் ஷாஹ்புகாரி —இவர் அமிர்தசரஸ்வாசி. காஷ்மீரத்துமுஸ்லிம்கள் தொந்தரை செய்யப்படுகிறார்கள் என்ற பிரசினைதோன்றிய காலத்திலும் அதில் முன்னணியில் நின்று உழைத்துப் பல கஷ்டநஷ்டங்களுக்கு ஆளானவர்.

தனுவுல்லாஹ் சாகிப் :—இவரை அறிமுகப்படுத்தி வைக்க வேண்டியதில்லை. ஏனெனில், மிர்ஜாகுலாம் அஹ்மது சாதியானி இவருடன்தான் முபாஹலாச்செய்து 7 அல்லது 8 நாட்களுக்குள் காலரா பிளேக் ஆகிய இருவித நோயால் ஏககாலத்தில் பீடிக்கப் பெற்று மடிந்தார். இவர் தமது ஆயுள் முழுதும் ஆரிய சமாஜிகள், கிறிஸ்தவர்கள், ஷியா வகுப்பினர் மிர்ஜாயிகள் ஆகியவர்களை எதிர்த்துப் போராடுவதும் இதுசம்பந்தமான நூல்களை எழுதுவதையுமேதொழிலாகக் கொண்டவர். எல்லா இடங்களிலும் அநேகமாக வெற்றி பெற்றே வந்திருக்கிறார்.

மௌலவி முஹம்மது யஹ்யா சாகிப் :—இவர் போபால்

சமஸ்தானத்து முப்தியாக இருந்தவர். போபால் சமஸ்தானத்து மத இலாக்காவின் காஜீயாகவும் இருக்கிறார்.

மௌலானா மஹ்மூது ஹஸன் றஹ்மத்துல்லாஹி அலைஹி:— இப்பெரியாரை இஸ்லாமிய உலகம் நன்கறியும். இவர் தேவ்பந்தி லுள்ள பிரக்கியாதிபெற்ற அறபி மத்ரஸாவின் தலைமைப் பேராசிரியர். சீன துருக்கிஸ்தான், தென் ஆப்பிரிக்கா, மக்கா, மதீனா முதலிய தூரதேசங்களிலிருந்தெல்லாம் மாணவர்கள் வந்து இவரிடம் கல்வி பயின்றிருக்கின்றனர். டில்லியிலுள்ள தேசிய முஸ்லிம் சர்வ கலாசாலையான "ஜாமிஆமில்லியா இஸ்லாமியா"வுக்கு அஸ்திவாரக் கல் நாட்டி அதனை ஸ்தாபிப்பதற்குக் காரணஸ்தராக இருந்தவர் இவருக்கு "ஷெய்குல்ஹிந்து" என்னும் ஒருபட்டப்பெயர் உண்டு.

மௌலானா அன்வர்ஷாஹ் சாகிப் மர்ஹூமும்:— இப்பெரியார் தேவ்பந்து மத்ரஸாவில் ஹதீதுகளுக்கு ஆசிரியராகவிருந்து அப்பால் ஷெய்குல் ஹிந்து அவர்களுக்குப் பின் அம் மத்ரஸாவுக்குத் தலைமைப் பேராசிரியராகவும் இருந்தவர். இப்பெரியாரின் புகழைப்பற்றி யாம் அதிகம் எழுத விரும்பவில்லை. இப்பெரியார் சுமார் 6, 7 மாதங்களுக்கு முன்னர்தான் தாருல் பனாவை விட்டு தாருல் பகாவை அடைந்தார். அதுசமயம் வட இந்தியப் பத்திரிகையில் வெளிவந்த வியாசங்களைப் படித்தவர்கள் இஸ்லாமிய உலகம் இப் பெரியாரை எவ்வாறு மதித்திருந்தது என்பதை நன்கு தெரிந்துகொள்வர்.

இன்னும் தேவபந்திலுள்ள உஸ்தாது தப்ஸீர் மௌலானா ஷபீர் அஹமது ஸாகிப், மௌலானா அஜீஜுர் ரஹ்மான் ஸாகிப் முப்தி ஆகியவர்களும் உலகப் பிரசித்திபெற்ற உலமாக்களாவார்கள்.

மௌலானா அஷரப் அலி ஸாகிப் தானவீ:— இப் பெரியார் பிரபல சூபியென்பதும் கல்விக் கடல் என்பதும் உலகமறிந்த விஷயமாகும். இப் பெரியாரால் இதுவரை சுமார் 100 கித்தாபுகளேனும் வெளி வந்திருக்கலாம் என்பது மிகையாகாது.

நாம் இதுவரை கூறியதிலிருந்து இவ்வியக்கத்தின் தன்மையையும் கொள்கைகளையும் ஒருவாறு உணர்ந்திருப்பீர்கள். எல்லாம் வல்ல றஹ்மான் நம் அனைவரையும் இத்தகைய கொள்கைகளிற் சிக்கவிடாமல் காப்பாற்றித் தன்னுடைய நேரான வழியில் நடத்துவானாக. ஆமீன்.

வஸல்லல்லாஹு வஸல்லம் அலா கைறிகல்கிஹி
முஹம்மதின் வஅலா ஆலிஹி வஸஹ்பிஹி
அஜ்மயீன்.

Kesari Printing Works, Madras.

முஹம்மதுபந்தர்.

இஃது தஞ்சை டவுனுக்குச் சமீபத்திலுள்ள ஓர் முஸ்லிம் கிராமமாகும். இவ்வூர் அஞ்சுமனே "அன்வாருல் இஸ்லாம்" சங்கம் நிரவப்பட்டு தக்கமுறையில் நடைபெற்று வருகிறது. இதன் முதலாவதாண்டு பூர்த்திவிழா சென்ற 4-8-33-ல் சிறப்பாய் நடைபெற்றகாலை ஜனப் யூ. அஷ்ரப்ஸா ரூவுத்தர் அவர்கள் அக்கழகத்துக்கு வரவேற்புத் தலைவராய் ஏற்பட்டு மகாநாட்டை சிறப்பாய் நடத்திவைத்தார். அதில் தர்மப்பிரபுவான கனம் உ. றஹ்மான் சாஹிப் அவர்கள் இச்சங்கத்தின் போஷகராய்த் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். இதற்கு "ஹிஸ்புல்லாஹ்" அங்கத்தினர் அழைக்கப்பட்டிருந்தனர். இம்மாண்புமிக்க பந்தரிலிருந்துதான் பிரசாரக் கோஷ்டி பிரசாரஞ்செய்யத் துவங்கிற்று. இங்கிருந்தே கூத்தானல்லூர் சன்மார்க்கத் தொண்டர் சபையினரும் இப்புண்ணிய கைங்கரியத்தில் பங்கெடுத்துக்கொண்டனர். இப்பிரசாரத்தால் முஸ்லிம்களுக்கேற்பட்ட பலனுக்கோர் அளவு சொல்லமுடியாது. இப்பிரசாரத்தி லீடுபட்டவர்களுக்கும் இதற்கு பக்கபலமாக இருந்தவர்களுக்கும் இப்புத்தகத்தை அச்சிட உபகாரம்புரிந்த கனவான் அவர்களுக்கும் அல்லாஹ்தஆலா நற்பயனளிப்பானாக.

கிடைக்குமிடம் :—

ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம்,

43-A, போஸ்டாபீஸ் தெரு,

சென்னை.

O. றஹ்மான் சாஹிப்,

ஜெனரல் மர்சண்டு,

ஹெட் ஆபீஸ், No. 2, ரூஸெர்ரோடு, சிங்கப்பூர்.